ஆரம்பக்கல்வி

ELEMENTARY EDUCATION

டிஸம்பர் — 1963

புதிய
அமெரிக்க ஜனாதிபதி
திரு. லிண்டன். பி. ஜான்ஸன்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கம் (முகவூர்) இராஜபாளையம் வட்டம்

தலைவர்

திரு. R. வீராசாமி

காரியதரிசி

திரு. K. குருசாமி முதலியார்

CONNEMARA ... LIBRARY

ஆரம்பக்கல்வி

ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3] [தனி இதழ் 25 ந. பை.

மலர் 25	டிஸம்பர் 1963	இதழ் 12

இந்த நாட்டுக்கு வேண்டாம் அந்த மருத்துவ முறை!

தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் மேல் அவையில் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்காக நான்கு இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன அல்லவா? அதுபோலவே, வேறு பல மாநிலங்களின் மேல் அவைகளிலும் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்காகச் சில குறிப்பிட்ட இடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன அல்லவா? இவ்வாறு ஒதுக்கப்பட்டிருப்பது, தற்போது நடைமுறையில் உள்ள இந்திய அரசியல் திட்டத்தில் அமைந்துள்ள அருமையான ஓர் ஏற்பாடு ஆகும்.

இத்தகைய ஏற்பாடு இனி தேவையில்லை என்றும், இதனை எடுத்துவிடவேண்டும் என்றும் அனைத்திந்தியத் தேர்தல் குழுவினர் இந்தியப் பேரரசுக்கு அண்மையில் ஆய்வுரை கூறியிருப்பதாக நாளிதழ்களில் ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

தேர்தல் குழுவின் இந்த ஆய்வுரையை, தமிழ்நாடு—ஆந்திர மாநிலம்—மேற்கு வங்காளம்—பஞ்சாப் ஆகிய நான்கு மாநில அரசாங்கங்கள் ஏற்றுக்கொண்டிருப்பதாகவும், ஏனைய மாநில அரசாங்கங்களின் கருத்துக்கள் யாவை என்பது தெரிந்த பின்னர் இந்தியப் பேரரசு இந்தத் துறைபற்றி ஒரு முடிவு எடுக்க இருப்பதாகவும் வேறு ஒரு செய்தி வெளியாகியிருக்கிறது.

இந்த இரண்டு செய்திகளும் உண்மையாக இருக்குமானால், ஆசிரியப் பெருமக்களின் உள்ளங்களுக்கு வேதனையையும் வருத்தத்தையும் அளிக்கத்தக்க செய்திகள் இவற்றைவிட வேறு இருக்க முடியாது.

ஆசிரியப் பெருமக்களின் பிரதிநிதிகள் நால்வருக்கு மாநிலச் சட்டமன்றங்களின் மேல் அவைகளில் இடம் தரப்பட்டிருப்பது, மிகவும் இன்றியமையாத ஓர் ஏற்பாடு ஆகும்.

இந்த ஏற்பாடு ஏன் இன்றியமையாதது என்றால், சட்டமன்றங்களின் கீழ் அவைகளில், ஆசிரியர்களில் எவரும், அவர்கள் ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்ற காலத்தில் இடம்பெறவே முடியாது. சட்டமன்றக் கீழ் அவைகளுக்கான பொதுத் தேர்தல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறபோதோ, அல்லது அந்த அவைகளின் சிலசில இடங்களுக்காக இடைத்தேர்தல்கள் நடைபெறுகிறபோதோ, அந்தத் தேர்தல்களில் ஆசிரியர்கள் எவரும் வேட்பாளர்களாகப் போட்டியிடக்கூடாது என்பது, சட்டம். ஆசிரியர்களில் யாரேனும், பொதுத் தேர்தல்களில் போட்டியிட்டு, கீழ்ச் சட்டமன்ற உறுப்பினர்களாக அமர வேண்டும் என்று ஆசைப்பட்டால், அவர்கள் முதலில் தங்கள் ஆசிரியர் பதவியிலிருந்து விலகியாகவேண்டும். நிலைமை இப்படி இருப்பதால் ஆசிரியர்களில் எவரும், ஆசிரியர்களாக இருந்துகொண்டே, எம். எல். ஏ.—க்களாக ஆவது என்பது, இயலாத செயல்.

அதுமட்டும் அல்ல. கீழ்ச் சட்டமன்றத் தேர்தல்களுக்குப் போட்டியிடுகிற உரிமை ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டால்கூட, தேர்தல் களத்தில் ஈடுபட்டு, பிற வேட்பாளர்களோடு போட்டியிட்டு, வெற்றிப் புன்னகையுடன் வீர உலா வருவதற்குத் தேவையான வாய்ப்பும் வசதியும் செல்வமும் செல்வாக்கும் ஆசிரியர்களுக்கு இல்லை என்பது ஊரும் உலகமும் அறிந்த உண்மை; எங்கும் எவரும் மறுக்கவொண்ணாத உண்மை.

ஆம்! ஆசிரியப் பெருமக்களுக்குக் கீழ்ச் சட்டமன்றங்களில் இடம்பெறுவதற்கான உரிமையும் இல்லை—வசதியும் கிடையாது.

ஆனால் அதே நேரத்தில் சட்டமன்றத்தால் நிறைவேற்றப்படுகிற தீர்மானங்களைப்பற்றியும், எடுக்கப்படுகிற முடிவுகளைப்பற்றியும் அவர்களுடைய கருத்துக்கள் யாவை என்பதை அறிந்துகொள்ள வேண்டிய கடமை, சட்டமன்றத்திற்கும் இருக்கிறது; அரசாங்கத்திற்கும் இருக்கிறது. ஏனென்றால், ஆசிரியப் பெருமக்கள், பிற பல தொழில்களில் ஈடுபட்டிருப்பவர்களைப்போல, சில பண்டங்களை அல்லது கருவிகளை உற்பத்தி செய்பவர்கள் அல்ல. அவர்கள், இந்த நாட்டின் எதிர்காலக் குடிமக்களை உருவாக்கும் நிகழ்காலச் சிற்பிகள். உலைக்களத்தில் கருமான் சாதாரண இரும்பைப் பழுக்கக் காய்ச்சித் தட்டித் தீட்டிப் பல்வேறு கருவிகளாக உருவாக்கித் தருவதைப்போல, ஆசிரியர்கள், ஏதும் அறியாத பிஞ்சு நெஞ்சங்களில் அறிவையும் ஆர்வத்தையும் ஊட்டி, உணர்ச்சியையும் உற்சாகத்தையும தட்டி எழுப்பி, சின்னஞ்சிறு சிங்காரச் சிட்டுகளாகப் பள்ளிக்கூடங்களில் நுழைபவர்களைச் சிலபல ஆண்டுகளுக்குப் பிறகு, பொறிஇயல் வல்லுநர்களாகவும், மருத்துவ நிபுணர்களாகவும, வணிகக் கோமான்களாகவும், அலுவலக அதிகாரிகளாகவும், நாடாளும் அமைச்சர்களாகவும், நீதி வழங்கும் நடுவர்களாகவும் மாற்றி அமைப்பவர்கள்.

நாட்டின் முன்னேற்றம், கல்வியின் முன்னேற்றத்தைப் பொறுத்திருக்கிறது என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை.

அந்தக் கல்வியின் முன்னேற்றம் ஆசிரியர்களின் ஆற்றலையும் ஆர்வத்தையும் பொறுத்திருக்கிறது என்பதும் எவராலும் மறுக்க முடியாத உண்மை.

இந்த உண்மையின் வன்மையை நன்றாக அறிந்த காரணத்தால் தான், இந்தியாவின் தலைமை அமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்கள், "ஒரு கல்வி நிலையத்தின் செம்மையும் செழுமையும், அதன் கட்டிடங்களின் உயரத்தையும் அகலத்தையும் கொண்டு அளக்கக்கூடியவை அல்ல. அதன் ஆசிரியர்களின் ஆற்றலையும் ஆர்வத்தையும் கொண்டே மதிப்பிடக்கூடியவை" என்று அடிக்கடி தெரிவித்து வருகிறார்கள்.

ஆசிரியர்கள் திறமையும் தகுதியும் உற்சாகமும் ஊக்கமும் நிறைந்தவர்களாக இருப்பார்களானால், அவர்களால் மாற்றி அமைத்து மறுகோலம் செய்யப்படுகிற மாணவமணிகள் ஏற்றமும் எழுச்சியும் ஆற்றலும் அறிவும் சான்றவர்களாகத் திகழ்வார்கள் என்பது உறுதி அதுபோலவே, இக்கால மாணவர்கள் கடமை உணர்ச்சியும் அறிவின் தெளிவும சிந்தனை ஆற்றலும் படைத்தவர்களாக ஒளிவீசித் திகழ்வார்களானால், நாட்டின் எதிர்காலம்,

பண்பும் பயனும் வன்மையும் வண்மையும் வாய்ந்ததாக விளங்கும் என்பது நிச்சயம்.

இந்த உண்மைகளையெல்லாம் தெள்ளத் தெளிவாக அறிந்த காரணத்தால்தான், இன்றைய இந்திய அரசியல் திட்டத்தைத் தீட்டிய அறிஞர் பெருமக்கள், நாட்டில் நிறைவேற்றப்படுகிற ஒவ்வொரு சட்டமும், ஆசிரியர்களின் கருத்துரையையும் கேட்டு அறிந்த பின்னரே நிறைவேற்றப்பட வேண்டும் என்று எண்ணியிருக்கிறார்கள்.

அந்த உயர்ந்த எண்ணத்தின் விளைவே, மேல் சபைகளில் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ள சிறந்த ஏற்பாடு.

இத்தகைய எழிலும் ஏற்றமும் மிகுந்த ஓர் ஏற்பாட்டைத் தேர்தல் குழுவினர் வேண்டாம் என்று கூறி வெறுத்து ஒதுக்குவது ஏன் என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

''நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ?'' என்று வேதனையோடு கேட்டார் விழுமிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்.

எறியக்கூடாது என்றுதான் கூறுவர் எவரும். ஆனால் எறிந்திடுக எறிந்திடுக என்று புகல்கின்றனராம் தேர்தல் குழுவினர். ஆமாம்—அதுதான் முறை—எறியத்தான் வேண்டும் என்று ஒப்புதல் அளித்துவிட்டனராம் தமிழ்நாட்டு அரசினர். தெரிவிக்கின்றன நாளிதழ்கள்.

ஆகாது இந்தப் போக்கு—கூடாது இந்தக் கொடுமை என்பதை அழுத்தந்திருத்தமாக எடுத்துக் கூறவேண்டியது நல்லறிவாளர்கள் அனைவருடைய கடமை.

அல்லும் பகலும் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானப் பெருமக்கள், நாட்டை முன்னேற்றுவதற்கான நல்ல பல திட்டங்களைத் தீட்டுவதில் தங்கள் முழுச் சிந்தனையையும் செலுத்துகின்ற பொருளாதார வல்லுநர்கள், மொழிகளையும் இலக்கியங்களையும் கற்று உணர்வதிலேயும் கற்றவற்றைப் பிறருக்கு உணர்த்துவதிலேயும் ஈடுபாடு கொண்டுள்ள மொழிப் புலவர்கள், சாகா வரம் பெற்ற சிறந்த கதைகளையும் கட்டுரைகளையும் உருவாக்கித் தரும் எழுத்தாளர்கள், தங்கள் தனித் திறமையாலும் தகுதியாலும் பலவித நோய்களை விரட்டியடிக்கும் மருத்துவர்கள், ஓவியம்—சிற்பம்—நாடகம்—நடனம்—இசை—திரைப்படம் முதலிய கலைத் துறைகள் பலவற்றில் ஈடுபட்டு அவற்றின் வாயிலாக நாட்டின் நிலையை உயர்த்தி வரும் கலைஞர்கள் முதலிய தனித் திறமையாளர்கள், தத்தம் துறைகளிலேயே தங்கள் நேரம்—நினைப்பு—வாய்ப்பு—வசதி அத்தனையையும் பயன்படுத்தி வருபவர்கள். இத்தகைய பெருமக்களுக்குப் பொதுத்தேர்தல்களில் ஈடுபட்டு, பல்லாயிரக்கணக்கான வாக்காளர்

களைச் சந்தித்து, பல வாரங்கள் தேர்தல் வேலையாக அலைந்து திரிவதற்கான வாய்ப்பு இருக்கமுடியாது. அதற்கான நினைப்பும் அவர்களுக்குத் தோன்றமுடியாது. சட்டமன்றத்தில் இடம் பெறுவதற்கான போட்டியில் ஈடுபடுகிற எண்ணம அவர்களுககு எழமுடியாது என்றபோதிலும், அவர்களுடைய மேலான ஆலோசனை சட்டமன்றத்திற்கு நிச்சயமாகத் தேவை. அந்தத் தேவையை நிறைவேற்றுவது தான், மேல்சபைகள் என்கிற அமைப்புகள் நிறுவப்பட்டிருப்பதற்கான தலையாய காரணமாகும். அந்த அவைகளில் ஆசிரியர்களின் பிரதிநிதிகளுக்குச் சில இடங்கள் ஒதுக்கப்பட்டிருபபதும் அதே காரணத்திறகாகத்தான்.

இந்தியாவின் அரசியல் அமைப்பில் மேல் அவைகள் என்கிற நிறுவனங்கள் இருக்கின்ற வரையில் அந்த அவைகளில் ஆசிரியர்களுக்கு இடம் இருக்கவேண்டியது இன்றியமையாதது ஆகும.

ஆசிரியர் தொகுதிகளின் வாக்காளர்களிற் பெரும்பாலோர், பட்டதாரித் தொகுதிகளின் வாக்காளர்களாகவும் இருக்கிறார்கள் என்றும், அப்படி இருப்பதால் ஒரே வாக்காளருக்கு இரண்டு வாக்குகள் கிடைத்துவிடுகின்றன என்றும், இது தேவையற்ற சலுகை என்றும், எனவேதான் ஆசிரியர் தொகுதிகள் என்கிற ஏற்பாடு அகற்றப்படவேண்டும் என்று தேர்தல் குழுவினர் கருதுகின்றனர் என்றும் நாளிதழ்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் காரணத்தில் சிறிதளவும் நியாயம் இருப்பதாகத் தெரியவில்லை ஒரே வாக்காளருக்கு ஒரே தொகுதியில் இரண்டு வாக்குகள் இருக்குமானல், அது தவறு; குற்றம்; ஒழுங்கீனம். ஆனால் வெவ்வேறு தொகுதிகளில் ஒரு வாக்காளருக்கு வெவ்வேறு வாக்குகள் இருபபது எப்படித் தவறாகும்?

பட்டதாரிகள் அனைவரும் ஆசிரியர்களாகவோ, ஆசிரியர்கள் அனைவரும் பட்டதாரிகளாகவோ இருப்பார்களானல், அத்தகைய நிலைமையில், பட்டதாரிகள் தொகுதி, ஆசிரியர்கள் தொகுதி, இரண்டும் இருப்பது தேவைபற்ற செயலாகும். ஆனல் இபபோது உள்ள நிலைமை அதுவா? ஒருக்காலும் இல்லை. பட்டதாரிகள் அனைவரும் ஆசிரியர்கள் அல்லர். அதுபோலவே, ஆசிரியர்கள் யாவரும் பட்டதாரிகளும் அல்லர்.

ஆசிரியர்களில் ஒரு சாரார் பட்டதாரிகளாக இருக்கும் காரணத்தால், எல்லா ஆசிரியர்களும் தங்கள் வாக்குரிமையை இழக்க வேண்டும் என்பது எப்படி நியாயமாகும்?

தேர்தல் குழுவின் 'இரட்டை வாக்குகள்' என்கிற வாதம், நியாயமானது என்று ஏற்றுக்கொண்டால்கூட, அந்த வாதம், பட்ட

தாரிகளாக இருக்கிற ஆசிரியர்களுக்குத்தான் பொருந்துமே தவிர ஏனைய ஆசிரியர்களுக்கு எப்படிப்பொருந்தும்? குறைந்தபட்சம், பட்டதாரிகளாக இல்லாத ஆசிரியர்களுக்காவது ஆசிரியத் தொகுதி இருந்தாக வேண்டும் அல்லவா?

சட்ட மன்ற மேல் அவைகளில் ஆசிரியப் பிரதிநிதிகளாக வீற்றிருப்பவர்கள், பல்வேறு சமயங்களில், பல்வேறு நிலைமைகளைப்பற்றியும் சட்டங்களைப் பற்றியும் தெரிவிக்கிற கருத்துகள், ஆளும் கட்சியின் கருத்துக்களுக்கு மாறாக இருக்கின்றன. எனவேதான் ஆசிரியத்தொகுதிகள் அகற்றப்படுவதைச் சில மாநில அரசுகள் ஏற்றுக்கொள்கின்றன என்று ஒரு கருத்து நிலவுகிறது. ஆளும் கட்சியினர் கொண்டுள்ள கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துக்களை ஒருவர் கொள்வது, குற்றமா? அது ஒரு தவறா? ஒருவர் கொண்டுள்ள கருத்து எவ்வளவுதான் நியாயமானது என்று அவருக்குத் தோன்றினாலும், அது நியாயமற்றது என்று வேறு ஒருவர் கருதினால், அந்தக் கருத்தை அச்சம் தயை தாட்சண்யம் இன்றி எடுத்துக் கூற அவருக்கு உரிமை உண்டு என்பதுதானே ஜனநாயகத்தின் அரிச்சுவடி? மக்கள் மன்றத்தில் பல்வேறு கருத்துக்கள் உலவ விடப்படுவதும், அவற்றின் உயர்வு தாழ்வுகளைப் பற்றி ஒளிவு மறைவு இன்றி கருத்துப்போர் நிகழ்த்தப்படுவதும், இத்தகைய சிந்தனைப் போராட்டங்களின் விளைவாக மக்கள் கருத்துத் தெளிவு பெறுவதும், மக்களாட்சிக் கோட்பாட்டின் அடிப்படைகள் அல்லவா?

நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரே கட்சி—ஒரே தலைவர்—ஒரே கொள்கை—ஒரே நோக்கம் என்பது, சர்வாதிகார நாடுகளிலும் கம்யூனிச நாடுகளிலும் மட்டுமே இருக்கக்கூடிய ஆபத்தான நிலைமை ஆகும். அத்தகைய நிலைமை, ஜனநாயக நாடுகளில் தப்பித் தவறிக்கூட ஏற்படக் கூடாது.

குடிமக்களில் ஒவ்வொருவரும் தம் விருப்பம்போல் சிந்திக்கும் சுதந்தரமும், சிந்தனையின் விளைவாக மலர்கின்ற கருத்துக்களை ஆதரித்துப் பேசுகிற உரிமையும் இல்லாவிட்டால், ஜனநாயக அமைப்பு என்பது, உயிரற்ற உடலாக, மணமற்ற மலராக, சுவையற்ற கனியாக, நீரற்ற குளமாகத்தான் இருக்க முடியும். உயிரும் உணர்ச்சியும் அற்ற அத்தகைய போலி ஜனநாயகத்தையா இந்தியப் பெருநாடு விரும்புகிறது? இல்லவே இல்லை.

எந்தக் கண்ணோட்டத்திலிருந்து பார்த்தாலும் சரி, தற்போது உள்ள ஆசிரியத் தொகுதிகளை அகற்றுவது முறை ஆகாது என்கிற முடிவுக்கே நாம் வர முடியும்.

அரசாங்கத்தார் மேற்கொள்ள வேண்டிய நற் செயல், ஆசிரியர் தொகுதிகளை அகற்றுவது அல்ல; அவற்றைச் சீர்திருத்திச் செம்மைப்படுத்துவதே ஆகும்.

தற்போதுள்ள அமைப்பு முறைப்படி, ஆசிரியர் தொகுதிகளுக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை, உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் ஆகிய இரு சாராருக்கு மட்டுமே இருக்கின்றது. ஆரம்ப ஆசிரியர்கட்கு அந்த உரிமை இல்லை.

ஆசிரியர்களில் ஒரு பிரிவினருக்கு மட்டும் உரிமையை அளித்து விட்டு மற்றொரு சாராருக்கு அதனை மறுப்பது பொருத்தமற்ற செயல் என்பதை விளக்குவதற்கு விவாதம் தேவையில்லை. கைப் புண்ணைக் காண்பதற்குக் கண்ணாடியா தேவை?

கல்வி என்னும் கட்டிடத்தின் மேற்கூரையாகத் திகழ்வது கல்லூரிக் கல்வி என்றால், அதன் சுவர்கள்—கதவுகள்—சாளரங்கள் போல் விளங்குவது உயர்நிலைப் பள்ளிக் கல்வி. ஆனால் அந்த இனிய கட்டிடத்தின் சிறந்த அடிப்படையாகத் திகழ்வது, ஆரம்பக் கல்வி தான். கூரை வேய்பவர்களுக்கும், சுவர் எழுப்புபவர்களுக்கும் மட்டும் வாக்குரிமை உண்டு, கடைகால் போடுபவர்களுக்கு அது இல்லை என்று இயம்புவது, எவ்வகையில் சால்புடையதாகும்?

ஆகவே ஆரம்ப ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கப்படுவது உடனடியாகச் செய்யப்படவேண்டிய நற்செயலாகும்.

ஆரம்ப ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிக்கிற அதே சமயத்தில், ஆசிரியத் தொகுதியை மூன்று பகுதிகளாகப் பிரித்து, ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒரு தொகுதி, உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு தொகுதி, கல்லூரி ஆசிரியர்களுக்கு ஒரு தொகுதி என்று தனித்தனியே அமைத்துவிட வேண்டும். ஏனெனில் இந்த மூவகை ஆசிரியர்களின் நிலைமைகளும் மனக் குறைகளும் பிரச்சினைகளும் வெவ்வேறு பட்டவை. அவரவர்களுடைய தனிப் பிரதிநிதிகளால்தான் அவரவர்களுடைய நிலைமைகளையும் கருத்துக்களையும் செம்மையான முறையில் எடுத்துக்காட்ட இயலும்.

இந்த இரண்டு திருத்தங்களை இணைத்து ஆசிரியர் தொகுதிகளைச் சீரும் சிறப்பும் பொருந்தியவையாக மாற்றி அமைப்பது தான் ஆட்சியாளர்களுடைய கடமையே தவிர, அந்தத் தொகுதிகளையே வெட்டி எறிந்து விடுவது, அறநெறியும் அல்ல; அறிவுடைமையும் ஆகாது.

தலையை வலிக்கிறது என்றால் தலையையே வெட்டி எறிகின்ற மருத்துவ முறை செஞ்சீனா போன்ற சர்வாதிகார நாடுகளுக்கு ஏற்றம் உடையதாக இருக்கலாம். இந்தியா ஒரு ஜனநாயக நாடு. இத்தகைய நாட்டுக்கு வேண்டாம் அத்தகைய மருத்துவமுறை!

யு. எஸ். நோக்கங்கள் :
ஜனாதிபதி ஜான்ஸன் உரை

உயிர்த் தியாகி ஜான் எப். கென்னடி விட்டுச் சென்ற பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி லிண்டன் பி. ஜான்ஸன் நவம்பர் 27-ந் தேதி அமெரிக்கச் சட்டமன்றத்தின் இரு சபைகளும் கூடிய பேரவையில் பேசும்போது தமது ஆட்சியின் நோக்கங்கள் இன்னின்ன என்று பின்வரும் வார்த்தைகளில் எடுத்துரைத்தார் :—

சபாநாயகர் அவர்களே, தலைவர் அவர்களே, பிரதிநிதி சபை உறுப்பினர்களே, செனட் சபை உறுப்பினர்களே, என் நாட்டு மக்களே.

இன்று நான் இந்த இடத்தில் நில்லாமலிருக்க என்னிடமுள்ள தனைத்தையும் மகிழ்ச்சியுடன் தியாகம் செய்திருப்பேன்.

நமது காலத்தின் மிகப் பெரிய தலைவர் நமது காலத்தின் மிக நீசமான செய்கையின் காரணமாக மாண்டுவிட்டார். இன்று, ஜான் பிட்ஸ்ஜெரால்டு கென்னடி என்றென்றும் நிலைத்திருக்கும் தம்முடைய வார்த்தைகளிலும் தம்முடைய பணிகளிலும் இருந்து வருகிறார். மக்கள் குலத்தின் உள்ளங்களிலும் நினைவுகளிலும் அவர் வாழ்கிறார். தமது நாட்டு மக்களின் இதயங்களில் அவர் வீற்றிருக்கிறார்.

எவ்வளவு பெரிய நஷ்டம் அடைந்துள்ளோம் என்ற நமது உணர்ச்சியை வெளியிடுவதற்கு எந்த வார்த்தையும் போதிய அளவு துக்கத்தைக் குறிப்பிடுவதாக இல்லை. அவர் தொடங்கி வைத்த அமெரிக்காவின் முன்னேற்றப் பணியை நாம் தொடர்ந்து செய்வோம் என்ற நமது உறுதியை எடுத்துரைப்பதற்கு எந்த வார்த்தையும் போதிய வன்மையுள்ளதாக இல்லை.

அகண்டமாக இருக்கும் விண்வெளியை வெற்றி கொள்ளும் கனவு—அட்லாண்டிக் கடலுக்கப்பாலுள்ள நாடுகளுடன் கூட்டுறவு கொள்ளும் கனவு—பசிபிக் கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளுடனும் உறவு கொள்ளும் கனவு—வளர்ச்சிக் குறைவான நாடுகளுக்கு அமைதிப் படைகளைப் பணிசெய்ய அனுப்பும் கனவு—நம் குழந்தைகள் அனைவருக்கும் கல்வி வழங்குவது பற்றிய கனவு—வேலை தேடும், வேலை அவசியமாக இருக்கும் அனைவருக்கும் வேலை வழங்குவது பற்றிய கனவு—வயதானவர்களைப் பராமரிப்பதுபற்றிய கனவு—மனநோயை ஒழித்துக் கட்டும் கனவு—எல்லாவற்றிற்கும் மேலாக, எத்தகைய இனத்தையும் நிறத்தையும் சேர்ந்தவர்களாயினும் சரி, எல்லா அமெரிக்கர்

களுக்கும் சம உரிமைகள் வழங்குவது பற்றிய கனவு—இக் கனவுகளும் இன்னும் மற்ற அமெரிக்கக் கனவுகளும், அவருடைய ஊக்கத்தாலும், ஈடுபாட்டினாலும் உயிர்பெற்றன.

இனி இன்று, அவர் இவ்வளவு மேன்மையாகக் கடைப்பிடித்து வந்த கொள்கைகளும், இலட்சியங்களும செயலில திறம்பட உருவாகவேண்டும்; உருவாகியே தீரும்.

ஜான் கென்னடியின் தலைமையில் இந்த நாடு அமைதியை நாடும் தைரியம் தனக்கு உண்டு என்பதையும், போர் வந்தாலும் உறுதி குலையாது என்பதையும் விளக்கிக் காட்டியது. அமைதியையும் சுதந்திரத்தையும் நாடுவோருக்கு நாம நல்ல நண்பர்கள், நம்பத் தகுந்த நண்பர்கள் என்பதை நாம் நிரூபித்துள்ளோம். அமைதிப் பாதையை நிராகரிப்பவர்களுக்கும், நமக்காவது நமது நேச நாடுகளுக்காவது கொடுங்கோன்மைத் தளையைப் பூட்ட முயலுவோருக்கும் நாம், பயங்கரமான எதிரிகளாக இருக்கமுடியும் என்பதையும் நாம் காட்டியுள்ளோம்.

அமைதிக்காக உழைப்போம்

தெற்கு வியட்நாம் முதல் மேற்கு பெர்லின் வரை இந்த நாடு தான் ஏற்றுக்கொண்டிருக்கும் பொறுப்புக்களை நிறைவேற்றும் அமைதியை நாடும் பணியில் நாம் ஓயப்போவதில்லை. நம்முடன் கருத்து வேற்றுமையுள்ளவர்களுடன்கூட நாம ஒற்றுமை காணும முயற்சியில் திறமை உடையவர்களாக இருப்போம். நமமுடன் பொது இலட்சியத்தில் சேர்ந்து ஈடுபட்டிருப்பவர்கள் பால் நாம் தாராளமாகவும் விசுவாசமாகவும் இருப்போம்.

இந்தக் காலத்தில், அமைதியில் தோற்றவர்கள் என்றோ, போரில் வெற்றி பெற்றவர்கள் என்றோ யாரும் இருக்கமுடியாது. இந்த நிலையில் நாட்டு வலிமையோடு அடக்கமும் அவசியம் என்பதை உணரவேண்டும். வலிமையை எதிர்த்து நிற்கவும் வலிமையை அடக்கி வைத்துக் கொள்ளவும் ஒரே சமயத்தில் நாம் தயாராக இருக்கவேண்டும். தேசிய நலனைப் பாதுகாக்கவும் பொது நலனுக்காகப் பேச்சுவார்த்தை நடத்தவும் நாம் தயாராக இருக்க வேண்டும். இந்த வழியைத்தான் நாம் தொடர்ந்து பின்பற்றப் போகிறோம். நமது தைரியத்தைச் சோதிப்பவர்கள் அது அபாரமாக இருக்கிறது என்பதைக் கண்டு கொள்வர். நமது நட்பை நாடுபவர்கள் அது கவுரவ மிக்கதாக இருக்கிறது என்பதைக் கண்டு கொள்வர். வலியார் தம் வலிமையைப் பயன்படுத்துவதில் நியாயமாக நடந்து கொள்ள முடியும் என்பதையும், நீதியைப் பாதுகாப்பதில் நியாயவான்கள் வலிமையுடன் இருக்க முடியும் என்பதையும் நாம் மீண்டும் எடுத்துக் காட்டுவோம்.

நாம் தனிச் சலுகைகள் ஏதும் வழங்கப்போவதில்லை; தொல்லைகள் ஏதும் சுமத்தப் போவதில்லை என்பதையும் எல்லோரும் அறிந்து கொள்ளட்டும். மற்ற நாடுகளிலும், நமது நாட்டிலும் வறுமை, துயரம், நோய், அறியாமை ஆகியவற்றை எதிர்த்து நாம் தொடர்ந்து போராடுவோம்.

நாட்டில் உள்ள அனைவருக்கும்--ஒரு பகுதியினருக்கோ, ஒரு சாராருக்கோ, ஒரு பிரிவினருக்கோ அல்லாமல் எல்லா அமெரிக்கர்களுக்கும் நாம் பணி செய்வோம்; இவர்கள் ஐக்கிய அமெரிக்க நாட்டு மக்கள். ஐக்கிய நோக்கம் உடைய ஐக்கியமுள்ள மக்கள்.

நாட்டு ஒற்றுமை

நம்முடைய அமெரிக்க ஐக்கியம் கருத்து ஒற்றுமையைச் சார்ந்ததல்ல. நமக்குள் கருத்து வேற்றுமைகள் இருக்கின்றன; ஆனால் இப்பொழுதும், முன் காலத்தைப் போலவே, இந்த வேற்றுமைகளிலிருந்து பலவீனத்தையல்ல, வலிமையை நாம் பெற முடியும்; மனக்கசப்பையல்ல அறிவைப் பெற முடியும். மக்கள் என்ற முறையிலும், அரசாங்கம் என்ற முறையிலும், விவேகமான, நியாயமான அறிவாற்றல் மிக்க வகையில் தீட்டப்பட்ட ஆக்கமான திட்டமொன்றில் நாம் இணைந்து செயலாற்ற முடியும்.

32 ஆண்டுகளாக "காப்பிட்டால் குன்று" (சட்டமன்ற மாளிகை) எனது இல்லமாக இருந்து வந்துள்ளது. பெருமையடையக்கூடிய பல சந்தர்ப்பங்களை நான் உங்களுடன் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். அமெரிக்கச் சட்டமன்றத்தின் செயலாற்றும் திறமையில் -- எத்தகைய நெருக்கடியையும் சமாளிக்க அதற்குள்ள திறமையில்--நமது வேற்றுமைகளிலிருந்து செயலாற்றுவதற்குப் பலமான தேசீயத் திட்டங்களை வடித்துக் கொள்ளும் திறமையில்---காணும் பெருமையே அது.

கொலையாளியின் குண்டொன்று ஜனாதிபதிப் பதவியின் மலைப்பு மிக்க பெரும் பாரத்தை என் மீது சுமத்திவிட்டது. உங்களுடைய உதவி எனக்குத் தேவை என்பதைக் கூறவே நான் இன்று இங்கு வந்திருக்கிறேன். இந்தச் சுமையை என்னால் தன்னந்தனியாகத் தாங்க முடியாது. எல்லா அமெரிக்கரின் உதவியும், அமெரிக்கா முழுவதன் உதவியும் எனக்குத் தேவை. இந்த நாடு பேரதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது. இந்த நெருக்கடியான நேரத்தில் உறுதியற்ற நிலை, ஐயப்பாடு, தாமதம் ஆகியவற்றை ஒழித்துக் கட்டுவதும், உறுதியான செயலாற்றும் திறமை படைத்தவர் நாம் என்பதைக் காட்டுவதும் அமெரிக்க அரசாங்கம் என்ற முறையில் நமக்கு-உங்களுக்கும் எனக்கும்--கடமையாகும். நமது தலைவர் கொடுமையாக நம்மிட

மிருந்து பறிக்கப்பட்டுள்ளார். இதிலிருந்து நாம் பலவீனத்தை அல்ல, வலிமையைப் பெறுவோம்; நாம் செயலாற்ற முடியும், செயலாற்றுவோம். இப்பொழுதே செயலாற்றுவோம் என்பதைக் காட்டுவதும் நமது கடமையாகும்.

ஐ.நா.வுக்கு ஆதரவு

ஐ.நா.வைச் சிறிதுகூடப் பிறழாமல் ஆதரிப்பதற்கும்; நமது நேசநாடுகள் சம்பந்தமாக நாம் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புகளைக் கவுரமாகவும் உறுதியுடனும் நிறைவேற்றுவதற்கும்; எதற்கும் நிகரான முதல்தர ராணுவ வலிமை நிலைத்து நிற்பதற்கும்; டாலரின் வலிமையையும் ஸ்திர நிலையையும் பாதுகாப்பதற்கும்; நமது வெளிநாட்டு வர்த்தக விஸ்தரிப்புக்கும்; இந்த அமெரிக்கக் கண்டத்தின் முன்னேற்றத்திற்கான நமது பரஸ்பர உதவித் திட்டங்களை வலுப்படுத்துவதற்கும் இந்த அரசாங்கத்தை நான் மீண்டும் பணித்துக் கொள்கிறேன் என்பதை மக்கள் அரசின் இந்த மன்றத்திலிருந்து உலகம் அனைத்தும் அறியுமாக; இதுபற்றி யாருக்கும் தவறான எண்ணம் வேண்டாம்.

1961 ஜனவரி 20-ம் தேதி ஜான் எப். கென்னடி தமது நாட்டு மக்களிடம் சொன்னதாவது: நமது நாட்டுப் பணி "முதல் 1000 நாட்களில் நிறைவேறி விடாது; இந்த ஆட்சியின் காலத்தில்கூட நிறைவேறி விடாது. ஒருவேளை இவ்வுலகத்தில் நமது ஆயுட் காலத்தில் கூட நிறைவேறிவிட மாட்டாது. ஆயினும் நாம் தொடங்கிவைப்போம்" என்றார் அவர்.

தொடங்கி வைத்ததை நாம் தொடர்ந்து செய்வோம் என்பது தான் இன்று நாம் மீண்டும் உறுதி பூணுகையில் நான் எனது நாட்டு மக்கள் அனைவருக்கும் சொல்லக்கூடியது.

இதுதான் நமது அறைகூவல்—தயங்குவதற்கும் திரும்புவதற்கும் இது நேரமல்ல. இடுக்கண் ஏற்பட்டதை மீண்டும் நினைத்து நிற்கும் நேரமல்ல. மாறாக, நாம் தொடர்ந்து பணியாற்ற வேண்டும்; வரலாறு நமக்குப் பணித்துள்ள வருங்காலக் கடமைகளை நாம் நிறைவேற்ற வேண்டும். நமக்கு உடனடியாக இருக்கும் கடமைகள் இங்கு இந்த மசோதாவில்தான் இருக்கிறது.

குடியுரிமைகள் மசோதா

முதலாவதாக குடியுரிமைகள் மசோதாவை விரைவில் நிறைவேற்றுவதைவிட வேறு புகழ் உரையும் இரங்கல் உரையும் ஒன்றும் ஜனாதிபதி கென்னடியின் நினைவுக்குச் சிறந்த அஞ்சலி ஆகாது. இந்த மசோதாவுக்காகத்தான் அவர் நீண்ட காலம் போராடி வந்தார். சம உரிமைகள்பற்றி நாம் வேண்டியமட்டும் இந்த நாட்டில் பேசியாயிற்று

100 ஆண்டுகளாக அதற்கு மேலாகவும்கூட நாம் பேசி வந்திருக்கிறோம். அடுத்த அத்தியாயம் எழுதவேண்டிய காலம் இப்பொழுது வந்து விட்டது. அதுதான் சட்டப் புத்தகத்தில் எழுதுவது.

1957-லும் மீண்டும் 1960-லும் நான் வலியுறுத்தியதைப் போல் இப்பொழுதும் உங்களை நான் குடி உரிமைகள் சட்டத்தை இயற்றும்படி மீண்டும் வற்புறுத்துகிறேன். இதனால், இனம் அல்லது நிறம் காரணத்தால் காட்டப்படும் இன வேற்றுமையையும் கொடுமையையும் துளி கூட அடையாளம் இல்லாமலே நாம் இந்த நாட்டிலிருந்து ஒழித்துக்கட்டி முன்னேற முடியும். இதைவிட இந்த நாட்டிற்கு—உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும் சரி, அதிக வலிமை தரக்கூடியது வேறு எதுவும் இல்லை.

இரண்டாவதாக வரி [1]மசோதாவை விரைவில் நிறைவேற்றி வைப்பதை விட ஜனாதிபதி கென்னடியின் பணியை நாம் சிறந்த முறையில் தொடர்ந்து மேற்கொள்ளும் செய்கை வேறு எதுவும் இருக்க முடியாது. இந்த மசோதாவுக்கு அவர் இந்த ஆண்டு முழுவதும் பாடுபட்டார். இந்த மசோதா நமது தேசிய வருமானத்தையும் மத்திய அரசாங்க வருமானத்தையும் அதிகரிக்கும் நோக்கம் கொண்டது; பொருளாதார மந்தம் ஏற்படாமல் பாதுகாப்பது. இந்த மசோதா தாமதமின்றி நிறைவேற்றப்பட்டால், இப்பொழுது வேலை உள்ளவர்களுக்கு அதிக பந்தோபஸ்து ஏற்படும். வேலையில்லாதவர்களுக்கு அதிக வேலை கிட்டும். நமது பொருளாதாரத்திற்குத் தூண்டுகோலாகவும் இருக்கும்.

காலங்கடத்தலாகாது

சுருக்கமாகக் கூறுமிடத்து, காலம் தாழ்த்துவதற்கு இது நேரமல்ல. செயலாற்ற வேண்டிய காலமிது. அமெரிக்காவின் ஒவ்வொரு இல்லத்திலும், மூலை முடுக்கிலும் கல்விச் சுடர் பரப்பும் மசோதாவை, இன்னும் தாமதமின்றி நிறைவேற்றி வைக்க வலிமையான முன்னோக்குள்ள செயலில் ஈடுபட வேண்டிய நேரம் இது; இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குவதற்கு வலிமையான முன்னோக்குள்ள செயலில் ஈடுபட வேண்டிய நேரம் இது; நிறைவேறாமல் இருக்கும் வெளிநாட்டு உதவி மசோதாவை நிறைவேற்றி இந்த அமெரிக்கக் கண்டத்திற்கும் உலகத்திற்கும் நாம் ஏற்றுள்ள பொறுப்புகளை நாம் கைவிடவில்லை என்பதையும் வெளி விவகாரங்களை நடத்துவதில் நிர்வாகத்திற்கு இருக்கும் நீக்குப்போக்குத் தன்மையை நாம் கைவிடவில்லை என்பதையும் காட்ட வலிமையான முன்னோக்குள்ள செயலில் ஈடுபட வேண்டிய நேரம் இது; எஞ்சியிருக்

கும் மானியங்கள் மசோதாக்களை நிறைவேற்றுவதிலும் வலிமையான, உடனடியான முன்னோக்குள்ள செயலில் ஈடுபட வேண்டிய நேரம் இது.

இந்தப் புதிய செயலாற்றும் உணர்ச்சியில் நிர்வாகத் துறையின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் சட்ட மன்றம் எதிர்பார்க்கலாம். குறிப்பாக, உங்கள் அரசாங்கத்தின் செலவுகள், மிகச் சிக்கனமாகவும் செட்டாகவும் இருக்கும் என்பதற்கு நான் உறுதியளிக்கிறேன். அரசாங்கம் செலவிடும் ஒரு டாலருக்கு அதற்குரிய பெறுமானத்தை அது பெற வேண்டுமென்று நான் வற்புறுத்துவேன். சிக்கனத்துக்கும் செட்டுக்கும் அரசாங்கம் ஒரு எடுத்துக்காட்டாக இருக்கும். இதற்கு, நிறைவேற்றப் படாமல் இருக்கும் தேவைகள் நிறைவேற்றப் படமாட்டா என்றோ, நாம் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்புக்களை நாம் நிறைவேற்றமாட்டோம் என்றோ, பொருள் அல்ல. இரண்டையும் நாம் செய்வோம்.

உறுதி கூறல்

சட்ட மன்றத்தின் இரு சபைகளிலும் பணியாற்றியுள்ளவன் என்ற முறையில் நான் சட்டமியற்றும் துறைக்குச் சுதந்திரமும் நாணயமும் அவசியம் என்று உறுதியாக நம்புகிறவன். இதை நான் எப்பொழுதும் மதித்து நடப்பேன் என்று உங்களுக்கு வாக்குறுதி தருகிறேன். இது எனது இரத்தத்தில் ஊறியிருக்கிறது. நமது நாட்டின் இயல்பான கருத்து வேற்றுமைகள் இருந்தாலும்கூட, செயலாற்ற—விவேகமாகச் செயலாற்ற—சுறுசுறுப்பாகச் செயலாற்ற—தேவை ஏற்படும்கால் வேகமாகச் செயலாற்றச் சட்டமன்றத்திற்குத் திறமையும் ஆற்றலும் உண்டு என்பதிலும் எனக்கு இதே உறுதியான நம்பிக்கை இருக்கிறது. அவ்வாறு செயலாற்றுவது இங்கு தேவை; இப்பொழுதே தேவை; உங்கள் உதவியைக் கோருகிறேன்.

துக்கத்தோடு நாம் இங்கு சந்தித்துள்ளோம்; மீண்டும் நம்மைப் பணித்துக்கொண்டு, அதிக ஊக்கமுள்ளவர்களாக நாம் சந்திப்போமாக; செயலிலும், சகிப்புத் தன்மையிலும், பரஸ்பர உணர்விலும் சந்திப்போமாக. ஜான் கென்னடியின் மரணம் அவருடைய வாழ்க்கை எதை உணர்த்தியதோ, அதைத்தான் உத்திரவிடுகிறது. அமெரிக்கா முன்னேற வேண்டுமென்பதுதான் அது. எல்லா இனங்களையும் சமயங்களையும் அரசியல் கோட்பாடுகளையும் சேர்ந்த அமெரிக்கர் அனைவரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்வதற்கும் மதித்து நடந்துகொள்வதற்கும் காலம் வந்துவிட்டது. பகைமை, பழி, பலாத்காரம் ஆகியவற்றைப் போதிப்பதையும், பரப்புவதையும் நாம் ஒழிப்போமாக. தீவிர இடதுசாரி வெறியர்கள், தீவிர

(49-ம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதியாக ஜான்ஸன் பதவியேற்பு

அதிகாரம் மாற்றம்

லிண்டன் பேன்ஸ் ஜான்ஸன் அமெரிக்காவின் 36—வது ஜனாதிபதியாக 1962 நவம்பர் 22—ம் தேதியன்று, (ஜான் எப். கென்னடி படுகொலை செய்யப்பட்ட சில மணி நேரங்களில) பதவி யேற்றார். கென்னடியின் சடலத்துடன் ஜனாதிபதியின் விமானம், டெகஸாஸ் மாநிலத்தில் டல்லாஸ் நகரிலிருந்து புறப்பட்டவுடன் அந்த விமானத்திலேயே அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்விக்கப்பட்டது. பெடரல் நீதிபதி ஸாரா டி. ஹியூஸ் அம்மையார் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மிக எளிய பதவிப் பிரமாணம் இது. பிரமாணம் எடுத்துக் கொண்டதும் ஜனாதிபதி ஜான்ஸன் அமெரிக்க மக்களுக்குக் கூறியதாவது :— "ஜனாதிபதியின் கடமைகளை நிறைவேற்றுவதில் என்னால் இயன்றதை நான் செய்வேன்."

சிக்கல்கள், வில்லங்கம் ஏது மின்றி அதிகார மாற்றம் நடைபெற்றது. அமெரிக்க அரசியல் சட்டத்தின்கீழ் ஜனாதிபதியின் அதிகாரம், உரிமைகள், கடமைகள் முதலியன உடனேயே துணை ஜனாதிபதிக்கு மாறிவிடுகின்றன.

ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் மரணமடைந்துவிட்டால், அப்பொழுது ஜனாதிபதிப் பதவியை யார் ஏற்க வேண்டுமென்பதைத் தெளிவுபடுத்தி யு. எஸ். சட்டமன்றம் 1947ம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றியது அதன்படி கீழ்க்கண்ட வரிசைப்படி கீழ்க்கண்ட அதிகாரிகள் ஜனாதிபதிப் பதவியை ஏற்கலாம்:

1. பிரதிநிதி சபையின் சபாநாயகர் (இப்பொழுது சபாநாயகர் ஜான் டபிள்யு. மக்கார்மிக்)
2. செனட் சபை தற்காலிகத் தலைவர் (கார்ல் ஹேடன்)
3. வெளிவிவகார இலாகாக் காரியதரிசி (டீன் ரஸ்க்)
4 நிதி இலாகாக் காரியதரிசி (ஸி. டக்ளஸ் டில்லன்)
5. பாதுகாப்பு இலாகாக் காரியதரிசி (ராபர்ட் மக்னமாரா)
6. அட்டார்னி ஜெனரல் (ராபர்ட் எப். கென்னடி)
7. போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் (ஜான் குரோனோஸ்கி)
8. உள்துறை இலாகாக் காரியதரிசி (ஸ்டீவர்ட் உடால்)
9 வேளாண்மை இலாகாக் காரியதரிசி (ஆர்வில் பிரீமன்)
10. வர்த்தக இலாகாக் காரிய தரிசி (லூதர் ஹாட்ஜெஸ்)

11. தொழிலாளர் நல இலாகாக் காரியதரிசி (வில்லியம் விர்ட்ஸ்).

லிண்டன் பி. ஜான்ஸன் அமெரிக்காவின் 36-வது ஜனாதிபதி; அரசாங்கத்தின் நிர்வாகத் துறையிலும் சட்டமியற்றும் துறையிலும் அனுபவம் மிக்கவர்.

ஜான் எப். கென்னடியின் கீழ் ஜான்ஸன் 1961-ம் ஆண்டிலிருந்து சென்ற மாதத்தில் கென்னடி படுகொலை செய்யப்பட்டது வரை துணை ஜனாதிபதியாக இருந்தார்.

துணை ஜனாதிபதி என்ற முறையில் ஜான்ஸன், உலகம் முழுவதிலும் விரிவாகச் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். 1961-ல் அவர் இந்தியாவுக்கு வந்திருந்தபோது அமெரிக்கர்கள் இந்தியாவின் நட்பைப் பெற்றிருப்பதில் பெருமை யடைகின்றனர் என்று அறிவித்தார். "எங்கள் ஜனாதிபதி (கென்னடி) எல்லைக் கடல பல தாண்டி இங்கு வந்து இந்த மாபெரும் நாட்டின் மக்களுக்கு நாங்கள் பற்றுறுதியான நண்பர்கள் என்று தெரிவிக்கும்படிக் கட்டளையிட்டிருக்கிறார்...நாம் ஒருவரை ஒருவர் நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். தெரிந்து கொண்டால் சிறந்த முறையில் சேர்ந்து பணியாற்றலாம் என்றார் ஜான்ஸன் இந்தியாவில் இரண்டு நாட்கள் தங்கியிருந்த போது "இந்த அற்புதமான நாடு" அவருக்கு அளித்த உளம்கனிந்த வரவேற்பில அவர் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். என் உயிர் உள்ளளவும் இதை நான் என் நினைவில் போற்றி வருவேன் என்றார் அவர் மேலும்.

ஜனாதிபதி ஜான்ஸன், டெக்ஸாஸ் மாநிலத்தில் ஜான்ஸன் ஸிட்டி என்ற நகருக்கு அருகில் 1908-ம் ஆண்டு பிறந்தார். (இந்த நகரை அவருடைய பாட்டனார் தோற்றுவித்தார். அவர் பெயரைத் தாங்கியிருக்கிறது) ஜான்ஸன் 1930-ம் ஆண்டில் தென் மேற்கு டெக்ஸாஸ் அரசாங்க ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பட்டம் பெற்றார். அதற்குப் பிறகு வாஷிங்டனில் ஜார்ஜ் டவுன் பல்கலைக் கழகத்தில் சட்டம் படித்தார்.

1935-ம் ஆண்டிலிருந்து அவர் பொது வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபடலானார். அந்த ஆண்டில் பிராங்க்ளின் டி ரூஸ்வெல்ட், அவரை தேசிய இளைஞர் நிர்வாகத்திற்கு டெக்ஸாஸ் மாநிலத்தின் டைரக்டராக நியமித்தார்.

1937-ம் ஆண்டில் பிரதிநிதிகள் சபைக்கும் ஜான்ஸன் தேர்ந்தெடுக்கப்பட்டார் 1953 முதல் 1960 வரை அவர் செனட் சபையில் பெரும்பான்மைக் கட்சித் தலைவராக இருக்கையில், பல விதக் கருத்துக்களையுடைய சகாக்களைச் சமாளிப்பதில் திறமைமிக்கவர் என்ற பெரும் பாராட்டுதலைப் பெற்றார்.

1960 நவம்பர் 8-ந் தேதி கென்னடியின் கீழ் துணை ஜனாதி

பதியாகப் பணியாற்ற ஜான்ஸன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

செனட்டர் என்ற முறையில், விண்வெளி ஆராய்ச்சி ஐ. நா. எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு விஷயம் என்று முதன் முதலாகக் கூறியவர்களில் ஒருவர் ஜான்ஸன். 1958-ம் ஆண்டு ஜனவரி 14-ந் தேதி அவர் நிகழ்த்திய உரையில் கீழ்க்கண்டவாறு கூறினார். "விண்வெளியின் வியாபகம், பூமியில் நமது நாடுகளுக்கிடையே இருக்கும் வேற்றுமைகளை மிகச் சிறியதாக்கிவிட்டது. அமைதிக்கு விண்வெளியை ஒரு அரணாக நாம் செய்ய வேண்டுமானால் எல்லோரும் இந்த முயற்சியில் கட்டாயம் ஈடுபடலாம்; ஈடுபட வேண்டும்."

செனட் சபையில் அவர் ஆற்றியுள்ள பணி, சர்வதேச அமைதியையும் நல்லெண்ணத்தையும் வளர்க்க அவர் தம்மைப் பணித்துக் கொண்டுள்ளார் என்பதற்குச் சான்றாகும். முதன் முதலாக 1948-ல் அவர் செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு, மற்ற நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி அளிக்க ஜனாதிபதி ட்ரூமன் வகுத்த நான்கு அம்சத் திட்டத்தை பலமாக ஆதரித்தார்.

இதற்கு முன் 1947-ல் பிரதிநிதி சபையின் உறுப்பினர் என்ற முறையில் ஜான்ஸன், மார்ஷல் திட்ட மானியங்களை ஆதரித்தார். இரண்டாவது உலகப் போருக்குப் பிறகு, மேற்கு ஐரோப்பாவின் பொருளாதார மீட்சிக்காக வகுக்கப்பட்ட திட்டம்தான் மார்ஷல் திட்டம் எனப்படுவது.

சட்ட மன்றத்தில் மிகக் கடுமையாக உழைக்கும் உறுப்பினர்களில் ஒருவர் என்ற பிரசித்தி பெற்றவர் ஜான்ஸன். 1955 ஜூலையில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது. இதனால் பல மாதங்களுக்கு அவர் வேலை செய்ய முடியாமல் போயிற்று. நோயிலிருந்து முழுவதும் குணமடைந்ததும், அதிக சுறு சுறுப்புடன் தமது செனட் கடமைகளை அவர் ஆற்றி வந்தார்.

ஜனாதிபதி ஜான்ஸன் 1943-ல் கிளாடியா டெய்லர் என்ற பெண் மணியை மணந்தார். "லேடி பேர்டு" என்ற செல்லப் பெயர் இந்த அம்மையாருக்கு உண்டு. ஜான்ஸன் தம்பதிகளுக்கு இரண்டு பெண்கள் இருக்கின்றனர்; ஒருவர் பெயர் லிண்டா பேர்ட், மற்றவர் பெயர் லூஸி பேன்ஸ் ஜான்ஸன். சட்ட மன்றத்தில் முதல் தடவை பதவி கிடைத்ததிலிருந்தே திருமதி ஜான்ஸன் தமது கணவரின் தேர்தல் இயக்கத்தில் ஈடுபட்டு வந்திருக்கிறார். அவர் தொழிலிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இளைஞராக இருக்கையில், ஜனாதிபதி ஜான்ஸன் கல்லூரியில் படிப்பதற்கு பணத்திற்காக வாயில்காப்போனாக வேலை பார்த்தார். 1930-ல் பட்டம் பெற்ற

(58-ம் பக்கம் பார்க்க)

சங்கம் மருவிய புதுமைச் சிறு கதை!

இணைப்பு

(தாமரைக்கண்ணன்)

"அப்பா......!"

கூடத்துச் சோபாவில் அமர்ந்திருந்த உபேந்திரநாத் தலை நிமிர்ந்தார்.

மார்பகங்கள் விம்மிப்புடைத்து அடங்கும்படி மென்மூச்சு இழைய பவள இதழ்களில் புன்னகை மின்ன கருவண்டு விழிகள் ஒளி சிந்தும்படி மருட்சி மிகுந்த பார்வையுடன் மூங்கில் பணைத் தோள்கள் மருங்கு அசைய ஒரு அழகிய தங்கச்சிலை நடந்து வருமா?

இதோ வருகிறாளே...சுரபாலா எம்.பி.பி.எஸ்.!

சுரபாலாவின் மென்மை மிளிரும் உடலைக் கண்டதும் உபேந்திரநாத்துக்கு அவளுடைய தாய்...முஸ்லிம் பெண் கதீஜாவின் நினைவும், தாம் இந்து சமயக் கோட்பாடுகளை மீறிக் கசிந்துருகிய காதலால் அவளைத் திருமணம் செய்துகொண்ட நிகழ்ச்சியும், அவளுடன் வாழ்ந்த அந்த இனிமையான நாட்களும், ஷீமகா நகர மருத்துவமனையில் இந்தப் பொற்கொடியைப் பெற்றுக் கொடுத்துவிட்டு அந்தப் பெண் மயில் மறைந்துவிட்ட சம்பவமும் அடுக்கடுக்காகக் கவனத்துக்கு வந்தன!

"அப்பா! என்ன பெரிய சிந்தனையில் ஆழ்ந்துவிட்டீர்கள்?"

உபேந்திரநாத் தன் எதிரில் சோபாவில் வந்து அமர்ந்த சுரபாலாவைப் பார்த்தார்.

மஞ்சள் பைஜாமா...நீல நிறப் பட்டுக்கவுன்... மடித்துக் கட்டிய இரட்டைப் பின்னல்...பின்னல்களை இணைத்து ஒரு பக்கக் கன்னத்துச் சரிவில் ஊஞ்சலாடிய கனகாம்பர மலர்ச்சரம்...மணி மார்பிற்குச் சரியாக மடித்து அலட்சியத்துடன் தோள்களின்மீது தவழவிட்டுக் கொண்டிருக்கும் பச்சைநிற நீண்ட அங்கி!

தான் ஒரு டாக்டர் என்பதை எடுத்துக்காட்டக் கழுத்தில் தவழும் ஸ்டெதஸ்கோப்! சுரபாலா எவ்வளவு ஒய்யாரமாக வைரச்சிலைபோல சோபாவில் சாய்ந்து கொண்டிருக்கிறாள்.

கடவுளே...என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறதே...!

அவள் எழிலைப் பெருமிதத்துடன் விழுங்கிக்கொண்டிருந்த உபேந்திரநாத் தம் கண்களை மூடிக்கொண்டார்.

“என்னப்பா! உடம்பு சரியில்லையா?” என்று அன்புடன் கேட்டுக்கொண்டே அவர் கையைப்பற்றி நாடி பார்த்தாள், சுரபாலா!

“அதெல்லாம் ஒன்றுமில்லையம்மா!”

“ஓ..மைகாட்! நீங்கள் மனசை ரொம்ப அலட்டிக்கொண்டிருக்கிறீர்கள். நான் ஒரு ‘டானிக்’ தர்றேன். ஒரு நொடியில் சரியாகப் போய்விடும்” என்று பாலைப் பல்வரிசை தெரியச் சிரித்துக்கொண்டே வேடிக்கையாக அவர் கையில் முத்தம் பதித்தாள்.

“போதும்மா, என் கண்ணே! இன்னும் நூறு வருடங்கள் வாழ்வதற்கான புதிய தென்பு எனக்கு வந்துவிட்டது!”

“மணி ஐந்து ஆகிவிட்டதப்பா. நான் மலைப்பக்கம் போய் விட்டு வருகிறேன்!”

“சரியம்மா! காரை எடுத்துகிட்டுப் போ!”

“வேண்டாம்பா! நான் சைகளில்தான் போவேன்!”

“வயது இருபத்தைந்து ஆகப்போகிறது. டாக்டர் பட்டம் வாங்கி இரண்டு வருடம் ஆயிற்று. இன்னும் உன் விளையாட்டுக் குணமும் பிடிவாதமும் மட்டும் போகவில்லை. ம்...உன் குழந்தைக் குணத்துக்கு எவன் வந்து வாய்க்கப் போகிறானோ?”

“ஆல்ரைட்! டைம் ஆச்சப்பா! அந்த மேதை கருப்பா இருப்பாரா...சிவப்பா இருப்பாரா என்று கற்பனை செய்துகொண்டிருங்கள், நீங்கள்! நான் போய் சற்று உலவிவிட்டு வருகிறேன்.”

சுரபாலா மான்போல துள்ளிக்கொண்டே மாடிப்படி யிறங்கி மறைந்தாள்.

அவள் தினந்தோறும் மாலை நேரத்தில் பஞ்சாபி உடை அணிந்துகொண்டு மலைப்பக்கம் சென்று உலவிவிட்டு வருவது வழக்கம்.

மாடிச் சன்னல் அருகே வந்த உபேந்திரநாத் கீழே பங்களாவின் வாயிற்பக்கத்தை நோக்கினார். சுரபாலா பச்சை மயில் தோகை விரித்துப் பறந்து செல்வதுபோல நீண்ட மேல் அங்கி காற்றில் மிதந்துவர சைகிளில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தாள்.

உபேந்திரர் நெஞ்சிலிருந்து பெருமூச்சொன்று பறந்தது.

'பூந்தளிர் மேனியும் பொன்னிகர் மனமும்கொண்ட நம் அன்புக் கொடி சுரபாலாவை மணக்கப்போகும் மேதை எங்கு இருக்கிறானோ...எப்படி இருக்கிறானோ?'

2

கன்னட நாட்டில் உள்ள அனைவரும் சித்திரக்கல் துருக்கத்தையும் அதன் எழிலார்ந்த மலையையும் அம்மலையில் உள்ள குகைகளையும் அங்கு உள்ள வீர சைவர்களின் புகலிடமான சிவப்பிரகாச சுவாமிகளின் மடத்தையும் நன்கு அறிந்திருப்பார்கள்.

பெரிய கோட்டை வாயிலைப்போன்ற வாயிற்படிகள் சுமார் ஒரு பர்லாங்குக்கு ஒன்று வீதம் அடுத்தடுத்து ஏழு உண்டு. அவற்றினிடையே நுழைந்து செல்வதே பெருமகிழ்ச்சியை அளிக்கும்.

ஏழு வாயில்களையும் தாண்டிச் சென்றால் பின்னர் குளம், ஏரி, சிவன் கோயில், பெரிய சம்பங்கி மரம் ஒன்று, நெய்க் கிணறு, பாதாளக் குகைகள், அந்தக் குகைகளின் நடுவில் நடன அரங்கத்தைப் போன்ற பரந்த கூடங்கள் இத்தனையும் உண்டு.

நாள் முழுவதும் தன்னுடைய 'ஸ்பெஷல் டிஸ்பென்சரி'யில் உள்ள நோயாளிகளிடையே சுழன்றுகொண்டிருக்கும் சுரபாலா மன அமைதிக்காகச் சலிப்பில்லாமல் அந்த இடங்களைச் சுற்றிப் பார்ப்பாள். ஆனால் இன்றோ......

எந்தக் காட்சியிலும் மனம் ஒன்றாமல் போய்விடவே சம்பங்கி மரத்தின் ஓரத்தில் சைகிளை நிறுத்திவிட்டு மரத்தின் அடியில் இருந்த வழவழப்பான பாறைமீது அமர்ந்திருந்த அவளுடைய இதயத்தில் பலவித எண்ண அலைகள் மோதின.

"அப்பா சொன்னாரே—நமக்கு இருபத்தைந்து வயதா ஆகிவிட்டது? நம் வயதையும் வளர்ச்சியையும்கூட உணர முடியாதபடி நாம் எப்படி வாழ்ந்துவிட்டோம்?

"நம்முடன் எத்தனையோ அழகிய வாலிபர்கள் பம்பாயில் 'மெடிகல் காலேஜில்' படித்தார்களே...ஆனால் இயற்கையாகவே நாம் எந்த வாலிபனையும் ஒருதடவைகூட எண்ணிப் பார்த்ததில்லையே, காரணம் எதுவாக இருக்கும்? ஒருவேளை நமக்கு வரப்போகும் கணவர் மேல்நாட்டில் பிறந்திருப்பாரோ...பெரிய பட்டதாரியாகவும் படிப்பாளியாகவும் அப்பா சொன்னதைப்போல சிறந்த மேதையாகவும் இருப்பாரோ......"

காற்று வேகமாக வீசவே, சம்பங்கிப் பூக்கள் 'பொலபொல' வென்று சுரபாலா மீது உதிர்ந்தன. இன்ப நினைவிலிருந்து உணர்வு பெற்றாள் டாக்டர் சுரபாலா. கைக் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஆறு...!

அவசர அவசரமாக சைகிளை எடுத்துக்கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டாள்......!

'நமக்கு வரப்போகும் அவர் எப்படியிருப்பார்? அவர் முகம் எப்படியிருக்கும்? எதுவரை படித்திருப்பார்? இப்போது அவர் புகழ்பெற்ற ஒரு மந்திரியாக இருப்பாரா? அல்லது திறமைமிக்க ஒரு கலெக்டராக இருப்பாரா? எந்த ஊரில் என்ன வேலை செய்து கொண்டிருப்பார்? அது சரி...இந்த மாலை நேரத்தில் என்ன செய்துகொண்டிருப்பார்? நாம் இப்போது சைகளில் போய்க் கொண்டிருக்கிறோம்! இதே நேரத்தில் இந்த விநாடியில் அவர் தம் நண்பர்களுடன் பேசிக்கொண்டிருப்பாரா? அல்லது, எங்கே யாவது ஒரு சினிமாவுக்குப் போய்க்கொண்டிருப்பாரா? அல்லது நம்மைப்போலவே சைகளிலாவது—காரிலாவது சென்றுகொண் டிருப்பாரா? அல்லது...அல்லது...நாம் நம் வருங்காலக் கணவ ராகிய அவரைப்பற்றி நினைத்துக்கொண்டிருப்பதைப் போலவே அவரும் தம் வருங்கால மனைவி எப்படியிருப்பாள்...இந்த நேரத்தில் என்ன செய்துகொண்டிருப்பாள் என்று நம்மைப்போலவே கற்பனை செய்து பார்த்துத் தமக்குத்தாமே மகிழ்ந்துகொண்டிருப் பாரா?......

சுரபாலாவின் நெஞ்சில் இன்பப் பரபரப்பு ஏற்பட்டது.

'அவர் முகம் எப்படியிருக்கும்? எப்படியிருக்கும்?'

அவள் எத்தனையோ வித விதமான புதுப்புது முகங்களைக் கற்பனைசெய்து பார்த்துவிட்டாள். ஊஹூம்...அந்த முகம் ஏதோ அவளுக்குத் தெரிந்த முகம்போல இருந்ததே தவிர இதயத்திரையில் தெளிவுபட அமையவில்லை.

'ஆஹா...இந்த இன்ப நினைவுகள் உள்ளத்திற்கு எவ்வளவு உற்சாகத்தைத் தருகின்றன. இப்படி நெஞ்சார நினைத்து நினைத்தாவது இதுவரை மகிழ்ச்சியடைந்திருக்கலாமே...அதுகூடத் தெரியாமல் இவ்வளவு நாட்கள் பைத்தியக்காரத்தனமாக இருந்து விட்டிருக்கிறோமே...! அவர்...அவர்...மிகவும் குறும்புக்காரராக இருப்பார். நாம் 'டிஸ்பென்சரி'யிலிருந்து களைப்புடன் வீட்டிற்குத் திரும்பும்போது நமக்குத் தெரியாமல் நம்மை வந்து அணைத்துக் கொள்ளவேண்டும் என்ற ஆவலால் பூனையைப்போல நமக்குப்

பின்னால் சப்தம்போடாமல் மெதுவாக வருவார். அவர் வருவதைத் தரையில் விழும் மங்கிய நிழல் அசைவில் தெரிந்துகொள்ளும் நாமும் அந்த அணைப்பின் சுகத்தை அனுபவிக்க அவர் வருவதைத் தெரிந்து கொள்ளாதவளைப்போல நின்று கொண்டிருப்போம்... அவரோ, மெல்ல பின்புறமாகவே வந்து நம்மைக் கட்டித் தழுவிக்-கொண்டு......'

சுரபாலாவின் சங்குக் கழுத்தின் பின்புறம் பிடரியில் இன்பச் சிலிர்ப்பு ஏற்பட்டது. அவள் தனக்குத்தானே சிரித்துக் கொண்டே, இடது கையால் சைகிளைப் பற்றிக்கொண்டு வலது கையால் புறங்கழுத்தைத் தடவி விட்டுக்கொண்டாள்.

என்று மில்லாதவாறு இன்று கற்பனைக் கோலம் பூண்ட சுரபாலாவின் சைகிள் ஏழு வாயில்களையும் தாண்டி, சித்திரக்கல் அருக்கம் டவுனுக்குள் சென்றுகொண்டிருந்தது.

சுரபாலா, கடை வீதியைக் கடந்து ஒரு திருப்பத்தில் திரும்பியபோது, அசுரவேகத்தில் ஒரு பஸ் மறுபுறத்திலிருந்து வந்து திரும்பிக்கொண்டிருந்தது. ஒரு கணம் தாமதித்திருந்தாலும் போதும்......

'அவர் எப்படியிருப்பார்? அவர் முகம் எப்படியிருக்கும்? அவர் இந்த நேரத்தில் எங்கு இருப்பார்! இதே நேரதில் என்ன செய்துகொண்டிருப்பார்? அவரும் நாமும் திடீரென்று இந்த இடத்தில் இப்போது சந்தித்துக்கொண்டால் எப்படியிருக்கும்?' என்றெல்லாம் சுவையான எண்ணங்களில் மூழ்கியவாறு சைகிளில் திரும்பிய சுரபாலாவின்மீது பஸ் ஏறிவிட்டிருக்கும். அதற்குள் சைகிளில் வரும் சுரபாலாவின் எழில் கொழிக்கும் திருஉருவைக் கண்களால் விழுங்கிக்கொண்டே எதிரில் நடந்து வந்துகொண்டிருந்த ஒருவர் அந்த இக்கட்டான நிலையைக் கவனித்துவிட்டு சட்டென்று சைகிளை அப்பால் தள்ளிவிட்டு பஸ்ஸின் முன் குறுக்கே பாய்ந்தார். டிரைவர் விழிப்புடன் பிரேக்கைப் போடவே பஸ் நின்றது. நல்லவேளை...பஸ் அவர்மீது ஏறவில்லை. ஆனால் குறுக்கே பாய்ந்தவரின் வலது புஜத்தைக் கீழே கிடந்த கூரிய கல் ஒன்று கிழித்துவிட்டது! தான் தப்பியதே போதும் என்று எண்ணிய டிரைவர் கன்னடத்தில் ஏதோ கோபத்துடன் கூறிக்கொண்டே வண்டியை ஒதுக்கி எடுத்துக்கொண்டு வேகமாகச் சென்று விட்டான்.

எதிர்பாராமல் சைகிளும் தானுமாகக் கீழே விழுந்த சுரபாலா எழுந்திருக்க முயன்றாள். அதற்குள் அவளைக் காப்பாற்றிய அந்த ஆள் தட்டுத்தடுமாறி எழுந்து சென்று, அவளைத் தூக்கி

நிறுத்தினன். திடீர் அதிர்ச்சியால் நிற்க முடியாமல் அவள் உடல் நடுங்கியது. அவள் கீழே நழுவி விழுந்துவிடாதபடி அவன் அவளைத் தன் இடது பக்க மார்போடு அணைத்துக் கொண்டு நின்றான்.

இதற்கிடையில் பாதையில் சென்று கொண்டிருந்தவர்களும் ஒன்றாகக் கூடிவிட்டனர். காவி உடுத்திய சாமியார் ஒருவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு உள் நுழைந்து பார்த்தார். அவர் ஏற்கனவே சுரபாலாவுக்குத் தெரிந்தவர், உபேந்திரரின் நெருங்கிய நண்பர். நிலைமையைக் கண்ட அவர் ஒரு கணத்தில் அனைத்தையும் புரிந்து கொண்டார்.

சுரபாலா இரண்டொரு நிமிடங்களில் உணர்வு பெற்றாள். சுற்றியிருந்த கூட்டத்தைத் துழாவிய அவளுடைய கண்கள், தன்னைப் பேராபத்திலிருந்து மீட்டவனின் முகத்தைப் பார்க்கத் துடித்தன.

நன்றிகலந்த பார்வையுடன் நோக்கிய அவளுடைய விழிகள் அவனுடைய முகத்திலேயே நிலைத்து விட்டன; அவனும் இமைப்பதை மறந்து அவள் திருமுகத்தையே பார்த்துக் கொண்டு நின்றான். சுரபாலாவின் கைகள் கூம்பி தம் வணக்கத்தையும் நன்றியையும் அவனுக்குத் தெரிவித்தன.

ஆபத்திலிருந்து சுரபாலாவை மீட்டவன்—வரதன் போய் விட்டான். அவன் தோற்றத்தில் ஒரு தமிழனாக இருந்ததால் சிவஞான பாலய்ய சுவாமி என்ற பெயர் படைத்த அந்தத் தமிழ் யோகியார் அவனைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினார். ஆனால், அவன் அதற்குள் போய்விட்டான். கூட்டமும் கலைந்து கொண்டிருந்தது. சுரபாலா, வரதன் சென்ற திசையையே பார்த்தக் கொண்டு நின்றாள்.

கீழே கிடந்த சைகிளைத் தூக்கி நிறுத்திய யோகியார் புன்னகையுடன், "அவருக்கு உடம்பு குணமாயிடும். நீ கவலைப்பட வேண்டாம். வா, சுரபாலா! வீட்டிற்குப் போகலாம். உன்னை வீட்டில் விட்டுவிட்டுப் பிறகு நான் மடத்திற்குப் போகிறேன்" என்று தூய கன்னடத்தில் கூறினார்.

குழப்பமும் தெளிவும் மாறிமாறி முற்றுகையிட தன் இதயத்தில் பதிந்துவிட்ட வரதனுடைய முகத்தை எண்ணிக் கொண்டே அவர் பின்னால் நடந்தாள், சுரபாலா!

3

அமாவாசை வந்து சென்றது; வளர்பிறை வளர வளர சுரபாலாவின் காதல் எண்ணங்களும் வளர்ந்து முதிர்ந்தன.

அவளுடைய சிரிப்பும் மலர்ச்சியும் அடங்கி ஒடுங்கின; எப்போதும் சோர்வுடன் காணப் பட்டாள்.

அவள் நெஞ்சத்தில் அடர்ந்த இன்பக் கனவுகளின் ரேகை முகத்தில் படர்ந்தது. அவளுடைய மையுண்ட விழிகளை மூடிமூடி அவனுடைய மோகன உருவத்தை மனத்திரையில் கண்டு கண்டு மயங்கினாள்.

அவளுடைய நோய் எது என்பதை உபேந்திரர் தெரிந்து கொண்டார்.

ஆனால், எப்படி அதை மகளிடம் கேட்பது? யாரையம்மா நீ விரும்புகிறாய்? அல்லது யாரம்மா உன்னை விரும்புகிறார்கள் என்பதை எப்படி மகளிடம் கேட்பது? விளையாட்டுக்காகப் பேசும் போது ஆயிரம் பேசுகிறோம்; அதுவே உண்மையானால் அதைப்பற்றிப் பேசுவதற்கு எப்படியெல்லாம் குழம்பித் தவிக்க வேண்டியிருக்கிறது!

உபேந்திரருடைய குழப்பத்தை அறிந்தவரைப்போல சமய சஞ்சீவியாக யோகி பாலய்ய சுவாமிகள் வந்தார்.

"வாருங்கள் சுவாமி! நம் சுரபாலாவைப் பற்றிதான் யோசித்துக் கொண்டிருந்தேன். சுரபாலா அவனை விரும்புவதைப் போல அவன் இவளை விரும்புகிறானா இல்லையா என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டுமே.........?"

"நிச்சயம் விரும்புவான்... விரும்புகிறான்! தாமரையை விரும்பாத வண்டும் உண்டா? தமிழ் இலக்கியங்களில் தலைவனுக்கும் தலைவிக்கும் பூத்தரு புணர்ச்சி......புனல்தரு புணர்ச்சி......களிறுதரு புணர்ச்சி என்று பல கூட்டங்கள் நடைபெறும். ஆனால், அன்று நடந்த அந்த "பஸ் தரும் புணர்ச்சி' இருக்கிறதே—அதற்கு விளக்கமே சொல்ல முடியாது போங்கள்! அடிபட்ட இடத்திலிருந்து இரத்தம் வழிந்து அவனுடைய வலது பக்கத்தை சிவப்புமயமாக்கியது சிவனைப் போலவும், அதிர்ச்சியுடன் அஞ்சி அஞ்சி நடுங்கி அவனுடைய தோளில் சாய்ந்திருந்த சுரபாலாவின் மையுண்ட விழிகள் வழியாகக் கலங்கிய கண்ணீர் அவள் உடலை நனைத்துக் கருமையாகக் காட்சியளித்தது சிவனுடைய இடப் பாகம் கொண்ட பார்வதி போலவும் இருந்தது! சிவனும் பார்வதி

யும் சேர்ந்து நின்ற திருக்கோலத்தில் அவர்களை நான் கண்டேன். அந்தப் பஸ் தரு புணர்ச்சி இருக்கிறதே அது"

யோகியார் மேலும் பேசிக்கொண்டே போனார்.

பக்கத்து அறையில் சோர்ந்த நிலையில் படுத்துக் கொண்டிருந்த சுரபாலா, "பஸ் தரு புணர்ச்சியாவது கிஸ் தரு புணர்ச்சியாவது" என்று நினைவலைகளை ஓட விட்டவள் திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டவளாக முகம் வெட்கத்தால் சிவக்க சட்டென்று நினைவைப் பாதியிலேயே நிறுத்திக் கொண்டாள்.

சுரபாலா பக்கத்து அறையில் இருப்பதை யோகியார் அறிவார். அவர் தம் மனதிற்குள்ளேயே சிரித்துக்கொண்டு சற்று உரக்க அவளுக்குக் கேட்கும்படியாகக் குரலை உயர்த்தி "நான் ஒன்று கேள்விப்பட்டேன், நண்பரே! வரதன் அந்த சம்பவத்திற்குப் பிறகு தினமும் மலைக் குகைகளைச் சுற்றிப் பார்க்கச் செல்கிறானும்! ஒருவேளை, சுரபாலா ஒவ்வொரு நாளும் அந்தப்பக்கம் உலவச் செல்கிறாள் என்பதை அவன் யார் மூலமாவது தெரிந்து கொண்டு கூட அப்படிச் செல்லலாம். ஆனால், நம் சுரபாலாவோ அதற்குப்பிறகு உலவச் செல்வதைக்கூட விட்டு விட்டிருக்கிறாள்."

தன் தந்தைக்குச் சொல்லும் சாக்கில் அவர் ஏன் சற்று உரக்க அந்த விவரத்தைக் கூறினார் என்பதைச் சுரபாலா விரைவில் உணர்ந்தாள்.

அவள் உள்ளத்தில் இன்பக்காட்சி யொன்று விரிந்தது.

அதோ...

யோகியார், தன் தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டு மடத்திற்குப் புறப்பட்டு விட்டார். வெயில் நேர ஓய்வுக்காகத் தந்தை படுக்கச் சென்று விடுகிறார். காலை மணி பத்து.

சுரபாலா, அவசர அவசரமாக எழுந்து தன்னை நன்றாக அலங்கரித்துக் கொள்கிறாள். தந்தையிடமோ வேலைக்காரனிடமோ ஒன்றும் கூறாது, மலையடிவாரத்திலுள்ள சம்பங்கி மரத்தை நோக்கி வேகமாக நடக்கிறாள். அங்கே அவளுக்காகவே காத்துக் கொண்டிருப்பவனைப் போல வரதன் அமர்ந்திருக்கிறான். சுற்றும் முற்றும் பார்க்கிறாள்; சொல்லி வைத்தாற்போல யாரும் இல்லை. ஓடோடிச் சென்று அவன் மார்பில் சாய்கிறாள்; அவனும் அவளை ஆரத்தழுவிக் கொள்கிறான்.

சுகம்......சுகம்......இதுவரை அவள் அனுபவித்திராத எல்லையில்லாச் சுகம் அவளை ஆட்கொள்கிறது. அணைப்புக் கிடையே

வரதன், அவள் காதருகில் குனிந்து ஏதோ கிசுகிசுப்பதைப் போல அவளுக்கொரு பிரமை...!

"யாராவது நம்மைப் பார்த்துவிடப் போகிறார்கள். அதோ அந்த மலைச்சிகரத்தின் இடையில் ஒரு பெரிய குகை இருக்கிறதாம், வா, நாம் அங்குச் சென்று அமைதியாக மனம் கலந்து பேசுவோம்!"

4

அவளுடைய உள்ளுணர்வில் படர்ந்த மனவேகத்தின் படியே அவள் மலைப்பக்கம் ஓடிச்சென்று பார்த்தாள். அங்கே வரதன் இருந்தான்.

அடங்காத காதலுடன் தன்னைத் தேடிவந்த சுரபாலாவை அழைத்துக் கொண்டு குகையின் வாயிலுக்குச் சென்றான் வரதன் ...வாய் திறந்து ஒன்றும் பேசாமல்!

வாயிலை மறித்துக் கொண்டிருந்த செடிகளின் கிளைகளை ஒடித்து அப்புறம் எறிந்து குகையின் வழியைச் சரிசெய்துவிட்டு, வரதன் உள்ளே நுழைந்தான். சுரபாலா தொடர்ந்தாள்.

வெளிச்சமும் காற்றோட்டமும் இல்லாததால் 'கும்'மென்ற இருளின் மணமும் புழுக்கத்தின் மணமும் கலந்து அவர்களுடைய நாசியில் நெடியேற்றின.

வரதன், சிகரெட் ஒன்றைப்பற்ற வைத்துக் கொண்டு, அடிக்கடி தீக்குச்சியைக் கிழித்து ஒளியுண்டாக்கிக் கொண்டே சுரபாலாவை அழைத்துச் சென்றான். கொஞ்ச தூரத்தில் சூரிய வெளிச்சமும், ஒரு அழகிய மண்டபமும் தெரியவே அவர்களுக்குச் சற்று தெம்பு வந்தது.

மண்டபத்தை நெருங்க நெருங்க 'சில்' லென்ற காற்று வந்து அவர்கள் சோர்வை நீக்கியது. அதிகமும் இல்லாத குறைவும் இல்லாத சம அளவில் உள்ள போதிய வெளிச்சம் மண்டபம் முழுவதும் நிரம்பியிருந்தது. மண்டபத்தை அடுத்து ஒரு நீர்ச் சுனை. மேலேயிருந்து வந்த மெல்லிய அருவியின் நீர் அந்தச் சுனையில் நிரம்பிக் கீழ்ப்புறமாக வழிந்து சென்றது.

மண்டபத்தின் நடுவில் இருந்த வழவழப்பான கருங்கல் மேடையில் வரதனுக்கு அருகிலேயே சுரபாலா அமர்ந்தாள். வரதனும் சுரபாலாவும் சம்பங்கி மரத்தடியில் சந்தித்தது முதல் இதுவரை ஒருவரிடம் ஒருவர் பேசிக் கொள்ளவே இல்லை. கண்கள் ஆயிரம் ஆயிரம் கதைகள் பேசிக்கொள்ளும் போது நாக்குகள் வேறு பேசிக் கொள்ள வேண்டுமா?

வரதன் நிமிர்ந்து சுரபாலாவின் எழில் முகத்தைப் பார்த்தான்.

அவனுடைய காதல் முகத்தை நேருக்கு நேராகப் பார்க்க முடியாமல் சுரபாலா தன் பார்வையை நிலத்தில் பதித்தாள்.

அவன் மெல்ல அவள் கையைப் பற்றினன். அவள் மெதுவாக அவன் அருகில் நகர்ந்து அமர்ந்தாள்.

வரதன் தன் கையைப்பற்ற வந்த போதும் தன்னை ஆரத்தழுவிக் கொள்ள முற்பட்ட போதும் சுரபாலா அவனைத் தடுக்கவில்லை; அவன் கையைப் பற்ற வந்தபோது தானே தன் கையை அவன் பக்கம் நீட்டினுள். அவன், அணைக்துக் கொள்ள முன் வந்தபோது தானுகவே தன் உடலை இணக்கமாக அவனுக்குத் தந்து அவனோடு ஒட்டிக் கொண்டாள். மீண்டும் மீண்டும் அவன் தன்னை அணைத்துக் கொள்ள மாட்டானு என்று ஏங்கித்தவித்தாள்.

சுரபாலாவின் ஏக்கமும் தவிப்பும் அவளுக்கே வியப்பைத் தந்தன.

'இது என்ன கேளிக்கூத்து என்பது? நவநாகரிக உலகில் படித்து எம். பி. பி. எஸ். பட்டம் பெற்ற ஒரு டாக்டராகிய நாமா முன்பின் தெரியாத யாரோ ஒருவருடன் இப்படி நடந்து கொள்கிறேம்? நண்பர்களிடமும் நோயாளிகளிடமும் சிரிக்கச் சிரிக்கக் கேலி பேசி விளையாடும் நம்மால் இவரிடம் ஒருவார்த்தை கூடப் பேசமுடியவில்லையே—ஏன்?

'யார் இவர் எங்குப் பிறந்தவர்...சொந்த ஊர் எது...நமக்கும் நம் அந்தஸ்துக்கும் ஏற்றவர் தானு...நல்ல குடும்பத்தில் பிறந்து நல்லொழுக்கத்துடன் நடப்பவரா...இல்லை...?

' நாம் ஒன்றையுமே தெரிந்து கொள்ளாமல் எப்படி இவரைத் தேடிவந்தோம்? தேடி வந்ததும் இல்லாமல் இவர் கூடவே சற்றும் அச்சம் இல்லாமல் இந்தக் குகைக்குள் நுழைந்து வந்தோம்? ஒரு பேச்சும் பேசாமல் எப்படி இவ்வளவு துணிவுடன் நம்மால் வர முடிந்தது? நம் குடும்பத்துக்கோ அல்லது நமக்கோ கொஞ்சமும் அறிமுகமாகாதவர்—பழகியறியாதவர்—முற்றிலும் புதியவர்!

' அப்படியிருக்கும் போது நூறு ஆண்டுகள் நம்முடன் பழகியவரைப்போல நம்பிக்கையுடன் அவர் பின்னுல் வந்து விட்டோமே—எந்தக் காரணத்தால் அப்படி வந்தோம்?'

சுரபாலாவுக்கு வெட்கம் பிடுங்கித்தின்றது. எழுந்து ஒரே ஓட்டமாக வீட்டிற்கு ஓடிவிடலாமா என்று தோன்றியது. ஓடிப்

போய் நேராக அவளுடைய அப்பாவிடம் சென்று, 'நான் சும்மா மலைப்பக்கம் தானப்பா போய்வந்தேன்; அங்கு நான் வாதனைப் பார்க்கவில்லையப்பா…நான் அவருடன் குகை மண்டபத்திற்குப் போகவில்லையப்பா' என்று சொல்ல வேண்டும்போல அவள் உதடுகள் துடித்தன.

துடித்துக் கொண்டிருந்த சுரபாலாவின் இதழ்களின் மீது சூடேறித்துடித்த இரு உதடுகள் அழுந்தப் பதிந்தன.

மயங்கிச் செருகிய அவளுடைய விழிமலர்கள் பாதி மலர்ந்தன. கிணற்றில் சிறு கல் விழுந்தாற் போல பாதி உணர்வு பெற்றாள், அவள்.

'ஓ—இதென்ன வெட்கக்கேடு? அவர் மட்டும்தான் நம்மை அணைத்துக் கொண்டிருக்கிறார் என்றல்லவா எண்ணியிருந்தோம். நாமும் அல்லவா அவரை இறுக அணைத்துத் தழுவி அவருடைய முதுகை வருடிக் கொண்டிருக்கிறோம்?'

சுரபாலாவின் சிவந்தமுகம் வெட்கத்தால் மேலும் சிவந்தது. தன் கைகளை அப்பால் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தான் எண்ணினாள். ஆனால், கைகளோ அவளுடைய சொல்லைக் கேளாமல் மேலும் இறுக்கமாக அவனை அணைத்துக் கொள்கின்றனவே! பாழாய்ப் போன மனமும் இப்போது அவள் பேச்சைக் கேட்க மறுத்து அவனையே விரும்புகிறதே…! நாள் கணக்காக மாதக்கணக்காக வருடக்கணக்காக யுகயுகாந்திரமாக அப்படியே அவனைத் தழுவிக் கொண்டு இருக்க வேண்டும் என்ற எண்ணமும் மேலோங்கி எழுகிறதே…

எந்த ஆரவாரமும் இல்லாமல், பால் இல்லாமல்…பழம் இல்லாமல்…பூவிதழ் தூவிய பஞ்சு மெத்தை இல்லாமல் இயற்கையிலேயே ஒருமித்த அந்த இரு இதயங்களின் அன்பு வெள்ளங்களும் ஒன்றோடு ஒன்று கலந்து ஒன்றிவிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாதபடி சங்கமமாயின!

5

சற்று நேரத்திற்குப் பின்………

வாதனுடைய மடியில் தலைவைத்துப் படுத்திருந்தாள் சுரபாலா!

"சு…ர…பா…லா…?" முதன் முறையாக வாதன் அழைத்தான்.

"...ம்......!" சோர்வுடன் படுத்திருந்த சுரபாலா தலையை மட்டும் நிமிர்த்தி அன்பு கனிய அவனைப் பார்த்தாள்! அவளுடைய நெற்றியிலும் புருவங்களிலும் துளிர்த்த வியர்வைத் துளிகளைத் தன் விரலால் சுண்டியவாறு வரதன் கேட்டான் :

"இன்று என்ன கிழமை?"

"புதன்......"

"மணி என்ன......?"

"பன்னிரண்டு...ஐந்து"

"நம்வாழ்க்கையில் முதன் முதலாக நடந்த அந்தஇன்ப நிகழ்ச்சி இப்படி பட்டப்பகல் பன்னிரண்டு மணிக்கா நிகழ வேண்டும்? சே......கொஞ்சம்கூட வெட்கமில்லாமல்! அவ்வளவு பொறுமை கூடவா நமக்கு இல்லை...... !"

இருவர் இதயத்திலும் ஒரே சமயத்தில் இந்த எண்ணம் எழுந்தது.

வரதன் குறும்புடன் அவளைப் பார்த்தான் ; அவள் நாணத் துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் ; தமிழும் வங்காளியும் கலந்த அரைகுறைக் கன்னடத்தில் அவர்கள் பேச்சு தொடர்ந்தது.

"சுரபாலா! என் வாழ்க்கையில் இப்படியொரு சம்பவம், நான் என் நண்பன் வீட்டிற்கு வந்து விருந்தினனாகத் தங்கியிருக்கும் போது இந்த மொழியறியாத, திசைதெரியாத நாட்டில் நடக்கும் என்று நான் கற்பனை கூடச்செய்து பார்த்ததில்லை. நம்மையறியாமல் ...ஏன், நமக்குத் தெரியாமலேயே இந்தச் சந்திப்பு நிகழ்ந்திருக் கிறது. இதைத்தான் இயற்கை என்கிறார்கள் போலும்..."

"அதையேதான் நானும் யோசித்துக் கொண்டிருக்கிறேன். ஒருவர்க்கொருவர் பழகாமல்...ஒருவர் உள்ளத்தை ஒருவர் புரிந்து கொள்ளாமல்...ஒருவருடன் ஒருவர் பேசாமல்...ஆனால் அதே சமயத்தில் ஒருவருக்கொருவர் ஆண்டாண்டுகாலமாகப் பழகி ஒருவர் உள்ளத்தை ஒருவர் புரிந்து கொண்டதைப் போலவும் உணர்ச்சி ஏற்படுகிறது!"

"இது கனவு அல்லவே, சுரபாலா! தமிழ்நாடு என் தாய் நாடு. அதில் திண்டிவனம் வட்டத்தில் ஆட்சிப்பாக்கம் என்ற சிறு கிராமம் என் சொந்த ஊர்...அந்த ஊரில் உள்ள ஓர் மண் குடிசை யில்கொட்டும் மழையில் ஓர் புதன்கிழமை காலை நான் பிறந்தேன். ஐந்து ஆறுவயசுப் பையனாக இருந்தபோது எங்கள் ஊர் வரதராஜப்

பெருமாள் கோவில் சுற்றுச்சுவர் பிரகாரத்தில் நான் புழுதியில் விளையாடியதும், பத்து பன்னிரண்டு வயசில் மற்றப் பையன்களுடன் சேர்ந்து கொண்டு இரவில் திருட்டுதனமாகக் கோவில் மதில் சுவரின் மீது ஏறி கோபுரத்தின் மீது தாவி சின்னஞ்சிறிய கோயில் புறாக்களின் குஞ்சுகளைப் பிடித்துவந்து வீட்டில் கூண்டு கட்டி அவற்றை வளர்த்ததும், உச்சிவெயிலில் ஏனைய விளையாட்டுச் சிறுவர்களுடன் கூடிக்கொண்டு...காவல்காரனை ஏமாற்றிவிட்டுக் குளத்தைக் கலக்கி நீச்சல் அடித்துக் குளித்து ஆடியதும்...சுரபாலா அந்தப்பிள்ளைப் பருவத்துக் காட்சிகளையும், இதோ நீ என் மடியில் தலை வைத்திருக்கும் இந்தக் காட்சியையும் நினைத்தால் எனக்கு எல்லாம் கனவாகவே தோன்றுகிறது. நான் ஓர் ஆசிரியன்; பயிற்சி முடிந்தபிறகு எத்தனையோ பெண்கள் என்னைக் காதலித்தார்கள்...ஒருத்தியிடமும் என் மனம் செல்லவில்லை. ஆனால், சுரபாலா...அன்று 'ஆக்ஸிடெண்ட்டின்' போது உன்னை நான் முதன் முதலாகப் பார்த்தேனே...அப்போதே, நாடு, மொழி, இனம் அத்தனையையும் கடந்து நீ என் நெஞ்சில் புகுந்துகொண்டாய்! அன்று முதல் உன் நினைவாகவே இருந்தேன். பாரேன்...இரண்டு மணி நேரத்திற்கு முன்பு நாம் நினைத்தோமா, இப்படி இந்த மண்டபத்தில் நாம் இருவரும் ஒன்று சேர்ந்து அமர்ந்து பேசிக் கொண்டிருப்போம் என்று!"

சுரபாலாவின் கண்களில் இன்பக் கண்ணீர் பனித்தது.

"நீங்கள் கூறியது உண்மைதான். நம்முடைய இந்தக் காதல் அநுபவத்தை யாரிடமாவது சொன்னால்கூட நம்பமாட்டார்கள். படித்துப்பட்டம் பெற்றவர்கள் ஓட்டல்களில் அடிக்கடி சந்தித்து ஆற்றங்கரைகளிலோ சினிமாக் கொட்டகைகளிலோ அல்லது கடற் கரைகளிலோ காதலை வளர்த்து ஒன்று சேராமல்...இந்த மலையின் குகை மண்டபத்தில் இப்படி உள்ளம் ஒன்றி ஒன்று சேர்ந்தோம்... அதுவும் ஒருவரிடம் ஒருவர் பேசாமலேயே என்றால்...,யார்தான் நம்புவார்கள்? பாருங்கள், இந்த மனித மனங்களின் விசித்திரத் தன்மையை என்னவென்று சொல்வது? நினைத்தாலே ஆச்சரியமாக இருக்கிறது.

"என் அம்மா எங்கேயோ இமயமலைச்சாரலில் உள்ள ஒரு ஏரியில் காஷ்மீர் முஸ்லீம் குடும்பத்தில் பிறந்தார்களாம். எங்கள் அப்பா கல்கத்தா நகரில் ஒருபெரிய மாளிகையின் ஏழாவது மாடியில் பிறந்தார். அவர்கள் இருவரும் அன்பால் ஒன்று பட்டார்கள்; கல்கத்தா நகரம் அவர்களை வெறுக்கவே இங்கே வந்துவிட்டார்கள்.

"நான் ஷீமகா ஆஸ்பத்திரியில் பிறந்து வளர்ந்து பம்பாயில் படித்துத் தேறினேன். உங்கள் அப்பா எங்கே பிறந்தார்களோ?

எந்த ஊரில் வளர்ந்தார்களோ? அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தார்கள்; நீங்கள் பிறந்தீர்கள்! அதற்குப்பிறகு எங்கு எங்கு படித்தீர்களோ? எப்படி எப்படி வளர்ந்தீர்களோ? நாம் இருவரும் கொஞ்சமும் நினைத்துப் பார்க்கவில்லை. கற்பனைக்கும் எட்டாத இந்த அதிசய உறவு நமக்குள் நம்மையறியாமலே உண்டாகியிருக்கிறது. எங்கேயோ ஒரு சிறு கிராமத்தில் பிறந்து வளர்ந்த நீங்களும் கன்னட நாட்டில் எங்கேயோ ஒரு காட்டின் இடையில் ஆஸ்பத்திரியில் பிறந்து எந்த எந்த சூழ்நிலையிலோ வளர்ந்து படித்த நானும் இந்தத் தனித்த இடத்தில் பட்டப்பகல் பன்னிரெண்டு மணி நேரத்தில் இப்படி வாழ்க்கையை ஆரம்பிப்போம் என்று நாம் நினைத்திருக்க முடியுமா? அல்லது, எத்தனையோ ஆண்டுகட்கு முன்பு இந்த மண்டபத்தை உருவாக்கிய சிற்பிதான், இந்த ஆண்டு இந்த மாதம் இந்தத்தேதி இன்னகிழமை இத்தனை மணிக்கு எங்கெங்கேயோ பிறந்த இரு உள்ளங்கள் ஒன்று சேர்ந்து தங்கள் இல்வாழ்வை இந்த மண்டபத்திற்குள் துவங்கப் போகின்றன என்று கற்பனை செய்து பார்த்திருக்க முடியுமா?"

வரதன், சுரபாலாவின் பேச்சில் உள்ள ஆழ்ந்த கருத்தை அணு அணுவாகச் சுவைத்துக் கொண்டிருந்தான்.

வானம் கருத்து மழை பெய்ததால் மழைநீர் செம்மண் தரையைக் கரைத்துக் கொண்டு செம்மை நிறமாக மாறி சுனை நீருக்குள் கலந்தது.

அதைக்கண்ட சுரபாலா எழுந்து சென்று, செம்மை நிறமாக மாறியிருந்த மழை நீரைக் கையில் அள்ளிக்கொண்டு அவனிடம் வந்து, "இதோ பாருங்கள். வானத்தில் சூழ்ந்திருக்கும் மேகத்தில் மழை நீர் சூல் கொள்கிறது. பூமியில் செம்மண் இருக்கிறது. எங்கேயோ ஆகாயத்தில் இருக்கும் அந்த மழைநீர் தரையில் இருக்கும் இந்த செம்மண்ணுடன் ஒன்று கலந்து செம்மண்ணின் நிறமான சிவப்பு நிறத்தை அடைகிறது. செம்மண்ணும் நீரின் தன்மையான தண்மையைப் பெறுகின்றது. மறுபடியும் நீரிலிருந்து சிவப்பு நிறத்தைத் தனியாகவும் செம்மண்ணிலிருந்து நீரின் குளிர்ச்சியைத் தனியாகவும் பிரிக்க முடியாதபடி இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று ஐக்கியமாகி விட்டுள்ளன; அதைப் போலத்தான், நெடுந்தொலைவுக்கு அப்பால் வெவ்வேறு இடங்களிலும் சூழல்களிலும் பிறந்த நம் இதயங்களும் ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாதபடி ஒன்றுசேர்ந்து விட்டன..."

வரதன் குறும்புப் புன்னகையுடன் சுரபாலாவின் கன்னத்தைத் தட்டி, "வெரி குட்...வெரிகுட் அற்புதமான விளக்கம்...அபாரமான உவமை" என்றான்.

எவ்வளவு அதிகம் படித்துப் பட்டம் பெற்ருல்தான் என்ன? பெண் பெண்தானே......

சுரபாலா, கையிலிருந்த நீரை அவன் முகத்தில் இறைத்து விட்டு நாணம் மேலோங்க அவனைக் கட்டித் தழுவிக்கொண்டாள்.

வரதன், "நான் கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக இங்கு வந்தேன். சுரபாலா! அடுத்த திட்டம் என்ன சொல்...?" என்ருன்.

"ஒரு ராஜிஞமா கடிதம் எழுதிவிட்டு, இங்கேயே ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடம் ஆரம்பியுங்கள். சித்திரக்கல் துருக்கத்திலும், சுற்றிலும் உள்ள இரயில்வே ஸ்டேஷன்களிலும் வேலை செய்யும் தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்குத் தமிழ் சொல்லிக் கொடுக்க முடியாமல் அதிக துன்பப்படுகிருர்கள். நான் பள்ளிக்கூடம் ஆரம்பிப்பதற்கான வசதிகளைச் செய்து தருகிறேன்" என்ருள்.

"அது சரி, முக்கியமான ஒன்றை மறந்து விட்டாயே, சுரபாலா!"

"என்ன...?"

"நம் திருமணம்...!"

"அந்தக் கவலை இனிமேல் நமக்கு வேண்டாம். எங்கள் அப்பா அதையெல்லாம் கவனித்துக் கொள்வார். எழுந்திருங்கள் போகலாம்!"

வரதன் எழுந்திருப்பதற்குத் தன் தளிர்க் கையைக் கொடுத்து உதவிஞள், டாக்டர் சுரபாலா எம். பி. பி. எஸ்.!!

கரு: குறுந்தொகை.

"காதல்"

கொரியா

தென்னகத்தைப் போலவே கொரியா என்ற நாட்டின் வரலாறும் மிக மிகப் பழமையானது. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்தகுடி மக்களான கொரியர்கள் பண்பிலும் கலைகளிலும் கலாசாரத்திலும் பெருமை பெற்று விளங்கினார்கள்.

ஆழ்கடலில் மூழ்கியிருந்த தமிழ் நிலத்தை அகத்தியர் மீட்டதுபோல், தான்-குன் என்ற பெரியார் கொரியாவை மீட்டு எடுத்ததாக அந்த நாட்டுப் புராணங்கள் கூறுகின்றன. மேற்கேயுள்ள மஞ்சூரியாவிலிருந்து வந்த கிஜா என்ற மன்னர், கொரியாவில் முதல் அரசை அமைத்ததாகவும் அவருடைய வம்சாவளியினர்தான் தென் கொரியர்கள் என்றும் நம்புகிறார்கள்.

தமிழ் நாட்டிலே சேர சோழ பாண்டியர்கள் இலக்கியத்தையும் கலைகளையும் பண்பையும் பக்தியையும் வளர்த்து தமிழகத்தைச் சிறப்பித்தது போல கொரியாவிலும் கோ குர்யோ, சில்லா, பேக்கி ஆகிய மூன்று அரச பரம்பரையினர் நல்லாட்சி நடத்தி பண்பையும் தொழில்களையும் போற்றி வளர்த்தனர். வட பகுதியில் கோகுர்யோ இனத்தவர்கள் வீரத்திலே சிறந்து விளங்கி, நாட்டின் மீது படையெடுத்தோரை விரட்டி அடித்தனர். சில்லா இனத்தவர்கள் அரசியல் கலையில் சிறந்து விளங்கினர். சீனாவிலுள்ள டி-ஆங் வம்சத்தினருடன் உறவு கொண்டு மற்ற அரசாங்கங்களை வென்று பேரரசாகத் திகழ்ந்தனர்.

இந்த சில்லா வம்சத்தினரின் முந்நூறாண்டு ஆட்சியில் கொரியாவின் இலக்கியமும் கலைகளும் உச்ச நிலையை எய்தின. புத்த மதம் பரவியது. கன்பியூஷியஸ் தத்துவங்களும் நிலைபெற்றன. பெரும் கோயில்களும் புத்தவிகாரங்களும் தோன்றின. சித்திரக் கலையும் சிற்பக் கலையும் தலைசிறந்து விளங்கின.

கொரியா நாட்டின் இயற்கை எழிலே அந்த நாட்டு மக்களை ரசிகர்களாகச் செய்து விட்டது. 'வைகறையின் அமைதி' என்று அதற்குப் பெயர் வைத்தார் முதல் மன்னர் கிஜா. இயற்கையின் எழிலைப் பற்றிய கவிதைகள் ஏராளம். 'நாங்கள் ஆசியா கண்டத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் எங்கள் பண்பும் கலாசாரமும் தனியானவை' என்பதை எடுத்துக் காட்டுவது போலவே கொரியா ஆசியா கண்டத்தோடு இணைந்தும் அதனின்று தனித்தும் ஒரு தீபகற்பமாகக் காட்சி தருகிறது. வடக்கு எல்லையில் உள்ள யுலு நதி அதைச் சீனாவிலிருந்து பிரிக்கிறது. ருஷ்யாவுடனும் 11 மைல் எல்லையுண்டு. கிழக்கே ஜப்பானியத் தீவுகள். கொரியாவிலுள்ள மலைத்

தொடரை வைரமலை என்றழைக்கிறார்கள். கிழக்குப் பகுதியில் மலைக்கும் கடலுக்கும் அதிக இடைவெளி இல்லாததால் செங்குத்தான நீர்வீழ்ச்சிகள் அதிகம். ஆகவே கொரியாவுக்கு அளவற்ற இயற்கை மின்சார வசதி கிடைக்கிறது.

உண்மையாகவே பொன் விளையும் பூமி அது. கன இரும்பு, கிரானபடிஸ் டங்ஸ்டன், வெள்ளி, தாமிரம் போன்ற கனிவளம் ஏராளம்.

சீரும் சிறப்புமாக வாழ்ந்த இந்த நாட்டின் மீது ருஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் மோகம் ஏற்பட்டது. போட்டி போராக மாறியது. 1910ல் ஜப்பான் வெற்றி பெற்று கொரியாவை முழுதுமே ஆக்கிரமித்துக் கொண்டு அடிமையாக்கியது.

அது முதல் இரண்டாவது உலக யுத்தம் முடியும் வரை கொரியா ஜப்பானிய ஆதிக்கத்தில் பொருளாகாரச் சுரண்டலுக்கு உள்ளாகியது. அது மட்டுமல்ல. சீனு மீது போர் நடத்த கொரியாவை ஒரு ராணுவ தளமாகவே ஜப்பான் பயன்படுத்தி வந்தது.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஜப்பான் ஜெர்மனியுடன் சேர்ந்து மேற்கு வல்லரசுகள் மீது போர் தொடுத்தது. ருஷ்யா அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் நேச நாடாக நின்று ஜப்பான் மீது போர்தொடுத்துக் கொரியாவில் படை எடுத்தது. 38 ரேகைக்கு வடக்கேயுள்ள கொரியாவை ரஷ்ய ராணுவம் கைப்பற்றிக் கொண்டது. தெற்குப் பகுதியை அமெரிக்க ராணுவம் கைப்பற்றிக் கொண்டது.

பிறகு கொரியாவுக்கு சுதந்திரம் அளிப்பது பற்றி மாஸ்கோவில் மாநாடு நடந்தது. ஆனல் கொரியாவின் நிர்வாகத்தை யாரிடம் ஒப்படைப்பது என்பது பற்றி இரு நாடுகளிடையே தகராறு ஏற்பட்டது. ருஷ்யா வட கொரியாவிலிருந்த ஜப்பானிய அதிகாரிகளை எல்லாம் விரட்டி, மக்கள் மன்றங்கள் அமைத்து, ருஷ்ய முறையில் ஒரு தனி சர்க்காரை வட கொரியாவில் அமைத்தது. மேற்கு நாடுகள் ஐ நா.வில் கொரியா சுதந்திரப் பிரச்னையைக் கொண்டு வந்தன. ஆனல் ருஷ்யா ஐ. நா. வுடன் ஒத்துழைக்க மறுத்து விட்டது.

ஆகவே தென் கொரியாவுக்கு மட்டும் ஐ. நா. கமிஷன் மேற்பார்வையில் தேர்தல் நடந்தது. 1948ல் அமெரிக்கா தென் கொரியர்களிடம் அதிகாரத்தை ஒப்படைப்பதாகப் பறை சாற்றியது. அமெரிக்காவில் தஞ்சம் புகுந்து, அங்கேயே செல்வந்தராகி வாழ்ந்த சிங்மன் ரீ என்பவரைக் கைப் பொம்மையாகக் கொண்டு கொரியா சர்க்காரை நிறுவியது. இவ்வாறு வட கொரியா கம்யூனிஸ்டுசார்புள்ள அரசாங்கத்தின் கீழும், தென்கொரியா அமெரிக்கக் கையாளான சிங்மன் ரீ அரசாங்

கத்தின் கீழும் இரு கூறுகப் பிரிந்து விடடது. கொரியா மக்கள் இதை விரும்பவில்லே. ஒன்ருக இணைந்து வாழவே விருமபுகின்றனர்.

வட கொரியாவில் ஜனத் தொகை மிகக் குறைவு. நிலப் பரப்போ அதிகம். வேலேக்கு ஆள் கிடைப்பதே கஷ்டம. அங்குதான் கொரியாவின் பெரிய மின்சார நிலேயங்கள் அமைந்துள்ளன. கனி வளமும் அதிகமாயுளளன.

தென் கொரியாவில் ஜனத் தொகை அதிகம். விவசாய நிலம் அதிகமிருப்பதால் உணவும் அங்கேதான் உற்பத்தியாகிறது. ஆனல் வேலே இல்லாத் திண்டாடடம் அதிகம்.

திடீரென்று 1950ல் வட கொரிய புரட்சிக்காரர்கள் தென் கொரியா மீது படை எடுத்தனர். இவர்களே விரட்ட அமெரிக்க ராணுவம் விரைந்தது. அதோடு, ஐ. நா. பாதுகாப்புச் சபையில் வட கொரியா மீது ஆக்கிரமிப்புப் புகார் செய்தன மேற்கு நாடுகள். அநதச் சமயத்தில் பாதுகாப்புச் சபையை ருஷ்யா பகிஷ்கரித்திருந்ததால் ஐ நா. தலேமையில, படை அனுப்பி, வட கொரியர்களே விரடடும் தீர்மானத்தை மேறகு நாடுகள் சுலபமாக நிறைவேற்ற முடிநதது.

இதைக் கண்ட கம்யூனிஸ்டு சீன சினம் கொணடது. தொண்டர்கள் எனற பெயரில் சாரிசாரியாக சீனத் துருப்புக்களே வட கொரியர்களின் உதவிக்கு அனுப்பியது. கொரியாப் போர் உலக நெருக்கடியாக மாறியது.

இந்தச் சமயத்தில்தான் இந்தியா போன்ற நடுநிலேமை நாடுகள் உதவியால் ஜெனிவாவில் யுத்தநிறுத்த ஒப்பந்தததுக்கு ஏற்பாடு செய்யபபட்டது. சீனவும் அம் மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. யுத்தம் நின்றது. ஆனல் கைதிகள் பரிவர்த்தனே விஷயத்தில் மீண்டும் தகராறு மூண்டது.

இப்பிரச்னேயைச் சமாளிக்க ஐ. நா. ஆதரவில் மற்றெரு சர்வ தேசக் கமிஷன் நியமிக்கப்பட்டது. சொந்த நாட்டுக்குத் திரும்பிச் செல்ல விரும்பாத கைதிகளே ஒரு நடுநிலேமை நாட்டில் கொணடு வந்து சேர்த்து, அவர்கள் விருப்பம் போல வேறு எங்காவது குடியேற்ற முயற்சிகள் நடந்தன. கொரியா பற்றிய சர்வ தேச நெருக்கடி ஒருவாறு ஓய்ந்தது!

ஆனல் தென் கொரியாவில் ஜனதிபதியாக வந்த சிங்மன் ரீயின் அதிகார வேட்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. தேர்தலில் தாமும் தம் கட்சியினருமே வெற்றி பெறுவதற்காக எதிர்க் கட்சிகளே யெல்லாம் நிர்மூலமாக்கப் பல சூழ்ச்சிகள் கையாள[ப்] பட்டன ஆயிரக்கணக்கான வாக்காளர்கள குழி வெட்[டிப்] புதைக்கப்பட்டனர். [...] போலீஸ் புரிந்த அக்கிர[...]

அமெரிக்கர்களையே திகைக்கச் செய்தன. ஆனால் அமெரிக்கா ஆட்சேபிக்கக் கிளம்பினால் "கம்யூனிஸ்டு பூச்சாண்டி"யைக் காட்டி மிரட்டுவார் சிங்மன் ரீ.

தென் கொரிய மக்கள் மேலும் சிங்மன் ரீயின் அக்கிரமங்களைச் சகிக்கத் தயாராக இருக்கவில்லை. முக்கியமாகக் கொரியாவிலுள்ள மாணவர்கள் கொதித்தெழுந்தனர். ரீயின் இருப்பிடத்தை முற்றுகை யிட்டனர்.

இறுதியில் சிங்மன்ரீ பதவியை விட்டு விரட்டப்பட்டார். நாட்டில் நேர்மையான தேர்தல் நடத்தப் பட்டது. ஜப்பானியர் காலத்தில் விடுதலைப் போர் நடத்திய டாக்டர் ஜான் சாங் பிரதமரானார். பல சீர்திருத்தங்களைச் செய்து ஓரளவு நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த முயன்றார் அவர். அதற்குள் தான் திடீரென்று ராணுவப் புரட்சி ஏற்பட்டது.

தென் கொரிய ராணுவத்தில் சுமார் ஆறு லட்சம் வீரர்கள் இருக்கிறார்கள். இதைத் தவிர 23000 வீரர்களைக் கொண்ட அமெரிக்க ராணுவம் வேறு இருக்கிறது. உலகத்திலேயே ருஷ்ய ராணுவத்துக்கு அடுத்த படியான எண்ணிக்கை கொண்டது இந்தக் கொரிய ராணுவம் தான். தென் கொரியாவின் வருமானத்தில் பாதிக்கு மேல் இதற்கே செலவாகி விடுகிறது. கம்யூனிஸ்டு பயம் காட்டித்தான் இவ்வளவு ராணுவத்தையும் வைத்துக் கொண்டிருந்தார் சிங்மன்ரீ. ஆனால் உண்மையில் தன் அதிகாரத்தை நிலைக்கச் செய்யவே ராணுவத்தைப் பயன்படுத்தினார். இதில் மூன்றில் ஒரு பங்கைக் குறைத்துச் சிக்கனம் செய்யத் திட்டமிட்டார் பிரதமர் சாங். இது ராணுவத்தினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியதில் ஆச்சரியமில்லை. ராணுவம் குறைக்கப்பட்டால் பிறகு அவர்கள் பிழைப்பது எப்படி? அதனால்தான் ராணுவத் தலைவர்கள் புரட்சி நடத்தி அதிகாரத்தைக் கைப்பற்றி யிருக்கிறார்கள்.

கொரியாவின் புது ராணுவ சர்க்கார் படையைக் குறைக்காமல் ராணுவத்தினரைக் காப்பாற்றலாம். ஆனால் நாட்டில் வறுமையையும்பிணியையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்காத வரை அங்கு இது போன்று எத்தனைப் புரட்சிகள் வேண்டுமானாலும் ஏற்படலாம்.

—"ஆநந்த விகடன்"

பால் கொடுக்கும் பலன்

பால் பழம்பெருங் காலந் தொட்டே மனித சமுதாயத்தின் முக்கியமான உணவாக் மட்டுமல்லாமல் முதன்மையான உணவாகவும் இருந்துவருகிறது. ஒவ்வொருவரும் தாயின் வயிற்றிலிருந்து வெளித் தோன்றியவுடன் உட்கொள்ளும் முதல் உணவு பால்தான். வாலில்லாக் குரங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு மாறிய முதல் மனிதன் எளிதாகப் பெற்றுக்கொள்ள முயற்சித்த முதல் உயர்ந்த உணவு பாலேயாகும். உயிர் வாழ்க்கைக்கேற்ற உணவுச்சத்து முழுவதையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் ஒரு பெரும் உணவுப் பொருள் பாலேயாகும் என்பதை, உலகில், எல்லா நாட்டிலும், எல்லாக் காலத்திலும் எல்லோரும் நன்கு அறிந்து கொண்டு, அதனை உட்கொண்டு வந்திருக்கின்றனர்.

உயிரினத்திடமிருந்து இயற்கையாய் நமக்குக் கிடைக்கும் உணவுப்பொருள் பால் ஒன்றுதான். விலங்கு—பறவை இனங்களின் இறைச்சியோ அல்லது முட்டைகளோ நமக்கு இயற்கை விதிப்படி ஏற்பட்ட உணவுப் பொருள்கள் ஆகா. பால் ஒன்றுதான் இயற்கை விதிப்படி உயிரினத்திடமிருந்து வந்த மனிதனுக்கான உணவுப்பொருள் ஆகும். உடல் நலத்திற்கும், உடல் உறுதிக்கும், உடல் வளர்ச்சிக்கும் ஏற்ற உணவாக அவனி முழுவதும் ஏற்றுப் போற்றிக் கொள்ளப்பட்ட உணவுப் பொருள் பால் என்றால் மிகையாகாது.

பால், உணவுப்பொருள் எல்லாவற்றிலும் மிகச்சிறந்த அரும் பெரும் உணவாகக் கொள்ளப்படுவதற்கு, அதனிடத்தே பொதிந்து கிடக்கும் அரிய உட்கருத்து என்னவென்றால், அதனிடத்திலுள்ள கொழுப்பு மற்றெல்லாப் பொருள்களிடத்தும் காணப்படும் கொழுப்பைக் காட்டிலும் எளிதில் செரிக்கக்கூடியதாகும். அதைத்தவிர அதனிடத்தே இயற்கையாகவே இயற்கை விதிப்படி அமைந்த சர்க்கரை, புரோட்டீன், ஏ-பி1-பி2 சி-டி (A-B1-B2-C-D) வைட்டமின்கள், சுண்ணம்பு, பிறகனிகள் ஆகியவைகள் தேவைக்கேற்ற வகையில் வளமாக இருக்கின்றன. ஒரு குவளைப் பால் இரைப் பையிலே கிடந்து செரிக்க ஒரு மணி நேரந் தான் பிடிக்கும்; ஆனால் அதே அளவு ரொட்டி செரிக்க $2\frac{1}{2}$ மணி நேரமும், இறைச்சி செரிக்க $3\frac{1}{2}$ மணி நேரமும் பிடிக்கின்றன. பாலை எப்படிக் குடிப்பது என்பதைப் பொறுத்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவியபோதிலும், அதனை மெல்ல மெல்லச் சப்பிச் சப்பிச் சாப்பிடுவதைக் காட்டி

னும் சீராகக் கடகடவென்று குடிப்பது பெரும்பாலோர்க்கு நலம் பயப்பதாகும். மூச்சுத் தாங்கமுடியாத குழந்தைகள் வேண்டுமானால் மெல்ல மெல்லச் சப்பிச் சாப்பிட வேண்டியிருக்கக்கூடும். அதனைக் கட கட என்று சாப்பிடுவதன் மூலம் மிக விரைவில் செரிக்க வைக்க வழி ஏற்படுகிறது. மெல்லச் சாப்பிடுவதால், இரைப்பையில் பெரும் அளவுக்குத் தயிர்க்கட்டிகள் உருவாகி, அவைகள் செரிமானத்தைக் காலந்தாழ்க்கும்படி செய்து விடுகின்றன. பால் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச் செரிமானம் ஆகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவாகப் பசியும் ஏற்பட்டுவிடக்கூடும். எவ்வளவுக்கெவ்வளவு காலந்தாழ்ந்து செரிமானம் ஆகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பசியும் காலந்தாழ்ந்து ஏற்படக்கூடும். எனவே விரைவாகச் செரிக்க வேண்டாம் என்று கருதுபவர்கள் பாலைச் சப்பிச்சப்பியும், விரைவாகச் செரிக்க வேண்டும் என்று கருதுபவர்கள் பாலைக் கடகட என்றும் குடிக்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.

பாலின் அருமை பெருமைகளெல்லாம், எல்லோராலும் பாடப்பட்டும், போற்றிப் புகழப்பட்டும் வந்த போதிலும்கூட, பலரைப் பொறுத்து அது விதிவிலக்காக அமைந்து விடவும் செய்கிறது. அமெரிக்காவில் ராச்செச்டர் என்னுமிடத்திலுள்ள மேயோ கிளினிக் (Mayo clinic, Rochester, U. S. A.) ஆராய்ச்சி செய்து பால் சிலருக்கு ஆகாத உணவாக ஆகிவிடுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு ஐந்து பேர்களிலேயும் ஒருவருக்குப் பால் எளிதில் செரிமானமாக முடியாத உணவாகவும், ஒவ்வொரு பதினைந்து பேர்களிலேயும் ஒருவருக்கு அது நஞ்சாகவும் அமைந்து விடுகின்றதாம்.

உலகம் முழுவதும், பால் என்னும் போது, அது பசும்பாலைத் தான் குறிக்கும். மனிதன் சாப்பிடப் பழகியிருக்கும் பல்வேறு வகைப் பால்களைக் காட்டிலும் பசும்பால், கொழுப்புச்சத்து மிக வாக உடையது என்று கூறமுடியாவிட்டாலும், மனிதனுக்குத் தேவையான அளவு கொழுப்புச் சத்து, பசும்பாலில் இருக்கிறது என்றே கூறவேண்டும். பொதுவாகப் பசுவின் பாலை எடுத்துக் கொண்டால், அதன் ஒரு காலன் எடை சுமார் 10 32 பவுண்டு இருக்கும். ஒரே காலன் பாலில் 144 அவுன்சு (16 அவுன்சு ஒரு பவுண்டு) தண்ணீரும், 6 அவுன்சுக் கொழுப்பும், 6 அவுன்சு புரோட்டீனும், $7\frac{3}{4}$ அவுன்சு சர்க்கரையும், $1\frac{1}{4}$ அவுன்சு கனிப்பொருள்களும் கலந்திருக்கின்றன.

பாலிலே கலந்திருக்கும் கொழுப்புச் சத்துக்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்தினால் வியப்புக்குரிய பல்வேறு உண்மைகள்

வெளிப்படும். பசுவின் பாலைக் காட்டிலும் வெள்ளாட்டுப் பாலில் கொழுப்பு நூற்றுக்கு: ஐம்பதிலிருந்து நூறு விழுக்காடு அதாவது அரைப்பங்கிலிருந்து ஒரு முழுப்பங்கு மிகவாகக் கலந்திருக்கிறது. செம்மறியாட்டுப் பாலில் மேலும் நூற்றுக்கு ஆறு விழுக்காடு கொழுப்புச்சத்து மிகவாகக் கலந்திருக்கிறது. செம்மறியாட்டுப் பாலை அருந்தும் பழக்கம் உலகின் பல பகுதிகளில் இருந்து வருகிறது. மான்களின் பாலிலும், கழுதைகளின் பாலிலும் கொழுப்பு மிகமிகக் குறைவாக இருக்கிறது; பசும்பாலில் இருப்பதில் நூற்றுக்கு இரண்டு விழுக்காட்டிற்கும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பால்களில் சில நோய்களைப் போக்குவதற்கும், குழந்தைகளின் நலிவை நீக்குவதற்கும் ஆன மருந்துச்சத்துகள் அடங்கியிருக்கின்றன. வேல் என்ற ஒரு வகைக் கடல் உயிரி(பிராணி)யின் பாலில்தான் மிகவான கொழுப்பு இருக்கிறது. பசும்பாலிலுள்ள கொழுப்பைக் காட்டிலும் ஆறு மடங்கிலிருந்து இருபது மடங்கு வரையிலும் மிகவான கொழுப்பு வேலின் பாலில் காணப்படுகிறது. வேலின் பாலில் சர்க்கரைச்சத்து சிறிதும் இல்லை; ஆனால் புரோட்டீன் பசும்பாலிலிருப்பதைக் காட்டிலும் இரண்டிலிருந்து மூன்று மடங்கு மிகவாகத் தென்படுகிறது. வேலின் பால் எண்ணெய்ப் பசையுடையதாகவும், மஞ்சள்நிறமுடையதாகவும் இருக்கும்.

83 வகை உயிரினங்களின் பால்களை ஆராய்ந்தறிந்து பார்த்ததில் மனித இனத்தின் பால்தான் மிக வியப்புக்குரிய தன்மைகளைக் கொண்டதாக இருக்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது மூளை வளர்ச்சிக்கான கிளர்ச்சியூட்டும் சத்துக்கள் மனித இனத்தின் பாலில்தான் தேங்கிக்கிடக்கின்றன.

மேலை நாடுகளில் மிக அண்மைக்காலம் வரையில் வெள்ளாட்டின்பால் ஒதுக்கப்பட்ட ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது. அதனால் ஏற்படும் நன்மைகளை இப்பொழுதுதான் சிறிதளவு உணரத் தலைப்பட்டுப் பயன்படுத்த முற்பட்டுள்ளனர். 1952—53 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, உலகம் முழுவதும் உள்ள மக்கள் அருந்தும் பாலில் நூற்றுக்கு 65 விழுக்காடு வெள்ளாட்டின் பாலாகும். வெள்ளாட்டின் பால் பசுவின் பாலைக் காட்டிலும் கொழுப்பு, புரோட்டீன் ஆகியவைகளில் மிகுதியான அளவினைக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல், எளிதாகச் செரிக்கக் கூடியதாகவும் குறைந்த செலவில் பெறக்கூடியதாகவும் இருக்கிறது. ஒரு நல்ல பசுவையும், நல்ல வெள்ளாட்டையும் எடுத்துக் கொண்டால் வெள்ளாடு தன் எடை அளவு பாலைப் பத்து நாட்களில் கொடுக்கிறது; ஆனால் பசு தன் எடை அளவு பாலைக் கொடுக்கப் பன்னிரண்டு

நாட்கள் பிடிக்கின்றன. அது மட்டுமல்லாமல், வெள்ளாடு கொடுப்பது போன்று மூன்று மடங்கு பாலைப் பசுவினிடம் பெறவேண்டுமானால், வெள்ளாட்டிற்கு வைப்பது போன்று ஐந்து மடங்கு தீனி வைக்கவேண்டியிருக்கிறது. மேலும் வெள்ளாட்டுப் பால் தீய கிருமிகள் அணுக இயலாத தன்மையைக் கொண்டிருக்கிறது. தாய் உயிரிகளிடமிருந்து குழந்தை உயிரிகள் பாலைச் சப்பிச் சாப்பிடுவதால் அத்தகைய பால், எத்தகைய கேட்டிற்கும், காற்றில் மிதக்கும் எத்தகைய தீய கிருமிகளின் நுழைவிற்கும் இடங்கொடுக்காத வகையில் தூய தன்மை படைத்ததாக இருக்கிறது.

பால் கெட்டுப் போகாமலும், அதனிடத்தில் தீய கிருமிகள் அணுகாவண்ணமும் பல நாட்கள் வரையில் பாதுகாத்துக் கொள்ளும் அறிவியல் முறைகள் பல, இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாலைத் தூளாக ஆக்கிப் பயன்படுத்தும் முறை பண்னெடுங் காலமாகவே இருந்து வருகிறது. நாடுவிட்டு நாடு நாடோடிகளாகத் திரிந்துகொண்டிருந்த மங்கோலியர்கள், காய்ந்த பால் தூளை தோற்பைகளில் அடைத்துக்கொண்டு சென்று, வழிப்பயணத்தில் பயன்படுத்திக் கொண்டனர் என்ற குறிப்பை **மார்க்கோ போலோ** என்ற சுற்றுப்பயண வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார்.

பாலினால் பெறப்படும் பலன்கள் பலப்பல. உடலுக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் அதனுள் அடங்கியுள்ளன. குழந்தைகளின் முதல் உணவும் முக்கிய உணவும் அதுதான் அது உடலை வளர்க்கிறது; உறுதியைப் பயக்கிறது; உவகையை அளிக்கிறது; வயது முதிர்ந்தவர்களைக் காப்பாற்றுகிறது; உணவுகளிலெல்லாம் உயர்ந்ததொரு உணவாக விளங்குகிறது!

—"மன்றம்"

(40-ம் பக்கத் தொடர்ச்சி)

தொல்லைகளிலிருந்து நமக்கு விடுதலை அளித்துவிட்டு, நமக்காகச் சிந்தனை செய்யும் பெரியவர் ஒருவர் இருந்தால், அவரிடம் நம்பிக்கை வைத்து வந்தால் போதும் என்று நினைக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

உபயோகிக்காமல் இருந்து வரும் காரணத்தினால் சிந்தனா சாதனங்கள் துருப்பிடித்துக் கெட்டழியும் ஆபத்தும் வேறு இருக்கிறது என்றார்.

சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் தமக்குள்ள பொறுப்புகளை நிறைவேற்றும் பொருட்டுச் சுயமாக சிந்தித்துச் செயல்பட்டு வரும் தனிப்பட்ட பிரஜைகளே ஜனநாயகத்தை உண்மையானதாக ஆக்குபவர்கள் என்றும் உப-ராஷ்டிரபதி கூறினார். புத்தி பூர்வமாகச் சிந்திக்கும் சூழ்நிலை இல்லையேல், இந்த நிலைமை உருவாவது சாத்தியமில்லை என்றார்.

(தினமணி)

சோஷலிஸம் சர்வாதிகாரமாக மாறும் ஆபத்து இருக்கிறது

உப–ராஷ்டிரபதி எச்சரிக்கை

சிந்திக்கும் தனி நபர்களே இதற்கு எதிராகப் பாதுகாப்பு என்கிறார்

பம்பாய், நவ. 5— இந்திய சமூகத்திலுள்ள ஜனநாயக சக்திகளைவிட சோஷலிஸ சக்திகளினகை மேலோங்குமானல், சோஷலிஸம் சர்வாதிகாரமாகவும் பிற்போக்குத்தனமாகவும் மாறிவிடக் கூடிய பேரபாயம் இருந்து வருகிறது என்று உப ராஷ்டிரபதி டாக்டர் ஜாகிர் ஹுஸேன் இன்று எச்சரித்தார்.

பம்பாயிலுள்ள 4 ரோட்டரி சங்கங்களின் கூட்டுக் கூட்டத்தில் அவர் பேசினார்.

மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித தன்மையுடன் கூடியவர்கள். உண்மையைப் புறக்கணித்து விட்டு, அவர்களை ஒரு சமூகப் பிரிவைச் சேர்ந்தவர்களாக மட்டுமே மதிக்கும் போக்கு அரசியல் வாதிகளிடம் காணப்படுவதால் தான் இந்த ஆபத்து தோன்றியுள்ளது என்றார்.

சர்க்காரானது அரசியல் வாதிகள் இயங்குவதற்கான ஒரு சாதனம். அதனல் தானகை ஜனநாயகத்தைத் தோற்றுவிக்கவோ பலப்படுத்தவோ முடியாது என்பதைத் தனிப்பட்ட பிரஜைகள் உணர வேண்டுமென்றார். எனவே, சர்க்காரை வழிகாட்டிச் செலுத்தி வர பிரஜைகள் முயல வேண்டும். ஜனநாயகத்தில் சர்க்காரானது மக்களின் ஏஜெண்டே ஒழிய, மக்களின் யஜமானன் அல்ல என்றார்.

இந்திய சமூகம் சர்வாதிகாரமாகவோ, அல்லது பிற்போக்குத் தனமானதாகவோ இராதபடி பார்த்துக் கொள்வதற்குள்ள சிறந்த பாதுகாப்பு சிந்தனை சக்தியுடன் கூடிய தனி நபர்கள் தான் என்றார்.

அவர் மேலும் கூறியதாவது: ஆனல் துரதிருஷ்டவசமாக இந்தியாவில் சுயமாகச் சிந்திப்பதென்பது அரிய தொரு கலையாகி விட்டிருக்கிறது. சிந்திக்கும் வம்பு நமக்கேன் என்று பலர் வாளாவிருந்து விடுகின்றனர். நமது முன்னேர்கள் தமக்காக மட்டுமின்றி, நமக்காகவும் சிந்தித்து வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள் என்பது அவர்கள் நினைப்பு.

மற்றும் சிலரோ இந்த வீண்

(39–ம் பக்கம் பார்க்க)

மதுரை மாவட்டம்

உதவிபெறும் தனியார் பள்ளி நிர்வாகிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மாநாடு

30–11–1963–ல் நிறைவேற்றின

தீர்மானங்கள்

A. *ஆசிரியர்கள்*

1. ஆசிரியர் மாணவர் விகித அதிகரிப்பு.

ஒரு ஆசிரியருக்கு 1:20 ஆக இருந்த மாணவர் விகிதம் திடீரென 1:35 ஆக அதாவது 75% சதவிகிதம் உயர்த்தப்பட்டது. அதிலிருந்து இப்பொழுது 1:45 ஆக அதாவது முதலிலிருந்து வந்த விகிதத்தைக் காட்டிலும் $1\frac{1}{4}$ மடங்கு அதிகமாக (20 என்பது 45 ஆக) உயர்த்தப்பட்டிருப்பது ஆசிரியர்களுக்குத் தாங்க முடியாத வேலைப்பளுவாக இருப்பதால் அவர்களுக்குத் தங்கள் வகுப்புகளில் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டுவது, பாடத் திட்டத்தில் கண்ட அளவு கல்வியைப் போதிப்பது, திருப்தி கரமான தேர்ச்சியைக் காட்டுவது ஆகியவைகளில் அளவிடமுடியாத சங்கடங்களும்; நிர்வாகிகளுக்கு வகுப்பு அறைகளை விசாலப் படுத்துவது, ஆசனப் பலகைகளை அதிகப்படுத்துவது, உபகரணங் களைப் பெருக்குவது போன்ற வகைகளில் ஏற்படும் செலவினங்களால் மிகுந்த சங்கடங்களும் உண்டாகின்றபடியால் ஆசிரியர் மாணவர் விகிதத்தை 1:20 ஆகத் திருத்தி உததரவிடுமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

2. பாடத்திட்டம்.

உயர்நிலைப் பள்ளியின் பாடத்திட்டமே உயர்துவக்கப்பள்ளி வகுப்புகளிலும் (ஆறும், ஏழாம், எட்டாம்) அனுசரிக்கபபடுவதால் அரசினரின் புது மாணவர் விகிதாச்சாரம் உயர்நிலைப்பள்ளிகளி லுள்ள ஆறும், ஏழாம், எட்டாம் வகுப்புகளில் அமுலாகாதிருப் பதுபோல உயர்துவக்கப்பள்ளிகளிலும் இருக்கவேண்டும் என்று அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

3. சம்பள வித்தியாசம்.

ஒரே படிப்பும் தகுதியும் உள்ள செக்கண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கு (90+15; 65+15) வித்தியாசமான சம்பள விகிதம் நடைமுறையில் இருந்து வருவது வருந்தத்தக்கது.

குறைந்த விகித சம்பளத்தில் வேலை செய்துவரும் ஆசிரியர்களிடம் மனப்பூர்வமான முழுச் சேவையை நிர்வாகிகளால் எதிர்பார்க்க முடியவில்லை. ஆகையால் இந்த சம்பளவிகித வித்தியாசத்தை உடனடியாக ரத்துச்செய்து, செக்கண்டரி கிரேடு ஆசிரியர் அனைவருக்கும் ஒரே விகிதப்படி (90+15) சம்பளத்தைத் திருத்தி அமைக்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

4. ஆசிரியர் சேமநல நிதியில் கட்டாயப் பிடித்தம்.

அகவிலை உயர்வால் தாங்கமுடியாத சங்கடத்திலிருக்கும் குறைந்த சம்பளம் பெறுகின்ற ஆசிரியர்களிடம், அவசர தேசிய நிதிக்காகக் கட்டாயமாகப் பிடிக்கப்பட்டுவரும் அதிகப்படியான ஆசிரிய சேமநல நிதியை உடனடியாக ரத்துச் செய்து, இதுவரை பிடித்த தொகையை ஆசிரியர்களுக்குத் திருப்பிக் கொடுத்துவிட உத்தரவிடுமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

5. ஓய்வு கால உதவி மானியம் (பென்ஷன்)

முப்பது ஆண்டுகளுக்கும், அதற்கு மேலும் நாட்டு மக்கள் அறிவு வளர்ச்சிக்காக வேலைசெய்து ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கு ரு 8-50; 9-00; 10-50; என்கிற மிகக் குறைந்த அளவில் உதவி மானியம் கொடுக்கப்படுவது மிகவும் வருந்தத் தக்கது. நாட்டுக்காக ஒரு வேலையும் செய்யாத வயோதிகர்களுக்கு முதிர் வயது உதவி மானியமாக மாதம் ரூ. 20 கொடுக்கப்பட்டு வருகிறது. ஆகையால் ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கு முதிர் வயது மானியம் இருபது ரூபாயோடு அவர்கள் அடிப்படைச் சம்பளத்தில் $\frac{1}{4}$ பாகம் சேர்த்தும், இந்த உதவி மானியத்தோடு N.G.O.-க்களுக்கு வழங்கப்படும் பஞ்சப்படி விகிதமும் கூட்டி ஓய்வுகால உதவி மானியமாகக் கொடுத்துவர வேண்டும் என்று அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

6. வீட்டு வாடகை வைத்திய உதவி.

நகரசபைப் பள்ளிகளில் வேலைசெய்துவரும் ஆசிரியர்களுக்கு வீட்டு வாடகை, வைத்திய உதவி, வழங்கப்படுவதுபோல உதவி பெறும் தனியார் நிர்வாகப்பள்ளி ஆசிரியர்களுக்கும் இத்தகைய வசதிகளை வழங்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

7. கைத்தொழில் ஆசிரியர் சம்பள வித்தியாசம்.

கைத்தொழில் ஆசிரியர் தகுதிக்கு ஏற்ற படிப்புள்ள கைத்தொழில் ஆசிரியர்கள் உயர்நிலைப்பள்ளியில் வேலை செய்தாலும்,

உயர் துவக்கப்பள்ளியில் வேலை செய்தாலும் அவர்களுக்கு ஒரே விகிதத்தில் சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்றும், உயர் துவக்கப் பள்ளிகளில் வேலைசெய்யும் கைத்தொழில் ஆசிரியர் அனைவரையும் முழு நேர ஊழியர்களாகவே பாவிக்கவேண்டு மென்றும், சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிபெற்ற கைத்தொழில் ஆசிரியர்களை T.S.L.C. பரீட்சை எழுத M.E.R.—ல் அனுமதி வழங்கியிருப்பதுபோல இதர கைத்தொழில் ஆசிரியர்களுக்கும் இந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்றும் அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

8. போதனு மானியத்தைத் திடீரென நிறுத்துதல்.

பள்ளி நிர்வாகிக்கும், கல்வி இலாக்காவுக்கும் சில சமயம் ஏற்படும் தகராறு காரணமாக முன்னறிவிப்பில்லாமல், ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் போதனு மானியத்தைத் திடீரெனக் கல்வி அதிகாரிகள் நிறுத்திவைப்பதால் ஆசிரியர்கள் பெரும் அவதிக்குள்ளாக நேரிடுகிறது. ஆகையால் இந்த விபரீத முறையை நிரந்தரமாக விட்டுவிடும்படி கல்வி அதிகாரிகளுக்கு உத்திர விடுமாறு மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

B. பள்ளி நிர்வாகிகள்

9. ஆசிரியர் நியமனம்.

ஒரு வகுப்பில் மாணவர் வருகை 35—க்கு மேற்பட்டால் இரண்டு ஆசிரியர்களை நியமனம் செய்துகொள்ளவும்; 35—க்கு குறைவாக உள்ள வகுப்புகளின் வருகையை ஒன்று சேர்த்து, சராசரி வருகை 20—க்கு ஒரு ஆசிரியர் விதம் நியமனம் செய்து கொள்ளவும் பள்ளி நிர்வாகிகளை அனுமதிக்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

10. ஆசிரியர் நியமனத்தில் அரசினர் செய்திருக்கும் புதுத் திருத்தத்தால் பள்ளி நிர்வாகிகள் தங்கள் அடிப்படை உரிமையை அகாரணமாக இழந்து நிற்கும் அவலநிலை கொண்டிருப்பதால், இப்புதிய திருத்தத்தை உடனடியாக ரத்துச் செய்து, முன்போலவே ஆசிரியர் நியமனத்தைப் பள்ளி நிர்வாகிகளே செய்துவரும்படி உத்தரவு அளிக்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

11. மாணவர் சம்பள மானியம்.

மாணவர் சம்பள மானியத்தில் அரசினர் செய்திருக்கும் புதிய திருத்தத்தால் பள்ளி நிர்வாகிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்

கிறார்கள். ஆகையால் காலநிலையை அனுசரித்து உடனடியாக இப்புதிய திருத்தத்தை ரத்துச் செய்து, முன் அளித்துவந்த அளவுக்குக் குறையாமல், மாணவர் சம்பள மானியம் வழங்கி வருமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது. அண்மையில் கனம் முதலமைச்சர் அவர்கள் சட்டசபையில் மாணவர்கள் சம்பள சலுகையைக் கூட்டுவது பற்றி ஆலோசிப்பதாகக் கூறியதற்கு இம்மாநாடு நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

12. முந்தின ஆண்டுகளில் வழங்கப்பட்ட மாணவர் சம்பள மானியத்தை பள்ளி நிர்வாகிகள் பள்ளிகளுக்கே செலவு செய்தபின் ஆடிட் ஜெனரல் ஆட்சேபணைக் காரணமாக வைத்து நடப்பு ஆண்டில் கொடுக்கப்படும் மானியத்தில் முன்கொடுத்த மாணவர் சம்பள மானியத்தைப் பிடித்தம் செய்யும் முறையால் நிர்வாகிகள் பெரிதும் பாதிக்கப் படுவதால் இம்முறையை உடனடியாகக் கைவிடுமாறு மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களையும், அரசினரையும் இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

13. பஞ்சாயத்து யூனியன்களில் தனியார் பள்ளிநிலை.

பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள உதவிபெறும் தனியார் நிர்வாகப் பள்ளிகளுக்கு பஞ்சாயத்து கமிஷனர்கள் மூலமாக போதனைமானியம் (T.G.) நிர்வாகமானியம் (M. G.) வழங்குதல், ஆசிரியர்களை நியமனம் செய்தல், வகுப்புப் பிரிவுகளுக்கு நிதி ஒப்புதல் வழங்குதல், புதிய வகுப்புகள் திறக்க அங்கீகாரம் வழங்குதல் போன்ற அலுவல்களை எல்லாம் உடனடியாக ரத்துச்செய்து பஞ்சாயத்து யூனியனுக்கும் தனியார் நிர்வாகப் பள்ளிகளுக்கும் முன்போல எவ்வித சம்பந்தமுமில்லாமல் கல்வி இலாக்காவே நடத்திவரவும், ஆசிரியர் நியமனத்தைப் பள்ளி நிர்வாகிகளே முன்போல செய்துவரவும் உத்திரவிடும்படி அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

14. அரசினர் கல்வி இயக்குநர் உத்தரவுகள்.

ஒரு பள்ளி ஆண்டின் மத்தியிலாவது, இறுதியிலாவது அரசினரும், மாநிலக்கல்வி இயக்குநர் அவர்களும் விடுக்கும் புதிய உத்தரவுகளால் பள்ளி நிர்வாகத்திலும், பள்ளி வேலையிலும் பல சங்கடங்கள் ஏற்படுவதால் எல்லாப் புதிய உத்தரவுகளையும் பள்ளி ஆண்டுத் துவக்கத்திலேயே பிறப்பித்து விடுமாறு அரசினரையும், மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களையும் இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

15. நீண்டகாலமாக இருக்கும் தற்காலிக அங்கீகாரம்.

உயர் துவக்கப் பள்ளிகள் துவக்கிப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் அவைகளைத் தற்காலிக அங்கீகாரத்தில் வைத்துக் கொண்டிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கது. ஒவ்வொரு ஆண்டிலும் தற்காலிக அங்கிகாரத்தைப் புதுப்பிக்க வேண்டிய நிலையும், சங்கடங்களும் ஏற்படுவதால், ஐந்து ஆண்டுகள் நிறைவானவுடன் உயர் துவக்கப் பள்ளிக்கு நிரந்தர அங்கீகாரம் வழங்கிவிடும்படி கல்வி அதிகாரிகளுக்கு மாநிலக் கல்வி இயக்குநர் அவர்கள் உடனடியாக உத்தரவிடுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

16. கல்வி இலாக்கா உத்தரவுகள் கிடைப்பதில் காலதாமதம்.

கல்வி இலாக்கா அவ்வப்போது விடுத்துவரும் உத்தரவுகள் பெரும்பாலும் பள்ளி நிர்வாகிகளுக்கு ஒழுங்காகக் கிடைப்பதில்லை. சில சமயம் சில உத்தரவுகள் பள்ளி நிர்வாகிகளுக்கு உடனே வழங்கப்படாமல் காலதாமதம்செய்து, ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் வாசிக்கப்பட்டுவருகிற பழக்கத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும்; ஒவ்வொரு உத்தரவும் பள்ளி நிர்வாகிகளுக்கு அவ்வப்போது கிடைக்கத் தகுந்த ஏற்பாடு செய்யும்படியும் மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

17. மாணவர் சம்பளமானியம் பெருத உயர் துவக்கப் பள்ளிகள்.

1953-*ஆம் ஆண்டிற்குப் பிறகு உயர்துவக்கப் பள்ளிகளான அநேக நல்ல பள்ளிகளுக்கு மாணவர் சம்பளமானியம் ஆறு, ஏழு, எட்டு வகுப்புகளுக்கு வழங்கப்படாமல் இருந்து வருவது வருந்தத் தக்கது. மாணவர் சம்பளமானியம் பெற்றுவரும் மூந்தின உயர் துவக்கப் பள்ளிகளைப்போலவே தங்கள் பள்ளிகளையும் பிந்தின நிர்வாகிகள், மிகுந்த சிரமத்தோடு, சீராக வைத்துக்கொண்டு கஷ்டப்படுகிறார்கள். தற்கால நிலையை அனுசரித்து, வித்தியாசம் பாராட்டாமல்* 1954-*க்குப் பின் துவக்கப்பட்ட எல்லா உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் மாணவர் சம்பளமானியம் வழங்குமாறு மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.*

18. நிர்வாக மானியம்.

இம்மாநிலத்தில் மாவட்டக் குழுக்கள் இயங்கிவந்த காலத்தில் தனியார் பள்ளிகளுக்கு 50 *சதவிகிதம் நிர்வாகமானியம் வழங்கப்பட்டு வந்தது. அது நாளடைவில்* 25 *சதவிகிதமாகக் குறைந்தது.*

இந்தக் கல்விக்குழு நீக்கப்பட்டபின் நிர்வாக மானியம் 15 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. தற்சமயம் அது 10 சத விகிதமாக நடைமுறைக்கு வந்திருக்கிறது. இந்தப் பத்து சத விகிதமும் பூரணமாக நிர்வாகிகளுக்குக் கிடைக்கவில்லை. கால நிலையை அனுசரித்து இந்த நிர்வாக மானியத்தை 15 சதவிகிதமாவது உயர்த்திக் கொடுக்கும்படி அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

19. மதிய உணவு மானியம்.

1957 இலவச மதிய உணவுத் திட்டம் அமுலுக்கு வந்தது. அது முதல் இதுவரை சாப்பாடு ஒன்றுக்கு 6.ந. பைசேவாக அரசினரால கொடுக்கப்பட்டு வருகிறது ஆனால் கள்ளர் சீர் அமைப்புப் பள்ளிகளிலும், ஹரிஜன சேமநல பள்ளிகளிலும் சாப்பாடு ஒன்றுக்கு 15 ந. பைசேவாகக் கொடுக்கப்பட்டுவருகிறது. கால நிலையை அனுசரித்தே 15 ந. பைசேவீதம் எல்லாப் பள்ளிகளுக்கும் எவ்வித வித்தியாசமும் பாராட்டாது வழங்கும்படி அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

20. பிரசவ உரிமை விடுதிகளில் பதில் ஆள் நியமனம்.

நகரசபை, பஞ்சாயத்து யூனியன், அரசினர், தனியார் துவக்கப்பள்ளிகள், உயர் துவக்கப்பள்ளிகளில் பிரசவவிடுதி, உரிமை விடுதிகளில பதில் ஆசிரியர்கள் நியமனம் செய்தலை மாவட்டக் கல்வி அதிகாரிகளை செய்யவேண்டும் என அரசினர் உத்தரவு கூறுகிறது. இதனல் அதிக காலதாமதமும், இரண்டு மூன்று வகுப்புகளை ஒரே ஆசிரியர் கவனிக்கவேண்டிய நிலையும் ஏற்படுகிறது. இச்சங்கடங்களைப் போக்க முன்போல நிர்வாகிகளை விடுதி இடங்களில் ஆசிரியர்களை நியமிக்க உத்தரவு அளிக்குமாறு அரசினரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

மேலே கண்ட தீர்மானங்களை அரசினர் நன்கு பரிசிலனை செய்து ஆவன செய்ய வேண்டுமென்று இம்மாநாடு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறது.

30—11—1963 சனிக்கிழமை நடைபெற்ற

மதுரை மாவட்டம்

உதவிபெறும் தனியார் பள்ளி நிர்வாகிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள்

மாநாட்டில்

மதுரை மாவட்டச் சங்க உபதலைவர்

உயர்திரு. K. பிச்சையா அவர்கள்

ஆற்றிய

வரவேற்புரை.

கண்ணியம் மிக்க தலைவர் அவர்களே! பாராட்டிற்குரிய பள்ளி நிர்வாகிகளே!

பெருமைமிக்க பெற்றோர்களே! மதிப்பிற்குரிய ஆசிரியர் பெருமக்களே!

கல்வி இலாக்கா அதிகாரிகளே!

முதலிடை கடைச்சங்கங்களைத் தன் அகத்தே அடக்கி வளர்த்து, இயல், இசை, நாடகங்கட்கு நிலைக்களனாகவும், நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமேயென சிவபிரானுடன் வாதிட்ட புலவர் பெருந்தகை நக்கீரர் போன்ற தமிழ் வல்லுநர்கள் பலர் வாழ்ந்த இடமாகவும், வையை என்னும் பொய்யாக் குலக்கொடியின் கரையில் அங்கயற்கண் அம்மையின் அருட் கோயில் அமைந்துள்ள புனிதத் திருத்தலமாகிய இவ்வாலவாய் நகரின் கண் மிகக் குறுகிய காலத்தில் அனுப்பிவைக்கப்பட்ட எங்கள் அழைப்பை நன்குமதித்து, மதுரை மாவட்டத்திலிருந்தும், இதர மாவட்டங்களிலிருந்தும் திரளாக வருகைதந்துள்ள அனைவருக்கும் எனது அன்புகனிந்த வணக்கம்.

பாரத நாட்டிலுள்ள மாநிலங்களில் குறிப்பாக சென்னைநிலமே சகல துறைகளிலும் முன்னணியில் நிற்பதால் பாரத கண்டத்தின் திலகமாக விளங்குகின்றது. கல்வித்துறையிலும் அவ்வாறே குறிப்பிடத்தக்க சிறப்பான இடத்தை நமது மாநிலம் தனக்கே உரிமையாக்கிக் கொண்டிருக்கின்றது நமது இந்திய சர்க்கார் வகுக்கும் திட்டங்களுக்கும் இலக்கணம் அமைத்து, உருவமும், அழகும், ஊட்டுவதில் நமது மாநில அரசினருக்கு இணையாக இயம்பக் கூடிய மாநில அரசு வேறு எதுவுமில்லை என்பது நாடறிந்த உண்மை.

நமது மாநில அரசினர் கல்வித்துறையில் அவ்வப்போது தோற்றுவிக்கும் சீர்திருத்தங்களுக்கு முகமும், மனமும் கோணமல் ஊக்கமும், ஆக்கமும் தேடியளிப்பதில் தனியார் நிர்வாகப்பள்ளிகளே சிறப்பான இடம் வகித்து வருகின்றன. பள்ளிச் சீரமைப்புத்திட்டம் மதிய உணவுத்திட்டம், சீருடைத்திட்டம், மாணவர் படிப்பு மேற் பார்வைத் திட்டம், ஞானத் தந்தை திட்டம், பள்ளிப் பூங்காத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களுக்குத் தனியார் நிர்வாகப் பள்ளிகள் ஆக்கமும், வெற்றியும் தேடித்தந்திருப்பதற்கு வழிகாட்டி யாக மாநிலக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு அடுத்தபடியாக நமது மண்டலக் கல்வி அதிகாரி உயர்திரு. K. வெங்கிடசுப்ரமணியம், M. A. B. T. அவர்கள் விளங்கினர் என்பது மிகையாகாது.

நமது மாநில அரசும் நமது பள்ளிகளின் சேவையை நன் குணர்ந்து, நன்குமதித்து வழங்கியிருக்கும் நன்கொடைகளுக்கு நமது அரசினரை வாயார வாழ்த்தாமலும், பாராட்டாமலும் இருக்க முடியாது. நமது பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வுகால வயதை 55-லி ருந்து 60 ஆக்கும் ஓய்வுகால ஊதியம் வழங்கும் திட்டத்தை அமைத்து; சம்பள விகிதத்தையும், பஞ்சப்படி விகிதத்தையும் (1960ல்) உயர்த்தி; அவர்களின் சேவையை நன்குமதித்துப் பாராட் டும் சின்னமாக விருதுகள், அரசாங்கப் பரிசுகளை வாரி வழங்கிக் கொண்டு வருகின்றனர். பெற்றோர்களின் பொருளாதாரப் பல வீனங்களைக் கவனித்து 1 முதல் 8-வகுப்புகளுக்கு இலவசக் கல்வியை வழங்கியிருக்கின்றனர். 3-வது வகுப்பில் இருந்தே உலக மொழியாக விளங்கும் ஆங்கிலத்தைக்கற்கும் வசதியை ஏற்படுத்தி யிருப்பதோடு, அடுத்து வரும் ஆண்டிலிருந்து 11-வது வகுப்புவரை இலவசக் கல்வி அளிப்பதற்குத் தீவிர ஏற்பாடுகளும் நமது அரசினர் செய்து கொண்டிருக்கின்றனர். தனியார் நிர்வாகப்பள்ளிகள் அளித்து வரும் கல்வித்தரம் உயர்வானதாக இருப்பதை நமது மாநில மக்களும், கல்வி அதிகாரிகளும், அரசினரும் ஒப்புக்கொண்டிருப் பதற்கு, முன்னாள் இந்தியக்கல்வி அமைச்சர் உயர்திரு ஸ்ரீமாலி அவர்கள் " தனியார் பள்ளி நிர்வாகிகளின் ஊக்கத்தையும் உற்சாகத் தையும் பெருக்க நமது அரசினர் தக்க உதவியளிப்பது இன்றியமை யாதது " என்று கூறின வார்த்தைகளே தக்க சான்றாகும்.

இவ்வாறு பள்ளிகளில் கடமையும், பொறுப்பும் உணர்ந்து திறம் படப்பணியாற்றிவரும் நிர்வாகிகள் மறைந்தவுடன் சேவை செய்ய முடியாதவாறு, அண்மையில் நமது அரசினர் விடுத்திருக்கும் உத்தர வுகள் தடைபோட்டிருக்கின்றன. இதனால் ஏற்பட்டிருக்கும் சிக்கல்களுக்கும், சங்கடங்களுக்கும் பரிகாரம் காணும் நோக்கத் தோடே இம்மாநாட்டைக் கூட்டியிருக்கின்றோம். இந்த மா

நாட்டில் உருவாக்கப்படும் தீர்மானங்களுக்கு ஆக்கமும், ஆதரவும், மனமுவந்து வழங்குமாறு கனம் முதலமைச்சர் அவர்களையும், மாநிலப் பொதுக்கல்வி இயக்குநர் அவர்களையும் உங்கள் சார்பில் மிகப் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இந்த மாநாட்டுக்குத் தலைமைதாங்க இசைந்து வருகை தந்திருக்கும் உயர்திரு. W. P. A. R. சந்திரசேகரன் அவர்களையும், நாட்டுக்கொடி ஏற்றிவைத்த உயர்திரு. K. லட்சுமிநரசிம்மன் அவர்களையும் மாநாட்டைத் துவக்கிவைத்த சங்கை S. தேவப்பிரகாசம் அவர்களையும், இப்பொழுது சொற்பெருக்காற்றி நமக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களைக் களையவும், நமது நிலையை அரசினருக்கும், கல்வி இலாக்கா அதிகாரிகளுக்கும் நன்கு விளக்கிக் கூறிப்பரிகாரம் பெற்றுத்தரவும் இவண் எழுந்தருளியிருக்கும் பேரறிஞர்களையும், உங்களனைவரையும், வாரீர்! வாரீர் என்று நன்றிகனியும் மனமார வாழ்த்தி வரவேற்கின்றேன். உங்களுக்குத் தென்படும் வசதிக் குறைகளைப் பொருட்படுத்தாது பெரும் மனதுகொண்டு பொறுத்து, கடைசிவரையிருந்து இம்மாநாட்டை வெகுசிறப்பாக நடத்திவைக்குமாறு கேட்டுக்கொண்டு எனது வரவேற்புரையை உங்கள் சமூகத்தில் சமர்ப்பிக்கின்றேன். ஜெய்ஹிந்த்!

(13–ம் பக்கத் தொடர்ச்சி)

வலதுசாரி வெறியர்கள் இருவரது வழிகளையும் விட்டு நாம் விலகிவிடுவோம்; வெறுப்பே உருவாக இருப்பவர்கள், கொள்கை வெறியர்களாக இருப்பவர்கள் இவர்களிடமிருந்து நாம் விலகிச் செல்வோம்; சட்டத்தை அலட்சியம் செய்பவர்களிடமிருந்தும், நமது தேசிய ரத்தத்தில் நஞ்சூட்டுபவர்களிடமிருந்தும் விலகிச் செல்வோம்.

நமக்கு ஏற்பட்ட துக்க நிகழ்ச்சியும் அது நம்மை வதைக்கும் இக்கோர நாட்களும் தோழமையில் புதிதாய் நம்மைப் பிணைக்கும் என்றும், துக்க நேரத்தில் ஒரே மக்களாக நம்மைச் செய்யும் என்றும் நான் நம்புகிறேன். எனவே, ஜான் பிட்ஸ்ஜெரல்டு கென்னடி வாழ்ந்ததும் மறைந்ததும் வீணாகப் போகவில்லை என்று இங்கு நாம் மாண்பு மிக்க உறுதி செய்துகொள்வோமாக. நன்றி தெரிவிக்கும் நாளுக்கு முன் தினத்தில், இறைவனின் ஆசியை வேண்டி நாம் இங்குக் கூடியிருக்கையில் நாம் அவருக்கு நன்றி தெரிவித்துப் பின்வரும் அருமையான வாக்கியங்களின் படி ஒன்று சேருவோமாக:

“அமெரிக்கா, அமெரிக்கா,
இறைவன் உன் பால் கருணை
பொழிந்தனன்; ஒரு கடல் முதல்
ஒளிரிடும் மறு கடல் ஈறாக
அனைவரும் அண்ணன் — தம்பி;
உன்னரும் நலனுக்கெலாம்
அஃதே அழகு செய் மணி முடி.”

திருடுகின்ற சிறுவர்கள்

குழந்தை உளவியல் அறிஞர் மேரி ஹைறன்மன்

எத்தனை திருட்டுகள் நடக்கின்றனவோ கிட்டத்தட்ட அத்தனைக் காரணங்கள் அவற்றுக்கு இருக்கின்றன. திருடும் சிறுவனைக் கேட்டுத்தான் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும. அவனை அன்போடு நடத்தினால்தான், தவறான பாதையினின்று நேரான பாதைக்கு அவனை இழுத்து வர இயலும்.

சிறுவர்கள் இடையேயும் குமரப் பருவத்தைக் கடந்து கொண்டிருக்கும் பையன்கள் இடையேயும் காணப்படுகின்ற சாதாரண குற்றம் திருட்டு. எதையோ இழந்து விட்டது போலத் தவிக்கிற சிறுவன் திருடத் தொடங்குகிறான். பெரும்பாலான சிறுவர்கள் மற்றவர்கள் நேசம் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்பதற்காக, நேசத்தைத் திருடிப் பெற முடியாத காரணத்தால், வேறு திருட்டில் இறங்கி விடுகிறார்கள். பொறாமை, பொச்சரிப்பு, மனக் கசப்பு, பழிவாங்கும் வேகம், சுக வேட்கை, பெருமித உணர்ச்சி இவைகளே திருட்டுக்கு அடிப்படையாகப் பெரும்பாலும் அமைந்துவிடுகின்றன.

இளம் உள்ளங்களின் நேர்மைக் குறைவைத் தற்காலச் சமுதாய நிலைமையின் தவிர்க்க வொண்ணாத விளைவாகச் சொல்லலாம். வீட்டில் போதிய கவனிப்பின்மை, தெருவில் சுயேச்சையாகத் திரிவது, செய்தித்தாள்கள், சினிமாப் படங்கள்—இவையெல்லாம் முரட்டுத்தனத்தை நியாயம் என்று காட்டுகின்றன. இதன் விளைவாக, நேர்மையும் அனுசரிப்பும் கண்ணியமும் சோதாக்கள் குணமென்றும், பலசாலிகள் இவற்றைக் கருதிக் கூடப் பார்க்கக் கூடாது என்றும், இவற்றை அவர்கள் வெறுத்து ஒதுக்க வேண்டும்என்றும்சிறுவன் முடிவு கட்டிவிடுகிறான்.

எத்தனை திருட்டுக்கள் நடக்கின்றனவோ, கிட்டத் தட்ட அத்தனைக் காரணங்கள் அவற்றுக்கு இருக்கின்றன. திருடும் சிறுவனைக் கேட்டுக் கேட்டுத் தான் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் அவனை அன்போடு நடத்தினால் தான், தவறான பாதையினின்று நேரான பாதைக்கு அவனை இழுத்து வர இயலும். சிறுவனுடைய வீட்டுச் சூழ்நிலை பள்ளிச் சூழ்நிலை இவற்றையும் தெளிவாக உணர்ந்துகொண்டு, பெற்றோர்கள், உடன் பிறந்

தோர்கள், பள்ளி ஆசிரியர்கள் இவர்களுடைய ஒத்துழைப்பும் கிடைத்தால் மட்டுமே இக் காரியத்தில் வெற்றியை எதிர்பார்க்கலாம். திருட்டைக் கண்டு பிடிக்காமல் விட்டு விட்டால், சிறுவனுக்கு இன்னும் துணிச்சல் உண்டாகிவிடுகிறது. பெரிய, பெரிய திருட்டுக் காரியங்களில் இறங்கி விடுகிறான். அதனால் கிடைக்கும் பொருள்களை வெறிப்போக்கோடு அனுபவிக்கத் தொடங்குகிறான். கைக்கு வந்ததைப் பத்திரமாக வைத்துக் கொள்வோம் என்று திருட்டுச் சிறுவன் நினைப்பது துர்லபம்.

செய்தித்தாள்கள், சினிமாப் படங்கள், டெலிவிஷன் காட்சிகள், அவனுக்கு இவ்விஷயத்தில் ஊக்கம் ஊட்டுகின்றன. மாட்டிக்கொண்டால் தண்டனை கிடைக்குமே என்று திருட்டுச் சிறுவன் நினைத்துப் பார்ப்பதில்லை. தொழிலுக்கு என்றுள்ள இயல்பான ஆபத்து அது என்று அவன் மனதைத் தேற்றிக்கொண்டு விடுகிறான்.

போலீசைக் காட்டிலும், சமூகத்தில் மற்றவர்களைக் காட்டிலும் தாங்கள் வலிமை மிக்கவர்கள் என்று காட்டத் திருடும் சிறுவர்கள், கையில் இல்லாத குறையினால் திருடுவதில்லை. இவர்களில் பெரும்பாலோர் நல்ல, வசதியான குடும்பத்தில் பிறந்திருப்பார்கள். பின் ஏன் இவர்கள் திருடவேண்டும்? பெற்றவர்கள் அன்பும் ஆசையுமாக இல்லையே என்கிற ஏக்க உணர்ச்சி, அப்பா அவரும் மோகமுமாக இப்படிப் பறக்கிறாரே என்று அவரிடத்தில் ஒரு வெறுப்பு, சொந்தச் சகோதரனோ சகோதரியோ தன்னைக்காட்டிலும் சூட்டிக்கையாக இருப்பதனால் ஏற்படும் பொறாமை, பள்ளிப் பயிற்சியில் தோல்வி, ஏதோ ஒரு தாழ்வு மனப்பான்மை ஆகியவற்றை எத்தனையோ காரணங்களில் சிலவாகக் குறிப்பிடவேண்டும். இது மாதிரி அவதிக்கு உள்ளாகும் சிறுவர்கள் ஒன்றாகச் சேர்ந்து கொண்டு விடுவார்கள். பிறகு திருட்டுத் தொழில் கூட்டு முயற்சியாகவும் நடக்கும்.

திருட்டுப் புத்தி படைத்த சிறுவனுக்குப் பள்ளியில் எல்லாம் ஒழுங்காக நடக்கும்வரையிலும் அவனைச் சுலபமாக மனத்தத்துவ ரீதியில் சீர்படுத்தி, நல்வழிக்குத் திருப்பிவிடலாம். இக் காரியத்தில் பள்ளி ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் தேவை. ஆனால் பள்ளிக்கூடத்திலேயும் வீட்டிலேயும் கட்டு மீறிய தத்தாரியாகி விட்டால், ஆசாமியைத் திருத்தி, வழிக்குக் கொண்டுவருவது கடினம். முரட்டுத்தனமும் திருட்டுப் போக்கும் அதிகரித்து விடும். இப்பேர்ப்பட்ட சிறுவனை மற்றவர்கள் மாதிரி சாதாரணமாக வாழ்வதிலும் இன்பமும் ஆதாயமும் இருக்கின்றன என்று உணரப் பண்ணுவதற்கு நிறையப் பொறுமை, நல்லெண்ணம், செல்வாக்கு இவைகள் வேண்டும்.

சில உதாரணங்கள் சொல்லுகிறேன். பீட்டருக்கு வயது பதினொன்று. பார்க்க ஒரு மாதிரியாகத்தான் இருப்பான். வகுப்பில் மற்ற மாணவர்களுக்கு இவனைக் கண்டால் பிடிப்பதில்லை. பென்சில், தபால் தலை, மிட்டாய் முதலியவற்றை அடிக்கடி அவர்களுக்குக் கொடுக்கிறான். இருப்பினும், அவர்கள் இவனை விரும்பமாட்டேனென்கிறார்கள். ஒருநாள் மாணவர்கள் எல்லாம் சேர்ந்து சேமித்து வைத்திருந்த பொதுப் பணம் திடீரென்று குறைந்திருப்பதைக் கண்டார்கள். அதற்குச் சில நாட்களுக்குப் பிறகு, மாணவன் ஒருவனுடைய கோட்டுப் பையில் கையைவிட்டுப் பீட்டர் துழாவுவதைப் பார்த்து விட்டார்கள். அந்தப் பையன் தன் பணம் குறைகிறது என்று புகார் பண்ணவும், பீட்டரைச் சோதித்துப் பார்த்தார்கள். திருட்டுப் போன தொகை அவனிடம் இருப்பதைக் கண்டு கொண்டனர்.

கட்டிய கணவனை இழந்து விட்டுத் தனித்து வாழும் அவன் அன்னைக்குச் சொல்லிப்போட்டார்கள். அவளும் பள்ளிக்கூடத்துக்கு வந்தாள். நடந்த விவரங்களை அறிந்ததும் மனத்தத்துவ நிபுணரிடம் தன் பையனை அழைத்துக்கொண்டு போய்க் காட்டுவதாகச் சொன்னாள். வீட்டிலும் இந்தப் பீட்டர் திருடுகிறான் என்றும் சவுக்கடி பட்டும் அவன் புத்தி திருந்தி ஒழுங்குக்கு வரவில்லையென்றும், மாறாக வர வர மோசமாகிக்கொண்டு வருகிறான் என்றும் தகவல் தெரிவித்தாள். மூத்த மகன் பீட்டர் மாதிரி இல்லாமல் சாதுவான பையனாக இருப்பதில் அவளுக்கு ஓர் ஆறுதல். முதல் காரியமாக, கொஞ்ச நாட்களுக்குப் பீட்டரை அடிக்காமல் இருக்கவேண்டும் என்று அவளிடம் சொன்னார்கள்.

மனத்தத்துவ நிபுணர் பீட்டரைப் பார்த்தார். அவரிடத்தில் பீட்டருக்கு நம்பிக்கை விழுந்து விட்டது. அதன்பேரில் அம்மா தன்னை அடித்ததனால் வீட்டில் திருடினதாக அவரிடம் அவன் மனம்விட்டுச் சொன்னான். "அம்மாவுக்கு என்னிடம் துளிக்கூட ஆசை கிடையாது; பிரியம் எல்லாம் லெஸ்லி பேரில்தான். என் சுபாவம் கெட்ட சுபாவம் என்பது வாஸ்தவம். என்னை அடிக்கிறாள், எனக்குக் கோபம் வருகிறது, அந்த வேகத்தில் வீட்டில் திருடுகிறேன், அப்படி எடுத்த பணத்தைக்கொண்டு மிட்டாய் வாங்கித் தின்னும்போது, அவள் கொடுமையெல்லாம் எனக்கு மறந்து போய் விடுகிறது" என்றான் பீட்டர். பாவம்! நெஞ்சில் நிறையும் கசப்பை மாற்றிக்கொள்ள மிட்டாய் அவனுக்கு வேண்டியிருக்கிறது!

வீட்டில் பீட்டர் அன்பை நாடினான்; அது கிடைக்கவில்லை. பள்ளிக்கூடத்தில் அன்பைத் தேடினான்; அங்கும் அது

கிடைக்கவில்லை. பென்சில், தபால் தலை முதலியவற்றைக் கொடுத்தும் அவனை மற்ற பையன்கள் விரும்பவில்லை. "அன்பு நமக்குக் கிடைக்க வில்லையே!" என்கிற இதய ஏக்கமே அவனுடைய முரட்டுத் தனத்துக்கும் திருட்டுக் குணத்துக்கும் அடிப்படையான காரணம் என்பதைப் படிப்படியாக அவன் உணரும்படிப் பண்ணி யாகிவிட்டது.

வீட்டில் அன்னை பீட்டரை அடிப்பதை நிறுத்திவிட்டு, அவன் மாட்டு அன்பு காட்டலானாள். வீட்டு வேலைகளில் அவனுடைய உதவி ஒத்தாசைகளைக் கேட்டுப் பெற்று, அவனது முயற்சிகளை மெச்சிப் புகழ்ந்தாள். நெஞ்சில் நின்ற கசப்பு அவனுக்கு உடனே மாறிற்று. வக்கிரப் போக்கும் தாழ்வு மனப்பான்மையும் அவனை விட்டு மெதுவாக நீங்கின. மற்றவர்கள் மாதிரி வாழும் வாழ்க்கையிலும் சுகமும் சந்தோஷமும் காணலாம் என்பதை அவன் கண்டுகொண்டான். இத்தகைய வாழ்க்கை உபயோகமான வாழ்க்கை என்பதையும் அவன் உணர்ந்துகொண்டான்.

லண்டனில் சிறுவர் நன்னெறிச் சிகிச்சை இல்லம் ஒன்றிலே நான் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் பத்து வயதுப் பையன் ஒருவன் என்னிடம் வந்தான். கடையிலிருந்தும் தள்ளுவண்டியிலிருந்தும் சாமான்கள் திருடும் கெட்ட வழக்கம் உள்ள பையன். சிகிச்சைக்காகத்தான் என்னிடம் வந்திருந்தான். "மகாப் போக்கிரி, மோசத்திலும் மோசம்; முழு மோசம்!" என்றெல்லாம் பெயரெடுத்தவன். வந்தவனை உட்காரவைத்து "டிராஃபட்ஸ்" விளையாடினேன் அவனோடு. இந்த விளையாட்டில் இரண்டு முறைகள் ஜயிக்கும்படி அவனை விட்டுவிட்டேன். அதன் பிறகு மெதுவாகப் பேச்சுக் கொடுத்தேன். எவ்வித தயக்கமும் மனசில் இல்லாமல் எனக்கு அவன் தன்னைப்பற்றிய தகவல்கள் சிலவற்றைச் சொன்னான். இரட்டையாகப் பிறந்த சகோதரிகள் இருவர் அவனுக்கு இருக்கிறார்கள் என்றும் அவர்கள் அவனைவிட நாலு வயது சின்னவர்கள் என்றும் இவர்களுக்குத் தான் வீட்டில் செல்லம் அதிகம் என்றும் அவன் வாய்மொழி மூலம் அறிந்துகொண்டேன். "எத்தனை மணிக்குப் படுக்கப் போவாய்?" என்று கேட்டதற்கு "ஒன்பது மணி, பத்து மணி, சில சமயம் பதினொரு மணிகூட ஆகிவிடும்" என்றான். "அப்பொழுது உன் அம்மா உன்னை முத்தமிட்டு வாழ்த்துவதுண்டா?" என்று கேட்டேன். இதைக் கேட்டதும் அவன் முக பாவம் மாறிற்று. திடீரென்று சோகம் வந்து கவ்விக்கொள்ள, செருமத் தொடங்கிவிட்டான். முகத்தைக் கையால் மூடிக்கொண்டு, மேஜையில் சாய்ந்து, விம்மி விம்மி அழுதான். வாஸ்தவம், மகாப் போக்கிரிதான் இந்தப் பையன்!

எதை நாட்டத்தோடு தேடிக் காண இயலாமல் சிறுவன் தவிக்கிறான் என்பதை ஆராய்ந்து கண்டறிந்தவுடனே, வீட்டிலும் பள்ளியிலும் அவனுடன் மற்றவர்கள் அன்புடன் ஒத்துழைக்குமாறு பண்ணவேண்டும். பிறகு அவன் விருப்பத்தோடு வேண்டும் பொருள்கள் சிலவற்றை அவனுக்குக் கொடுக்கவேண்டும். வேண்டும் அளவுக்கு அன்பையும் அனுதாபத்தையும் நல்லெண்ணத்தையும் அவனிடம் காட்டினோமானால், சில நாளில் அவன் திருந்திவிடுவான்; மற்றவர்கள் மாதிரி ஒழுங்காக நடக்கத் தொடங்கி விடுவான். பழைய பாதை தவறான பாதை, அதில் மகிழ்ச்சி ஒன்றும் கிடையாது என்று நாம் காட்ட, அவனும் கண்டுகொண்டு விடுகிறானே!

அச்சத்தை வீட்டை விட்டும் பள்ளிக்கூடத்தை விட்டும் விரட்டிவிட்டு, எல்லாச் சிறுவர்கள மாட்டும் ஒரே அன்பைக் காட்டவேண்டும். பொறுப்பான வேலைகளைக் கொடுத்து, தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் அவர்களிடம் வளர்க்கவேண்டும். தங்களுக்கும் ஒரு மதிப்பு உண்டு என்று அவர்கள் உணரவேண்டும். இது மாதிரி சூழ்நிலையில் திருட்டுச் செயலில் இறங்கித் தன் முக்கியத்துவத்தை நிலைநாட்ட எந்தச் சிறுவனும் நினைக்கமாட்டான்.

ஒரு சமயம் ஆல்ஃப்ரெட் ஆட்லர் இவ்வாறு கூறினார்: "முறை திறம்பித் தவறான வழிக்குச் செல்லுவது சுலபம் என்று எவரும் எண்ணிவிட வேண்டாம்" (நல்வழி)

(64-ம் பக்கத் தொடர்ச்சி)

1961-ம் வருஷ மத்தியில் உலகின் ஜனத்தொகை 306·9 கோடியாகும் 1960-ம் வருஷத்துக்குப் பின்னர் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு 6·1 கோடி.

1950-லிருந்து 1961 வரையுள்ள 11 வருஷ காலத்தில் சுமார் 56 கோடி ஜனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இது இந்தியாவின் ஜனத் தொகையை விட அதிகம். இந்த அதிகரிப்பில் 60 சதவிகிதம் ஆசியாவில் ஏற்பட்டதாகும்.

தற்போது உலகின் ஒரு சதுர கிலோ மீட்டர்பரப்புக்கு 23பேர் வீதம் இருக்கிறார்கள். 10 வருஷத்துக்கு முன்னால் 18 பேர் வீதம் தான் இருந்தார்கள்.

உலகிலேயே ஜன நெரிசல் மிக மிக அதிகமாக உள்ள நாடு ஹாலந்துதான் அங்கு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 306 வீதம் இருக்கிறார்கள் அடுத்தபடியாக இங்கிலாந்தையும் வேல்ஸையும் சொல்லலாம்.

ஆஸ்திரேலியாவின் ஒரு சதுர கிலோ மீட்டருக்கு ஒருவருக்கும் குறைவான விகிதமே காணப்படுகிறது.

கடந்த 11 வருஷ காலத்தில் உலக ஜனத்தொகையில் காணப்படும் வருடாந்திர அதிகரிப்பு 1·8 சதவிகிதம் ஆகும்.

ஆனால் 1960-க்கும் 1961-க்கும் இடையில் 2 சதவிகிதம் ஆக அதிகரித்துள்ளது.

இந்தியாவின் முதலாவது பெண் முதலமைச்சர்

கொள்ளை, கொலை, கற்பழித்தல் போன்ற கொடுஞ்செயல்கள் தலைவிரித்தாடுகிற தருணத்தில்— அரசாங்கமும், ராணுவமும் ஸ்தம்பித்து இவற்றைத் தடுக்க வழி எதுவும் தோன்றாதிருந்த தருணத்தில் ஒரு பெண் இவற்றுக்கு மத்தியில் சென்று அமைதியை நிலைநாட்டத் துணிந்தாள் என்றால் அவளைக் கண்டு உலகம் வியக்காதா? ஆண்களும்கூட தங்கள் பெண்டு பிள்ளைகளை விட்டு உயிருக்கும் பயந்து ஓடிக்கொண்டிருக்கும் பகுதிக்கு இப்பெண் தனிமையாகச் சென்றாள் என்றால் அவளது துணிச்சலை என்னென்பது?

இந்தியாவினின்றும் பாகிஸ்தான் பிரிந்த தருணத்தில் வங்காளத்தில் நடைபெற்ற கோர சம்பவங்களை நேயர்கள் அறிவார்கள். அப்போது மனிதர்கள் அங்குப் பயங்கர மிருகமாயிருந்தார்கள். பயங்கரமான கலவரம்! கண்கொண்டு பார்க்கச் சகிக்க முடியாத சம்பவங்கள்! காதால் கேட்கக் கூசும் செய்திகள்! நினைத்துப் பார்க்க முடியாத வெட்ககேடு! இந்த நிலையில் அந்தக் கலவரப் பகுதிக்கு அமைதிப் பணி செய்யச் சென்றவள் ஒரு பெண்! ஆம், காந்தியடிகள் நவகாளிப் பகுதிக்குச் செல்லுமுன்னரே இவள் அங்கு சென்று, காந்தியடிகளுக்குச் செய்தி அனுப்பினவள்.

இவள் யார் என்று தெரிந்து கொள்ள ஆவல் ஏற்படுகிறது. சென்ற மாதம் உத்தர பிரதேச ராஜ்யத்தின் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள திருமதி சுசேதா கிருபளானிதான் அந்தப் பெண்! அன்று அக்கக் கலவரமிகக வங்காளப் பகுதிக்குள் அவள் குதித்த சமயம் அவளுக்கு வயது முப்பதி எட்டு! இன்று அவள் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது வயது ஐம்பத்து நான்கு!

துணிவும், தேசப் பற்றும், நேர்மையும் உள்ள இந்த அம்மையார் இந்தியாவின் முதல் பெண் முதன் மந்திரி என்ற புகழைப் பெற்றார். அதுவும் இந்தியாவிலுள்ள ராஜ்யங்களில் மிகப் பெரியதும், அரசியல் கட்சிப் பூசல்களும் கோஷ்டிக் குழப்பங்களும் நிறைந்த உத்தர பிரதேச ராஜ்யத்தின் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்! இவர் பெயரால் பெண்ணுலகம் தலைநிமிர்ந்து நிற்கலாம்.

இந்த அம்மையாருடைய கதை சோக சம்பவங்கள் நிறைந்த நாவலைப் போன்றது. இவருடைய பூர்வீகம் வங்காளம். இவர் பிறந்தது பஞ்சாப். இவர் வளர்ந்தது உத்தரப் பிரதேசம்.

பெரிய குடும்பம்

இந்த அம்மையாருடைய தாத்தா ஒரு சமூக சீர்திருத்தக்காரர். ஆகவே இவர் ராஜாராம் மோகன்ராய் என்பவரால் தொடங்கப்பெற்ற சமூக சீர்திருத்த இயக்கமான பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார். இதனால் தமது சுற்றத்தாரின் ஏளனத்திற்கும் இடைஞ்சல்களுக்கும் ஆளானார். ஆகவே இந்த "மடிசஞ்சி"களிடமிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழும் நிலையைத் தேடி அவர் பஞ்சாபுக்குச் சென்றார். இவ்வாறு இந்த அம்மையார் பூர்வீகக் குடும்பம் வங்காளி என்ற நிலை மாறி "பஞ்சாபி" என்ற பெயர் பெற்றது.

சுசேதா அம்மையார் பஞ்சாபிலுள்ள அம்பாலாவில் 1908-ம் ஆண்டு பிறந்தார். இதில் இன்னொரு சுவாரஸ்யமான நிலை என்ன தெரியுமா? இவருடைய தாத்தாவின் பூர்வீக கிராமமும் கிழக்கு பாகிஸ்தானத்தில் இருக்கிறது. இவர் பிறந்த சொந்த ஊரும் இப்பொழுது மேற்கு பாகிஸ்தானில் இருக்கிறது. உண்மையைக் கூறப் போனால் இவர் ஒரு அகதி! ஆகவே இவர் அகதிகள் பிரச்னையில ஆர்வமும் அக்கறையும் காட்டியதில் வியப்பிலலை. பாம்பின் கால் பாம்பறியும். அகதிகள் நிலையை அகதிகள்தான் அறிய முடியும்!

சுதந்திர வேட்கை

பிரம்ம சமாஜத்தின் வழிவந்த இக்குடும்பத்தில் இவர் மூத்தவர். இவரோடு சேர்த்து ஒன்பது குழந்தைகளைக்கொண்ட பெரிய குடும்பம். குடும்பத்தில் மூத்தவரானதால் இவருக்கு மேல் படிப்புக்குச் செல்லும் வசதிகள் இருந்தன. டில்லி சர்வகலாசாலையில் எம். ஏ. பட்டம் பெற்றார்.

குடும்பத்தின் மூத்த குழந்தைக்குச் சில விசேஷ சலுகைகள் கிடைப்பதைப் போன்று, எதிர்காலத்தில் அக் குழந்தைக்குக் குடும்பப் பொறுப்புகளும் விசேஷமாக இருக்கும். சுசேதாவுககு அந்த நிலை. சக்திக்கு மீறிய அளவில் பெரும் பாரமாகக் குடும்பப் பொறுப்பு இவர் தலையில் விழுந்தது. ஆம், இவருடைய கடைசிக் குட்டித் தம்பி ஒன்றரை வயதுகூட நிரம்பாத நிலையில் அடுக்கடுக்காக ஒன்பது சகோதர, சகோதரிகள் நிரம்பிய ஒரு பெரிய குடும்பத்தை அகதியாக விட்டுவிட்டு, இவருடைய தந்தை இம்மண்ணுலகை மறந்து விண்ணுலகு சென்றுவிட்டார். இருபது வயதுகூட நிரம்பாத சுசேதா தமது இளமைப் பருவத்திலேயே ஒரு பெரிய குடும்பத்தின் பொறுப்பேற்க விதி வகுத்திருந்தது!

பிரம்ம சமாஜ வழி வந்த இவருடைய தந்தை ஒரு பிரபல டாக்டர். நிறைய சம்பாதித்தார். நிறைய செலவு செய்தார். நிறைபப் பேர்களுக்கு உதவினார். ஆனால் அவர் இறக்கும் தறுவாயில் அவருடைய புகழைத் தவிர பொருள் ஏதும் வைத்

திருக்கவில்லை. இது சுசேதா குடும்ப பாரத்தை ஏற்ற சமயத்தில் இருந்த குடும்பப் பொருளாதார நிலை.

குடிபெயர்ந்தது

இந்தச் சமயத்தில் அவருக்கு காசி சர்வகலாசாலையில் ஆசிரியர் வேலை கிடைத்தது. ஆகவே குடும்பம் உத்தரப்பிரதேசத்திற்கு குடி பெயர்ந்தது குடும்பத்தில் உள்ள சகோதரர்களின் திருமணத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய நிலையிலுள்ள இவர் தமது திருமணத்தைப்பற்றிச் சிந்திக்க எங்கே சமயம் கிடைக்கப் போகிறது? அதிலும் சமூக சீர்திருத்தக்காரர் குடும்பப்பெண்களுக்கு அதுவும் அந்தக் காலத்தில் யார் பெண்கொள்ள முன் வருவார்? பொருளாதாரச் சிக்கல், சமுதாயச் சிக்கல் இத்தனைக்கும் மத்தியில் தமது சகோதரிகளின் திருமணங்களை நிறைவேற்ற அவர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. எல்லாவற்றையும் துணிச்சலோடு சமாளித்தார். இந்தத் துணிச்சல்தான் பின்னால் அவர் நவகாளிக்குள் குதிப்பதற்கும் துணிச்சலைத் தந்தது.

திருமணம்

தமது குடும்பத்தில் உள்ள இளைய சகோதரர்களைக் கரையேற்றி விட்ட பின்னர்தான், அவர் அப்போது காங்கிரஸ் மகா சபையின் காரிய தரிசியாக இருந்த ஆச்சாரிய கிருபளானியை மணந்தார். அதிலும் ஒரு துணிச்சல். அரசியல் புரட்சிக்காரரும், நிலையான வாழ்க்கை வசதி எதுவும் இல்லாதவரும், எந்த நிமிஷமும் சிறை செல்லவோ, தீவாந்தர தண்டனை பெறவோ, உயிரையும் துறக்கவோ தயாராய் இருந்த ஒரு "பயங்கரவாதி"யை சுசேதாவைத் தவிர வேறு யார்தாம் கணவராக ஏற்க முன்வருவார்? அப்பொழுது அவருக்கு வயது இருபத்தி ஒன்பது.

இவருடைய திருமண நிகழ்ச்சி ஒரு அற்புதமான தேசிய காட்சி! நேரு குடும்பத்தாரின் பூர்வீக வாசஸ்தலமும், பின்னர் பண்டித மோதிலால் நேருவால் காங்கிரஸ் மகாசபைக்குத் தானம் செய்யப்பட்டதுமான அலகாபாத்தி லுள்ள ஆனந்த பவனத்தில் இவர் திருமணம் நடைபெற்றது.

திருமண வைபவத்திற்கு நேரு தலைமை தாங்கவேண்டும் என்ற பிடிவாதம்! ஆனால் நேருஜி அப்போது சிறையில் அல்லவா இருக்கிறார்! பரவாயில்லை, நேருஜி சிறையிலிருந்து திரும்பும்வரை காத்திருக்கலாம்! இந்த ஆசை நிறைவேறியது. நேருஜி சிறையிலிருந்து விடுதலை பெற்று திரும்பிவந்த நாளை சுபதினமாகக் கொண்டு இத்திருமணம் நடைபெற்றது. தேசிய மண்டபமான ஆனந்த பவனத்தில் திருமணம் நடைபெற்றது. அன்று முதல் கிருபளானியுடன் சுசேதாவும் தேசத்தின் விடுதலை கோரும் புரட்சிக்காரராகி விட்டதில் வியப்பில்லை!

பயங்கரவாதி

இவர் சிறை சென்றார். 'வெள்ளையனே வெளியேறு' என்ற இறுதிப் போராட்ட காலத்தில் தலைமறைவாக இருந்து அரசாங்கத்தின் "பயங்கரவாதி" கள் ஜாபிதாவில் இடம் பெற்றார். நாடு சுதந்திரம் பெற்றபின்னரும் பயங்கரமான கலகப் பிரதேசத்திலும் அதை அடுத்து தொல்லை மிக்க அகதிகள் பிரச்னையிலும் பணி புரிந்தார். தொடர்ந்து காங்கிரசின் அகதிகள் நிவாரணப் பகுதிக்குத் தலைமை தாங்கினார். இதனைப் பாராட்டும்பொருட்டு அவர் காங்கிரஸ் காரியக் கமிட்டியில் இடம்பெற்றார்.

பின்னர் அவர் 1946-ம் ஆண்டு அரசியல் நிர்ணய சபை அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கால முதல் தொடர்ந்து 1952-ம் ஆண்டிலும், 1957-ம் ஆண்டிலும் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். 1960-ம் ஆண்டில் உத்தரப் பிரதேச மந்திரிசபையில் அவர் இடம் பெறும் வரை அவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தார். இன்று அவர் தமது ஐம்பத்து நான்காவது வயதில் அந்த ராஜ்யத்தில் முதன் மந்திரியாயிருக்கிறார்.

நெருங்கிய உறவு

அவர் முதன் மந்திரியானதும் ஆற்றிய முதல் பிரசங்கத்தில் கூறும்போது "நான் நேருஜிக்கு வேண்டாதவளல்ல. அதை நான் தெளிவுபடுத்திவிட விரும்புகிறேன். வேறு எவரையும்விட என் கணவருக்கும்கூட, நேருஜியிடம் உள்ள மதிப்பு குறைந்ததல்ல என்பது எல்லோருக்கும் தெரியும். நேருஜிக்கும் எனக்கும் உள்ள உறவு முறை நீண்ட காலத்தியது; நெருக்கமானது. அந்த உறவு முறை அன்றுபோல் இன்றும் இருந்து வருகிறது. காங்கிரஸ் லட்சியத்திற்காகவும், ஜனநாயக சோஷலிசத்தை உருவாக்குவதற்கும் எல்லோருடைய ஆதரவையும் நாடுகிறேன்" என்று கூறி கரகோஷத்தைப் பெற்றார். இந்த முதல் கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் யார் தெரியுமா? தலைநிமிர்ந்து பாருங்கள். தமிழ் நாட்டைச் சேர்ந்த திரு. காமராஜ் அவர்கள்.

—"கிராம ராஜ்யம்"

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு டெக்ஸாஸ் மாநிலத்தில் ஹூஸ்டனில் இரண்டாண்டு பள்ளி ஆசிரியராக இருந்தார்.

1941-ல் பேர்ல் துறைமுகம் தாக்கப்பட்டபோது, யு எஸ். கடற்படையில் ஒரு அதிகாரியாக ஜான்ஸன் எடுத்துக் கொள்ளப்பட்டார். பசிபிக் போர் முகப்பில் 8 மாதம் அவர் பணியாற்றினார் அதாவது ஜனாதிபதி ரூஸ்வெல்ட், சட்ட மன்ற உறுப்பினர்கள் ஆயுதப் படையில் சேரக்கூடாது என்று தடைவிதித்தது வரைசேவை செய்தார்.

—அமெரிக்கன் ரிபோர்ட்டர்

செய்திக் கொத்து

ஆரம்ப ஆசிரியர் பயிற்சி நாடு முழுவதும் ஒரே சீராக இருக்கச் சிபார்சு

———

புதுடில்லி அக். 11—நாடு முழுவதற்கும் ஒரே சீரான ஆரம்ப ஆசிரியர் பயிற்சிக் கல்வி இருக்க வேண்டுமென இங்கு ஆறு நாட்களாக நடந்த ஆரம்ப ஆசிரியர் தேசியக் கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது.

ஒவ்வொரு மாநிலத்தின் தனித் தனி வளர்ச்சிக்குரிய திட்டங்களைத் தீட்டுவதென்றும் பின்னர் அவற்றை இணைத்து அகில இந்தியத் திட்டமாக்குவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விரிவான இடம் இதற்கென ஒதுக்கப்பட முயற்சி செய்ய வேண்டும் என்றும் ஆனால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடைசி இரண்டாண்டுகளில் முன்னோடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேவையான அதிகப்படி ஆசிரியர்களுக்குத் தக்கபடி ஆசிரியர்களை ஒவ்வொரு மாநிலமும் தயார் செய்ய வேண்டும் என்று மாநாடு கருத்து தெரிவித்தது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளின் தரம் உயர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது.

பயிற்சி பெறாத ஆசிரியர்களை ஒட்டிய சிக்கல்களைத் தீர்க்க ஆரம்ப ஆசிரியர்களின் பயிற்சியைப் பற்றி ஆராய்ந்த குழுவின் பரிந்துரைகளின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருத்தரங்கு கருதியது.

கடைசி நாள் கூட்டத்தில் கலந்து கொண்ட மத்திய கல்வித் துறைத் துணை அமைச்சர் திருமதி சௌந்திரம் ராமச்சந்திரன் ஆசிரியர்கள் கிராமத் தலைவர்களாக இருக்க வேண்டும் என்றும் அவர்களுக்கு எல்லா வசதிகளும் செய்து தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

செகண்டரி கல்வி போர்டு மாற்றியமைக்கப்பட்டது

———

புதிய உறுப்பினர்கள் விபரம்

———

சென்னை, செப்டம்பர் 19.—தமிழக செகண்டரிக் கல்வி போர்டு ஆகஸ்டு 1-ந் தேதி முதல் 2 ஆண்டுகளுக்குப் பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. இதில் 16 மெம்பர்கள் இருப்பர். கல்வி டைரக்டர் இதன் தலைவர்.

உத்தியோக பூர்வ மெம்பர்கள் பின்வருமாறு: (எக்ஸ் அபிஷியோ) சர்க்கார் பரீட்சை டெபுடி டைரக்டர் உபதலைவர், செகண்டரி கல்வி டெபுடி டைரக்டர், சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரி பிரின்ஸ்பால், கோயமுத்

தூர் மணி ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு சின்னசாமி நாயுடு, சென்னை ராணி மேரி கல்லூரி பிரின்சிபால் குமாரி ஏ. ஆர். ஐராவதி, தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரி பிரின்சிபால் திரு. ஏ. சீனிவாச ராகவன், சென்னை சிந்தாதிரிப்பேட்டை கல்யாணம் பெண்கள் ஹைஸ்கூல் தலைமையாசிரியை குமாரி பி. ஹேமாவதி, மதுரை கல்லூரி பிரின்சிபால் திரு டி. தோதாத்ரி அய்யங்கார், சென்னை தி. நகர் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு. டி. என். சுந்தரம்; சென்னை சர்வகலாசாலை பிரதிநிதிகள், அண்ணாமலை சர்வ கலாசாலை டீன் திரு. ஆர். ராமானுஜாச்சாரி, அண்ணாமலை சர்வகலாசாலை பிரதிநிதி.

நியமன மெம்பர்கள்: நாகர்கோவில் கோட்டார்கார்மல்லிகை ஹைஸ்கூல் பூஜ்யர் மச்சாடோ, கிடப்பூர் நஞ்சப்பா ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் திரு. ஆர். ஜி. சுப்பிரமணியம், திரு. கே. வெங்கட சுப்பிரமணியம் தென் இந்திய கிறிஸ்தவ கல்வி கவுன்சில் கௌரவ காரியதரிசி திரு. கனகராஜ் எரியாஸ், தொழில் கல்வி டைரக்டர், மதுரை பள்ளிக்கூட டிவிஷனல் இன்ஸ்பெக்டர், சென்னை ஆழ்வார்பேட்டை திருமதி பஷீர் அகமது சையது, நாமக்கல் செட்டி பட்டி ஒப்புபெற்ற தலைமை ஆசிரியர் திரு. ஆர். கிருஷ்ண பண்டாரம்.

யார்க்கார் பரீட்சைகள் கமிஷனர் காரியதரிசி போர்டின் காரியதரிசியாகவும் இருப்பார்

கோடீஸ்வரரான ஆபீஸ் பையன்

லண்டன், அக்டோபர்.—70 ஆண்டுகளுக்கு முன்னர் வில்பி ஸ்டீபன்சன் தனது 13-வது வயதில் வாரத்துக்கு ரூ. 3 சம்பளத்தில் ஆபீஸ் பையனாக வேலை செய்ய ஆரம்பித்தார்.

சில மாதங்களுக்கு முன்னர் அவர் இறந்தபோது கோடீஸ்வரராக இருந்தார். அவரது உயில் இப்போது வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி அவர் விட்டுச் சென்றுள்ள சொத்தின் மதிப்பு ரூ. 13 கோடியே 96 லட்சமாகும். இதில் சுமார் ரூ. 9 கோடி வரி போக மிஞ்சுவது ரூ. 4 கோடியே 86 லட்சமாகும்.

பரம ஏழையாக இருந்த ஸ்டீபன்சன் பர்மிங்ஹாம் பால் பண்ணையில்தான் வேலை செய்ய ஆரம்பித்தார். பின்னர் அவர் அமெரிக்காவில் பல கடைகளை நடத்தி வந்தவரான எப். டபிள்யூ உல்வொர்த்தைச் சந்தித்தார். பிரிட்டனில் தான் ஆரம்பிக்கும் முதல் கடையில் கூட்டு சேர ஸ்டீபன்சனை உல்வொர்த் அழைத்தார். அதற்கு அவர் இணங்கினார். பின்னர் படிப்படியாக முன்னேறி 1922-ல் உல்வொர்த்தின் பிரிட்டிஷ் கிளைகளின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1940ல்—இவர் சில காலம் வியாபாரத்திலிருந்து விலகி பீவர் புரூக்கின் விமான உற்பத்தி இலாகாவில் ஒரு பிரிவில் டைரக்டர் ஜெனரலாகப் பணியாற்றினர். 1943—ல் அவர் ஓய்வு பெற்றார்.

100 கோடி காலன் ஐஸ்கிரீம்!

நியூயார்க், அக். 3—போன ஆண்டில் அமெரிக்கர்கள், 100 கோடி காலன் ஐஸ்கிரீம் உட்கொண்டுள்ளனர். இது சராசரியாக ஆளுக்கு ஐந்தரை காலனாக ஆகிறது.

ஒன்றாகத் திரட்டினால் மலை போலக் குவியக் கூடிய இந்த ஐஸ்கிரீமைத் தயாரிக்க 9,92,000 பசுக்களின் பால் பயன் படுத்தப் பட்டது.

கோகினூர் இனத்தைச் சேர்ந்த உலகப்பிரசித்தி பெற்ற வைரம்

ரூ. 4 லட்சத்திற்கு ஏல விற்பனை

போபால், அக். 4— பன்னு வைரச் சுரங்கத்தில் கிடைத்த அபூர்வ வைரமான "விஜயா" நேற்று ஏலத்தில் ரூ. 4,12,132,5 ந. பை. க்கு விற்கப்பட்டது.

இது 44,45, காரட் உள்ளது. பம்பாயில் உள்ள இந்திய வைர ஏற்றுமதி கார்ப்பொரேஷன் இந்த வைரத்தை ஏலத்தில் எடுத்தது. உலகப் பிரசித்தி பெற்ற உயர்ந்த வைரங்களான கோகினூர் ரீஜண்ட் இனத்தைச் சேர்ந்தது இந்த விஜயா வைரம்.

இது காரட் ஒன்றுக்கு ரூ. 9251 விதம் வாங்கப்பட்டது. இந்த ஏலத்தை நடத்திய மத்திய பிரதேச அரசாங்கத்துக்கு இந்த விற்பனையில் 20 சதவிகிதம் ராயல்படியாக ரூ. 82826·4 கிடைக்கும். பாக்கிப் பணம் இந்த வைரத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் விஜயதசமி நாளில் எடுத்த வைர சுரங்கத் தொழிலாளியான முகம்மது ரசூல் என்பவருக்குத் தரப்படும். 25 வயதான ரசூலின் குடும்பத்தார் வைரங்கள் கண்டுபிடித்து எடுக்கும் தொழிலில் பரம்பரையாக ஈடுபட்டிருப்பவர்கள். வைர சுரங்கமுள்ள பன்னு வட்டாரக் கிராமத்தில் வசிப்பவர்கள்.

இந்த அபூர்வ வைரத்தை வாங்கிப் பொருட்காட்சியில் வைக்க மத்திய அரசும், மத்திய பிரதேச அரசும் யோசித்துக் கொண்டிருந்ததால் 2 ஆண்டாக இதன் விற்பனை தாமதப்பட்டது. அரசினர் இந்த யோசனையைக் கைவிட்டதால் இப்போது ஏலத்தில் விற்கப்பட்டது.

அதிகம் நடப்பவர்களுக்குத் தங்கப் பாதுகை பரிசு

பிராங்பர்ட், செப். 29—ஒரு வருடத்தில் 300 மணி நேரம் நடந்தவர்களுக்குத் தங்கத்திலான ஒரு சிறு பாதுகை பரிசாகத்தரப்படும். 200 மணி நேரம்

நடந்தவர்களுக்கு வெள்ளியால் ஆன சிறு பாதுகையும் 100மணி நேரம் நடந்தவர்களுக்கு வெண்கலத்தினால் ஆன சிறு பாதுகையும் பரிசளிக்கப்படும். ஜெர்மன் ஒலிம்பிக் சொசைட்டியின் தலைவர் ஜார்ஜ்லான் ஒபல் இம்மாதிரி பரிசுத்திட்டம் ஒன்றை ஏற்படுத்தி யிருக்கிறார்.

இத்திட்டம் பற்றி அறிய விரும்புபவர்களுக்கு அவர் ஆரம்பித்துள்ள ஸ்தாபனம் இலவசமாக ஒரு தகவல் புத்தகத்தை அனுப்பிவருகிறது. இதுவரை 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட மேற்கு ஜெர்மனியர்கள் இப்புத்தகத்தைப் பெற்று இயக்கத்தை மேற்கொண்டு வெண்கலப் பாதுகையைப் பரிசைப்பெற்றிருக்கின்றனர். பிராங்க்பர்ட்டில் வசிக்கும் ஒரு மாது 206 மணி நேரம் நடந்து வெள்ளிப் பாதுகைப் பரிசைச் சமீபத்தில் பெற்றிருக்கிறார். தங்கப் பாதுகைப் பரிசைப் பெறவும் அவர் முயன்று வருகிறார்.

நடப்பதினால் உடலுக்கு நலன் என்பதை வற்புறுத்தவே இத்திட்டம். அதிகமாக உடற்பயிற்சி செய்ய முடியாதவர்களுக்கு நடப்பதே ஒரு சிறந்த உடல் பயிற்சியாகும். மோட்டாரிலேயே பிரயாணம் செய்வதால் இருதய சம்பந்தமான வியாதிகள் ஏற்படுவதாக டாக்டர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். மேற்கு ஜெர்மனியில் ஏற்படும் மரணங்களில் 48 சதவிகிதம் உடற்பயிற்சி இல்லாத காரணத்தினால் ஏற்படும் நோய்களாலேயே ஏற்படுகின்றன.

ஊசிக் குத்தினால் கிடைத்த அதிர்ஷ்டம்

லண்டன், அக். 13—ஒரு செப்புக்காசுகூடச் செலவில்லாமல் இங்குள்ள செல்சீ என்னும் பகுதியிலிருந்து ஒரு குடும்பம் அமெரிக்காவில் விடுமுறையைக் கழிக்கச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்தோணி பிரெடரிக்ஸ், அவர் மனைவி, 18 வயதான ஒரு மகள், 10 வயதான ஒரு மகன் ஆகிய நால்வரும் இவ்வாறு, 'ஓசியில்' அமெரிக்கப் பயணம் செய்ய நேர்ந்தது மிக வேடிக்கையானதாகும்.

"சரியான பிரிட்டிஷ் குடும்பம்" என்று அமெரிக்கப் பயணத்துறை இவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. இக்குடும்பத்தை மிக எளிதில் தேர்ந்தெடுத்தார்கள். அதுதான் இதில் வேடிக்கை.

மேற்படி துறையைச் சேர்ந்த டைப்பிஸ்ட் ஒருத்தி லண்டன் நகரத் தொலைபேசிப் பட்டியல் ஏட்டைத் திறந்து வைத்துக் கொண்டாள். கையில் ஒரு குண்டூசியை எடுத்துக் கண்ணை மூடிக்கொண்டு அதில் குத்தினாள். மேற்கூறிய பிரெடரிக்கின் பெயரில் ஊசி குத்தியின்றது

இக் குடும்பம் அமெரிக்காவில் எல்லா மாநிலங்களிலுமுள்ள

22 முக்கிய நகரங்களுக்குச் செல்லும். ஒரு வேளை அவர்கள் அதிபர் ஜான்சனை சந்திக்கலாம்.

இலையுதிர் காலத்தில் ஐரோப்பாவுக்கும பிரிட்டனுக்குமிடையே பயணம் செய்வதற்குக் கட்டணங்கள் குறைவு. எனவே அந்தக்காலத்தில அமெரிக்காவிற்குப்பயணிகள் வருவதை அதிகரிக்கச் செய்யவே இந்த "விடுமுறைப் பரிசு" அளிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் ஒரு மதராஸ்

மதராஸ் (ஆரிகான்), அக். 14- மதராஸ் அமெரிக்காவின் வடமேற்குக் கோடியில், ஆரிகான் மாநிலத்தில் இருக்கும் ஒரு சிற்றூர். இதில் 1700 பேர் வசிக்கின்றனர். இச்சிற்றூரின் பெயர் தாங்கியதும், இதை விடப் பிரபலமானதும், மிகப் பெரியதுமான தென் இந்திய நகரில் இருந்து இந்த ஊருக்கு வந்திருந்தவரை இவ்வூர்வாசிகள் சென்ற செவ்வாய்க்கிழமை அன்று விடை கொடுத்து வழியனுப்பி வைத்தனர்.

தென் இந்திய மதராஸிலிருந்து (சென்னை) வந்திருந்தவர் திருமதி. அம்மு சுவாமிநாதன். இவர் அகில இந்திய பாரத சாரணர் சாரணியர் படையின் தலைவர். இங்கு அவர் நான்கு நாட்கள் தங்கியிருந்து பண்ணைப் பிரதேசங்களையும் அமெரிக்க இந்தியர் குடியிருக்கும் ரிசர்வ் பிரதேசங்களையும் பார்வையிட்டார். இந்த ரிசர்வ் பிரதேசம் அந்த மக்களுக்குப் பொழுது போக்கு இடமாகி அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. அவர் ரவுண்ட்பட்டெ அணைக்கட்டையும் பார்வையிட்டார். மதராஸிலிருந்து ஏழு மைலுக்கப்பால் ஒரு ஆற்றில் இது கட்டப்படுகிறது.

ஒரு கடையில் சென்னை துணியொன்றை சமூகத் தலைவர்கள் கண்டனர். இந்தியாவிலிருந்து வந்த துணியும் அதன் பெயரும் அவர்களுக்குப் பிடித்துப் போயின. தங்களுடைய புதிய தபால் நிலையத்திற்கு "மதராஸ்" என்று பெயர் வைக்கும்படி அவர்கள் கோரினர். வாஷிங்டன் அதிகாரிகளும் இணங்கினர். புதிய குடியேற்றப் பிரதேசத்திற்கு இந்தப் பெயர் கிடைத்தது.

மதராஸ் மத்திய ஆரிகானில் காஸ்கேட் மலைச்சரிவுகளுக்கு கிழக்கே இருக்கிறது. ஜெபர்ஸன் கவுண்டியின் தலைமை நகரம் தான் இந்த மதராஸ்.

உலக மக்கள் தொகை 307 கோடி!

உலகிலேயே மிகப் பெரிய நகரங்களில் 5-வது பம்பாய்

ஐ. நா. நிறுவனம் தரும் சுவையான விவரங்கள்

உலக ஜனத்தொகை பற்றி ஆராய்ச்சி நடத்த 1962-ம் வருடம் சம்பந்தமாக ஐ. நா. ஸ்தாபனம் தயாரித்துள்ள தகவல் நூல் இப்போது வெளியாகியுள்ளது பல்வேறு நாடுகளில் காணப்படும் ஜனவளப் போக்குகள் பற்றிய சுவாரஸ்யமான தகவல்கள் இதில் அடங்கியுள்ளன.

26 நாடுகளில் தற்போதுள்ள பெண் குழந்தைகள் 70 வயது வரை ஜீவித்திருக்கக் கூடியவையாம். ஆனால் 5 நாடுகளில்தான் ஆண் குழந்தைகள் இந்த ஆயுட்காலத்தை எட்டும் என்று எதிர்பார்க்கலாம்.

பிரான்ஸ், ஹாலந்து, நார்வே, ஆகிய நாடுகளில் பிறக்கும் பெண் குழந்தைகள் 75 வயது வரை கூட ஜீவித்திருக்கக்கூடியவையாம். வேறெந்த நாட்டிலும் ஆயுட்காலம் அவ்வளவு அதிகம் இல்லை.

ஹாலந்து, நார்வே, ஸ்வீடன் ஆகிய நாடுகளில் அதிகபட்சமாகப் போனால் ஆண் குழந்தைகள் 71 வயதுக்குச் சற்றே அதிகமாக ஜீவித்திருக்கக்கூடும். இஸ்ரேலிலும் 70 வயதுக்கு சற்று அதிகமாக ஜீவித்திருக்கக்கூடும்.

உலகிலேயே ஜனன விகிதம் மிக அதிகமாயுள்ள நாடு ஐவரி கோஸ்ட் தான் (ஆப்பிரிக்காவிலிருப்பது) மிகக் குறைவாயுள்ள நாடு ஸ்வீடன்தான். பிராந்திய அடிப்படையில் மரண விகிதம் மிகக் குறைவாய் இருப்பது ரஷ்யாவில்தான்.

அட்லாண்டிக் சமுத்திரத்தின் தென் பகுதியுள்ள டாக்லண்ட் என்ற தீவில் திருமண விகிதம் உலகிலேயேமிக அதிகம். 1961-ம் வருட ஜனத்தொகையில் 1000க்கு 13 சதவிகிதம் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஜனத்தொகை அடிப்படையில் பார்த்தால் டோக்கியோதான் மிக பெரிய நகரம். அதற்கு அடுத்தது நியூயார்க். லண்டன் 11-வது நகரமாகும்.

லண்டன் நகரின் ஜனத்தொகை 31,95,114.

உலகிலேயே மிகப்பெரிய 10 நகரங்களும், அவற்றின் ஜனத்தொகையும், வருமாறு:—

டோக்கியோ	83,10,026
நியூயார்க்	77,81,984
ஷாங்காய்	69,90,000
மாஸ்கோ	62,62,000
பம்பாய்	43,06,404
பீகிங்	46,01,000
சிகாகோ	35,50,401
கெய்ரோ	34,70,000
ரியோடி ஜனிரோ	32,23,408
டீன்ட்ஸின்	32,20,000

(54-ம் பக்கம் பார்க்க)

Edited Printed and Published by P. VEERARAGHAVAN
at Venkatesan Press, 2/65, Broadway, Madras-1.

For Elementary and High Schools

SOCIAL RECORD BOOKS

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர் : **ஆர். சேஷாத்திரி,** B.A.,B.T.
(இராமகிருஷ்ண மிஷன் உயர்நிலைப்பள்ளி, தியாகராய நகர்.)

நான்காம் வகுப்பு

மாவட்டங்கள்

சென்னை		0·75 ந. பை.
செங்கற்பட்டு		0·75 ந. பை.
வட ஆற்காடு		0·75 ந. பை.
தென் ஆற்காடு		0·75 ந. பை.
சேலம்		0·75 ந. பை.
கோயம்புத்தூர்		0·75 ந. பை.
நீலகிரி		0·75 ந. பை.
திருச்சிராப்பள்ளி		0·75 ந. பை.
தஞ்சாவூர்		0·75 ந. பை.
மதுரை		0·75 ந. பை.
இராமநாதபுரம்		0·75 ந. பை.
திருநெல்வேலி		0·75 ந. பை.
கன்னியாகுமரி		0·75 ந. பை.
ஐந்தாம் வகுப்பு		0·94 ந. பை.
ஆறும் வகுப்பு		0·87 ந. பை.
ஏழாம் வகுப்பு		0·75 ந. பை.
எட்டாம் வகுப்பு	ரூ.	1·00 ந. பை.
ஒன்பதாம் வகுப்பு	ரூ.	1·25 ந. பை.
பத்தாம் வகுப்பு	ரூ.	1·25 ந. பை.
பதினோராம் வகுப்பு (S. S. L. C.)	ரூ.	1·50 ந. பை.

நூல் நிலையங்களுக்கான

எங்கள் வெளியீடுகள்

நாடகங்கள்

தாமரைக் கண்ணன் ரூ.

அலெக்ஸாண்டர்	1·50
கிள்ளி வளவன்	1·25
வெண்ணிலா	1·50
மருது பாண்டியர்	2·00

வரலாறு

வை. சுப்பிரமணியன்

வீரபாண்டிய கட்டபொம்மன்	1·25
ராஜா தேசிங்கு	1·25

எஸ். எஸ். அருணகிரிநாதர்

பச்சையப்ப முதலியார்	1·25
சர். தி. முத்துசாமி ஐயர்	1·25

தாமரைக் கண்ணன்

திருநாவுக்கரசர்	1·25

நெ. சி. தெய்வசிகாமணி

ஜெகதீஸ் சந்திரபோஸ்	1·25

கதைகள்

எஸ். எஸ். அருணகிரிநாதர்

நல்ல நல்ல கதைகள்	2·75

வே. கபிலன்

நிறைவு எங்கே ?	3·50

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

("ஆரம்பக்கல்வி" ஆபீஸ்)

94-95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை-1.

Venkatesan Press, Madras-1.